காவேரி

RUARY 1943

திரபானு மாசி

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
20 FEB 1943
MADRAS

5 ANNAS

EAD The Cauveri -
IDEAL MAGAZINE FOR THE HOME

Always Remember



"KITTAPPA" MARK

SIVAPURI TOBACCO
&
NUT-SLICES.

BEST IN THE MARKET :: ::
:: :: UNRIVALLED IN QUALITY

SOLD EVERYWHERE.

Manufacturers:

A. D. SULTAN & Co.,

Branch:] **KUMBAKONAM.** [MADRAS.

1778

இந்தியக் கைத்தொழிலை :: ::

:: :: நீங்கள் ஆதரியுங்கள்

குழந்தைகள் இருக்கும் வீட்டிற்கு நீங்கள் வெறுங்கையுடன் போக மாட்டீர்கள். கைக்கு எளிதாய் உங்கள் பணப்பைக்கும் எளிதாய் **வி. எஸ். & சன்ஸ்** பெப்பர்மெண்ட் ஒரு டின் வாங்கிக்கொண்டு போங்கள். **வி. எஸ். & சன்ஸ்** பெப்பர்மெண்டையே குழந்தைகள் விரும்பி தின்னும். அக்குழந்தைகளின் மென்மொழிகளில் இப் பெப்பர்மெண்டின் இனிமையை நீங்களே கண்டு ஆனந்தப்படுவீர்கள். உயர்ந்த முறையில் கைதேர்ந்த வேலைக்காரர்களால் சுகாதார முறைப்படி தயாரிக்கப் பட்டவை.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
20 FEB 1943
MADRAS

ஒரு தடவை வாங்கிப்பாருங்கள்.

தென் இந்தியா கன்பெக்ஷனரி தொழிற்சாலை

புரோப்ரைட்டர்கள்:- **வி. எஸ். & சன்ஸ்,**

கும்பகோணம்.

The Southern India Confectionery Factory.

Proprietors:- **V. S. & SONS,**

KUMBAKONAM.

புதிய கம்பெனியின் தோற்றத்தை எதிர்பாருங்கள்!

மனிதவாழ்விற்குத் தேவையாயுள்ள
மளிகை, (உணவுப்பொருள்கள்) முதலிய
எல்லாப் பொருள்களும் சப்ளை செய்யப்படும்.

உங்கள் வீட்டு வாசலில் சாமான் டெலிவரி
அதற்காகத் தொகை யாதொன்றும் கிடையாது.

இன்னும் பலவித நூதன திட்டங்கள்.

பொதுஜன சேவையும், மிதலாபமும், உங்கள் ஆதரவுமே
நாங்கள் கோருபவை.

அபாரமான புகழும், வெற்றியும் கம்பெனி
அடைவது நிச்சயம்.

விபரங்களுக்கு எழுதுங்கள்.

சோழா ட்ரேட்ஸ் லிமிடெட்,

பெரிய தெரு, :: கும்பகோணம்.



பொருளடக்கம்

சித்திரபானு
மலர் 2

மாசி
இதழ் 7

பொறுப்பாளி யார்?	—	....	7
கதம்பம்	—	...	10
அம்மாஞ்சியின் அபிப்பிராயங்கள்	—	'ராமய்யா'	11
சுயம்வரம்	—	எம். எஸ் கமலா	16
ரகுவின் ஐயம்	—	கே. சு.	25
தேவன்	—	கௌரி	34
சகுந்தலையின் சுயம்வரம்	—	பூவாளூர் சுந்தரராமன்	39
பொருமைக் கண்கள்	—	எல். வி. எஸ். மணியன்	45
இதயம் அறியா உலகம்	—	கே. சுந்தரம்மாள்	52
ஒரு நந்தவனத்திலே	—	'சித்ரா'	60

குறிப்பு:- காவேரியில் வெளியாகும் கட்டுரைகளிலுள்ள பெயர்கள் கற்பனைப் பெயர்கள். அவைகளில் அடங்கிய அபிப்பிராயங்களும் அவற்றை எழுதியவர்களுடையனவே. அவைகளுக்குப் பத்திரிகாசிரியர் பொறுப்பாளியல்ல.



கொலம்பியா ரிகார்டுகளில்

மனோன்மணி

டாக்கி பாட்டுகள்

T.R. ராஜகுமாரி பாடியது

GE.6052 — ஆனந்தமே / மன்னன் இவராரோ

காளி N. ரத்னம்
C.T. ராஜகாந்தம் பாடிய

GE.6053 — கண்டது முதல் / ஜோரான டில்லி

லலிதா
வெங்கட்ராமன்
பாடிய



GE.6059
வேணுகூவுது
மயிலே

ஜீவன் நாடக்

கன்னட பாட்டுகள்

G.H. வீரண்ணா
B. ஜயம்மா
S.V. வெங்கட்ராம்
மோஹனகுமாரி
முதலியோர் பாடியது
GE. 6060 TO 6064

ஸரஸ்வதி ஸ்டோர்ஸ், மதராஸ்.

காவேரி

சித்திரபானு மலர் 2 | "சென்றிடுவீர் எட்டுத்திக்கும்—கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்."—பாரதியார் | மாசி இதழ் 7

பொறுப்பாளி யார்?

மகாத்மா காந்தி உண்ணாவிரதம் ஆரம்பித்துவிட்டார்.

மாட்சிமை தங்கிய வைசிராய்க்கும் மகாத்மாஜிக்கும் நீண்ட கடிதப் போக்குவரத்து ஏற்பட்டு, அதன் பிறகுதான் இந்த உண்ணா விரதத்தை ஆரம்பித்துள்ளார் மகாத்மா.

பழுத்த கிழம். இந்தியாவின் ஒப்பற்ற பொக்கிஷம் சிறையில் வாடி வதங்கும் தருணத்தில் உண்ணா விரதம். பொதுமக்களின் கவலை அளவிட முடியாமலிருக்கிறது. இந்தியா கவர்மெண்டார் விடுத்த அறிக்கையில் இதனால் ஏற்படும் பாதகத்திற்குத் தாங்கள் பொறுப்பாளியல்லர் என்று கூறியிருக்கிறார்கள். யாதொரு நிபந்தனையுமின்றி மகாத்மாவை உடனே விடுவிக்காதவரையில் கவர்மெண்டாரின் பொறுப்பு எப்படி நீங்கும்? உடல் நலத்திற்காகவோ, மோக்ஷ சாதனத்திற்காகவோ இன்று மகாத்மா உண்ணா விரதம் இருக்கவில்லை. காங்கிரஸ் தலைவர்கள் மீதும், தம் மீதும் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளைத் தகுந்த சாட்சியங்களுடன் ருஜுப்பிக்கவேண்டும்; அல்லது, நாட்டில் ஏற்பட்ட கலவரங்களெல்லாம், காங்கிரஸ் ஆகஸ்டு தீர்மானத்தினால் ஏற்பட்ட விளைவுதான் அரசாங்கத்தார் காரணமின்றித் தலைவர்களைச் சிறையிலடைத்து மக்களுக்குக் கோபம் மூட்டியதனாலல்ல என்பதைத் தாம் உணரும்படியாகவாவது எடுத்துக்காட்ட வேண்டும். அப்படி ஏதேனும் தாம் செய்தது தவறு என்று ஏற்பட்டால் அதற்கு எத்தகைய பிராயச்சித்தமும் தான் செய்யத் தயார் என்று ஒரு சவால் விடுத்தார் வைசிராய் பிரபு அவர்களுக்கு.

இப்பொழுது மகாத்மாஜி திடீரென்று இதை எழுதக் காரணமென்ன? அவர் மனம் நொந்து போய்விட்டது. தாம் ஹிம்ஸா முறையை மக்கள் கையாளும்படி ஏவினதாகக் கூறப்பட்ட குற்றச்சாட்டை அவரால் பொறுக்க முடியவில்லை. நிரபராதிகளான காங்கிரஸ் தலைவர்களைச் சிறையிலடைத்து அவர்கள் பதிலளிக்க முடியாமலிருக்கும் தருணத்தில் அவர்கள்மீது குற்றஞ்சாட்டி உலகத்தவர்களிடையே பிரசாரம் செய்து வருவதை அவரால் பார்த்துக்கொண்டிருக்க முடியவில்லை. நாட்டில் உணவுப் பஞ்சம் தலைதூக்கி மக்கள் அவதிப்படும் காட்சியை அவரால் பொறுக்க முடியவில்லை. "இந்த இரண்டுங்கெட்டானான அரசியல் நிலைமையை எப்படியாவது தொலைத்தெறியவேண்டுமென மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன்" என்று எழுதியிருக்கிறார் வைசிராய்க்கு. மற்றொரு கடிதத்தில் சொல்லியிருக்கிறார்: "உண்மையான தேசிய அரசாங்கம் இன்று பதவி வகித்திருக்குமானால் பஞ்சத்தினால் கோடிக்கணக்கான மக்கள் இப்படி அவதிப்பட நேரிட்டிருக்காது."

இவைகளை எல்லாம் பார்த்தால் மகாத்மாவுக்கு நாட்டு நிலைமை மாறவேண்டுமென்ற அவா பூரணமாக இருக்கிறது என்று தெரிகிறது. புத்திசாலியான ராஜதந்திரியாக இருந்தால் இதைப்பயன்படுத்திக்கொண்டு உடனே தலைவர்களை விடுதலை செய்து நாட்டில்சமாதானத்தை

ஏற்படுத்திருயிக்கலாம். அல்லது வைசிராய் பிரபு மகாத்மாஜீயை நேரில் கண்டு பேசியிருந்தால் நிலைமை வேறாக மாறியிருக்கும். துரதிருஷ்டவசமாக அது நடைபெறவில்லை. தம் குற்றச்சாட்டை மறுபடியும் வைசிராய் கூறி மனமாற்றம் ஏற்பட்டு மன்னிப்புக் கேட்டுக்கொண்டால்தான் விடுதலை என்கிறார்.

இனி நீதி கிடைக்காது என்று கண்டு கொண்டார் மகாத்மா. ஈசனைத் துதித்து உண்ணாவிரதமிருப்பது என்று தீர்மானித்துவிட்டார். ஆகையால் மகாத்மாவின் உடல்நிலையில் ஏதேனும் குந்தகம் ஏற்பட்டால் இதற்கு முழுப் பொறுப்பாளி கவர்மெண்டார்தான் என்பதை எவரும் மறுதளிக்க முடியாது

பிரிட்டிஷ் பொதுமக்களாவது உடனே இதில் தலையிட்டு தலைவர்கள் அனைவரும் விடுதலை அடையும்படி செய்தால் யுத்தப் போக்குக்கு எவ்வளவோ சாதகமாயிருக்கும். இதை உடனே செய்வார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

அட்டைப்படம்.

படத்தில் காணப்படுவது மிகப் பெயர்பெற்ற கும்பகோணம் 'மகாமகக்குளம்'. இக்குளத்திலே மாசி மகத்தன்று லக்ஷக்கணக்கான ஜனங்கள் ஸ்நானம் செய்வது தொன்றுதொட்டுள்ள வழக்கம். ஆனால், இவ்வாண்டு அதிகாரிகளால் இதற்குத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே வரும் மகப் பெருநாளன்று இங்கே என்றும் கண்டிராத காட்சி காணப்படும். அப்புண்ணிய திருக்குளத்திலே யாரும் ஸ்நானம் செய்ய அநுமதிக்கப்படமாட்டார்கள்.

கவர்மெண்டாரின் அரிசி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டின் காரணமாக இன்று நெல் விலை சீர்குலைந்து கேட்பாரற்றுக் கிடக்கிறது. உணவுப்பொருள் உற்பத்திசெய்யும் காவேரி டெல்டா மிராசுதார்களுக்கு என்றுமில்லா நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது.

இதை நிவர்த்திக்கவும், மிராசுதாரர்களுக்கு இந்த நெருக்கடியான காலத்திலாவது ஒரு நிரந்தர நெல் விலையை நிர்ணயிக்கவேண்டுமென்று வற்புறுத்தவும்

தஞ்சை ஜில்லா மிராசுதார்கள் மஹாநாடு

நாளது 1943-௵ பிப்ரவரி-௴ 20உ சனிக்கிழமை காலை 9-மணிக்கு

கும்பகோணம் வாணி விலாஸ் தியேட்டரில் நடைபெறும்.

திவான்பகதூர் N. சுவாமிநாதய்யர் அவர்கள் (ரிடயர்ட் சீப் எஞ்சினியர்)
அவைத்தலைமை வகிப்பார்கள்.

ராவ்பகதூர் V. S. தியாகராஜ முதலியார் அவர்கள் (வடபாதிமங்கலம் எஸ்டேட் முதலாளி)
மஹாநாட்டைத் திறந்துவைப்பார்கள்.

மற்றும் தஞ்சை, திருச்சி ஜில்லாவிலுள்ள பிரபல மிராசுதார்கள் மஹாநாட்டில் கலந்துகொள்வார்கள்.

தாங்கள் வந்திருந்து மஹாநாட்டை நடத்திக்கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.



'நந்தனார்,' 'ரிஷ்ய சிருங்கர்' படங்களில் நடித்து, தனது இனிய பாடல், சிறந்த நடனம், உயரிய நடிப்பு முதலியவைகளால் ஜனங்களின் மனதைக் கவர்ந்த பிரபல தென்னிந்திய சினிமா நக்ஷத்திரம் ரஞ்சன் சொல்லுகிறார்:

"நான் எப்பொழுதும் நரஸுஸ் காபி, டீயையே உபயோகிக்கிறேன். ஏனெனில் அவைகள் மிகச் சிறந்தவை என்பது எனக்குத் தெரியும்."

Ranjan

புகழ்பெற்ற சினிமா நக்ஷத்திரங்கள் விரும்புவது

நரஸுஸ் டீ

M. N. K.—15 TM.

கதம்பம்

சாகஸ மங்கைகள்!

“கலியாணப் பித்துகொண்டு அலையும் காளையர்கள் தாங்கள் உத்தேசித்துள்ள மங்கையர்களின் அங்க அடையாளங்கள், பூர்வோத்தரங்கள் முதலியவற்றை விபரமாக சமீப ராணுவ அதிகாரிகளிடம் தெரிவித்துவிட்டு, உத்திரவு பெற்று பிறகு விவாஹ மஹோத்ஸவத்தை நடத்துங்கள்!”

அட இழவே! இதென்ன கூத்து! என்று சனாதனிகள் மலைக்கலாம், திகைக்கலாம்! சாஸ்திரம் போச்சு, சம்பிரதாயம் தொலைந்தது, கலி முத்திப்போச்சென ஓலமிடலாம். ஆனால் யுத்த சமயத்தில் கலியாணசம்பந்தமாக கவலையும் உண்டாகி விட்டது சர்க்காருக்கு.!

பர்மாவிலிருந்தும், மலேயாவிலிருந்தும், ஆயிரக்கணக்கான அழகிய மங்கைகள் அகதிகளாக இந்நாட்டில் புகுந்துவிட்டார்களாம். இந்த மங்கைகளில் பலர் எதிரியின் ஒற்றர்களாகவும் இருக்கலாம். இப்படிப்பட்ட மங்கைகளுக்கு ராணுவ சேவையில் ஈடுபட்ட ஆடவர்கள்மீது ‘கண்டதும் காதல்’ முறையில் காதல் கிளம்பிவிடுவது சகஜம். தங்களது சாகஸ முறைகளால் ஆடவர்களை வசப்படுத்தி கலியாணமும் செய்துகொண்டு விடுவார்கள். மனைவிகளான பிறகு புருஷர்களிடமிருந்து யுத்த ரகசியங்களை சுலபத்தில் தெரிந்துகொண்டு எதிரிகளுக்குத்தகவல் கொடுத்துவிடுவார்கள்.

சென்ற யுத்தத்தில் ஹூகேஸ் என்ற ஜர்மன் நாட்டியக்காரி பல பிரன்சு, பிரிட்டிஷ் ராணுவ அதிகாரிகளை மயக்கி வெகு ரகசியங்களைத் தெரிந்துகொண்டுவிட்டாள். உளவுகளை அறிந்து வர இருதாப்பினரும் நல்ல கட்டழகு வாய்ந்த மங்கைகளையே வேவுகாரர்களாக நியமிப்பது வழக்கம்.

ஜப்பானியர்களோ மாயாவிகள்! பழி பாவம் மோசடி செய்தல் இவைகளுக்கு அஞ்சாதவர்கள்!

இவைகள் எல்லாவற்றையும் உத்தேசித்துத்தான் ராணுவ சேவையில் ஈடுபட்டவர்களுக்கு மேலே கண்டபடி நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.

மற்றவர்கள் அஞ்சவேண்டாமென அபயம் கூறுகிறோம்!

நியூ பனாரிஸ் ஹால்,

பெரியதெரு, கும்பகோணம்.

எல்லோருடைய நம்பிக்கைக்கும் பாத்திரமான ஜவுளிக்கடை

நாகரீகமானதும், உத்தரவாதமுள்ளதுமான
எல்லாவித ஜவுளி தினுசுகளும் ஏராளமாய்
ஸ்டாக் செய்யப்பட்டிருக்கிறது.

விலை நயம்.

ஒரு முறை விஜயம் செய்தால் உண்மை விளங்கும்.

Proprietors:

C. பழனியப்ப முதலியார் & Bros.

அம்மாஞ்சியின் அபிப்பிராயங்கள்

'ராமய்யா'

நம் நாட்டில் முன் வசித்து வந்த பெரியோர்களின் சரித்திரங்களைப்பற்றி நம் பாலர்கள் வினயத்துடன் படித்து வந்தால், தேச அபிமானமும், கௌரவமும் அதிகரிக்கும் என்பது நிச்சயம். பல பெரியோர்களைப் பற்றிச் சுருக்கமாக நூல்கள் பிரசுரிக்கப்பட்டுள்ளன. ஆனால் சங்கீத சம்பந்தமாக நம் தமிழ் நாட்டில் பிரகாசித்த மூர்த்திகளைப் பற்றி சிறிய நூல்கள்கூட காணப்படவில்லை. பாலர்களுக்கு வாசக புஸ்தகங்களிலேயே பெரியோர்களின் ஜீவிய சரித்திரங்களைக் குறித்து எழுதி, அவர்களுடைய மனப்பான்மை, ஒழுக்கங்கள், அவர்கள் செய்த தியாகங்கள் இவைகளைப்பற்றி எடுத்து உரைத்து வந்தால், தற்காலத்தில் ஏற்படும் குழப்பங்கள் பெரும்பாலும் குறைந்துவிடுமென்கிறான் அம்மாஞ்சி.

ஸ்ரீ முத்துசாமி தீக்ஷிதர்வாளுடைய சரித்திரத்தை எடுத்துக்கொள்வோம். அவர் பெரிய தபோ ச்ரேஷ்டர் என்றும், வைதிக பிராம்மண சம்பிரதாயத்தைக் கைப்பற்றியவர் என்றும், ஸம்ஸ்கிருத பாஷையில் கடினமான நடையில் கீர்த்தனங்களை இயற்றியதால் அவருடைய சங்கீதம் 'பிராம்மண சங்கீதம்' என்றும் பலர் அபிப்பிராயப்படுகின்றார்கள். இது சுத்த தவறு என்று புலப்படவேண்டுமாயின், அவருடைய வாழ்க்கையைக் குறித்துப் படித்தால் ஏற்படும். அவருடைய முக்ய சிஷ்யர்கள் யாவர் என்பீர்களோ? திருவாரூர் சுத்தமத்தளம் தம்பியப்பன், திருக்கடையூர் பாரதி, நட்டுவ சகோதரர்களாகிய பொன்னையா பிள்ளை, வடிவேலு நட்டுவனார், சிவானந்தம் என்பவர். தாஸி ஒருவளும் இருந்தாள். அவள் பெயர் கமலம். வடிவேலு நட்டுவனார் அந்திய காலத்தில் திருவனந்தபுரத்துக்குச் சென்று வெகு கியாதி அடைந்தார். இவர் தான் பிடில் என்ற வாத்தியத்தை கர்னாடக சங்கீதத்துக்குப் பிணைத்து வாசிக்கும் முறையை ஏற்படுத்தியவர். பொன்னையா பிள்ளை என்பவர் தெலுங்கில் பல கீர்த்தனங்களை 'குருகுஹ ஸ்வாமிக்கு நேதாஸாணடதி' என்ற அங்கிதத்துடன் செய்தார். தம்பியப்பன் என்பவரின் துன்பத்தால்தான் நமக்குத் தீக்ஷிதர்வாள் இயற்றிய க்ரஹங்களுடைய கீர்த்தனங்கள் கிடைத்தன. தம்பியப்பன் வயிற்று வலியால் பீடிக்கப்பட்டு, குரு சனி முதலிய க்ரஹ தோஷத்தால் தமக்குப் பலக் குறைவு ஏற்பட்டதாக அறிந்து, அதற்குப் பரிஹாரம் செய்யத் தாம் அப்பிராம்மணராதலால், தமக்கு வேதோக்தமாகச் சாந்தி கிடையாது என்று உணர்ந்து, தம் குருநாயகரை நாட, தீக்ஷிதர்வாள் அவரைத் தைரியப்படுத்தி இரண்டு க்ரஹங்களையும் துதித்து இயற்றிய கீர்த்தனங்களை அவருக்குச் சொல்லிக்கொடுத்து, அவருடைய பிணியைத் தீர்த்துவைத்தார். வயிற்றுவலி தீர்ந்த தம்பியப்பனின் வேண்டுகோளுக்கிணங்கி, தீக்ஷிதர்வாள் மற்றுமுள்ள வார க்ரஹங்களைக் குறித்துக் கீர்த்தனங்கள் செய்து, கிரஹ தோஷத்தால் பீடிக்கப்படாமல் அவைகளைக் கானம் செய்தவர்களெல்லோரும் க்ஷேமம் அடையட்டும் என்று விதித்தார். கானம் சகல ஜாதிக்கும் பொது. வேத மந்திரங்கள் மாத்திரமே முக்திக்கு மார்க்கமல்ல. பிராம்மணர்கள் மட்டுமே ஸம்ஸ்கிருத பாண்டித்யம் பெற்று, வேதங்களைப் படித்து, அவைகளை உச்சரித்துச் சுகம் பெறக் கூடும் என்று நீதியல்ல. முக்தியளிக்கும் திருமூலத்தானரைக் கண்டு பக்தி பண்ணியவர் அனைவருக்கும் மோக்ஷம் உண்டு என்று நிஜ சங்கீதத்தில் விதித்திருக்கிறது. எந்த வேத சாஸ்திரங்கள் அடங்கிய சாஹித்யமானாலும், காந்தர்வ வேத சாஸ்திரப் பிரகாரம், கானத்தில் உபயோகப்படுத்தலாம் என்கிற தத்துவத்தைத் தீக்ஷிதர் தெரிவித்தார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் மற்றொரு விஷயம் குறிப்பிடவேண்டும் என்று அம்மாஞ்சி சொல்லுகிறான். அதாவது, காந்தர்வ வேத முறைப்படி, கான சாஸ்திரத்தில், சக்தி பெறும் சாஹித்தியங்கள் யாவையென்றால், தபோ வலிமை, மனோ வலிமை, பரிசுத்தமான ஒழுக்கங்கள், ஈச்வர பக்தி இவைகளை முற்றிலும் கையாண்ட சாஹித்ய கர்த்தாக்களுடைய வாக்குகளேயாம்! அவைகளுக்கே யோக சக்தியுண்டு, அவைகளே என்நாளும் அழிவின்றி

விளங்குபவை. தாம் இயற்றிய சாஹித்யத்தில் உள்ள தத்துவங்களைத்தாமே அனுஷ்டிக்காத கர்த்தாக்களுக்கு, அவைகளில் வலிமை ஊட்டச்சக்தி எப்படி ஏற்படும்? அத்தகைய துப்பற்ற சாஹித்யங்களைக் கானத்துடன் பஜித்தால் பயனென்ன? செவிக்கு இனிமையாகமட்டும் இருந்தால் போதுமா?

பல்லவி—ஐயனே நானுந்தன் அடிமை,
உன்னைப்பணிவது எந்தன் கடமை
அனுபல்லவி—மாணிக்கமும் மரகதமும்
பாமரர் வேண்டும் பாசங்கள்
அவையொன்றும் யான் அணியேன்
ஈசனே ஜகதீசனே
சரணம்—உம்திருநீறே யான் கோருவது,
உம்திரு நாமமே நான் பாடுவது,
உம்திருவருளே யான் வேண்டுவது,
உம்திரு அழகே யான் உண்டுவது

என்று ஒரு சாஹித்யம் அம்மாஞ்சி ஒருநாள் காலையில் பத்து நிமிஷத்தில் செய்து முடித்தான். பிறகு கால்மணி நேரத்திற்கெல்லாம் ஒரு வைர வியாபாரியிடம் சென்று சுமார் இரண்டாயிரம் ரூபாய்க்கு சிறிய வைரங்களாக வாங்கிக்கொண்டு வந்தான். இது எதற்காக என்று கேட்டேன். யுத்தசமயத்தில் வேறு விதமாக பணத்தைப் பத்திரப்படுத்த மார்க்கம் ஏற்படவில்லை என்றான். ஆனால் காலையில் செய்த சாஹித்யத்தில் "மாணிக்கம், மரகதம் பாமரர் வேண்டும் பாசங்கள்" என்றாயே என்று ஞாபகப்படுத்தினேன். அதற்கு "அடே சுத்த மடையா! சங்கீத சம்பந்தமாக ஏற்படுத்திய சாஹித்யத்தை என்னுடைய நிஜதத்துவமாகவா நீ எடுத்துக்கொண்டாய்? அப்படியானால் இப்பொழுது ஏற்பட்டிருக்கும் நவீன சாஹித்ய கர்த்தாக்கள் எல்லாரும் யதீச்வரர்களாகவும், யோகீஸ்வரர்களாகவும் அல்லவோ விளங்கவேண்டும்? நவீன காந்தர்வ வேத சாஸ்திரத்தின் முறைப்படி, சங்கீத சம்பந்தமாக சொல்வது ஒன்று, செய்வதுமற்றொன்று, ஆத்மார்த்தம் ஒன்று, சரீரார்த்தம் மற்றொன்று; கொள்கை ஒன்று, கூறுவது மற்றொன்று" என்று சிரிப்புடன் சொல்லிவிட்டுச் சாஹித்யத்தையும் கிழித்தெறிந்து விட்டான். இந்தக் கீர்த்தனை ராகம் 'ஹம்ஸாநந்தி,' தாளம் சமயோசிதம்.

ஸத்குரு தியாகய்யரவர்களுடைய சரித்திரத்தைப் பார்ப்போம். அங்கும் அவருக்குப் பிரதம சிஷ்யர் வாலாஜாபேட்டை வெங்கட்ராம பாகவதரான ஸௌராஷ்டிரரே! அவரிடமே அதிகப்பிரியம் காட்டி, தம்முடைய பொக்கிஷங்களான கீர்த்தனை ஓலைச்சுவடிகள் எல்லாவற்றையும் கொடுத்துவிட்டார். தாம் இயற்றிய கீர்த்தனங்கள் எல்லாவற்றிலும் தாம் எடுத்துக்காட்டிய ஒழுக்கங்களைப் பூராவாகவும் கையாண்டுர்வதார் தியாகய்யருடைய ஜீவிதத்தில் முக்கியமான அம்சம் அவருடைய வினயம். தாம் வரப்பிரஸாதியென்று அறிந்தும், தம்முடைய பாண்டித்யம் புகழ் பெற்றது என்று கேட்டும், எந்தத் தருணத்திலும் அகம்பாவம் என்பதே இல்லாது அவர் நடந்துகொண்டார். உதாரணமாக, "சொகசுகா மிருதங்கதாளமு" என்ற கீர்த்தனையில், "பஜிஞ்சே யுக்தி தியாகராஜுனிகி தாமா, ஸ்ரீராமா"—உன்னைப்பற்றிப் பஜனை செய்ய தியாகராஜனுக்கு யோக்கியதையுண்டா, ஸ்ரீ ராமா—என்று கேட்கிறார். இம்மாதிரி இடங்கள் பலவுண்டு. ஆனால் அவருக்கு வாய்ந்த அந்த அரியகுணம், அந்தக்காலத்தில் ஜீவித்திருந்த மற்ற பெரியோர் பலருக்கும் வாய்க்கவில்லை. அருணாசலக் கவிராயரின் சரித்திரத்தில் பார்ப்போம்! மதராஸில் லிங்கப்ப செட்டியார் என்ற பிரபுவின் குமாரனை தேப்

THE DHANALAKSHMI BANK LTD., KUMBAKONAM.

தனலெக்ஷ்மி பாங்கு லிமிடெட்,
கும்பகோணம்.

எல்லாவித பாங்கு அலுவல்களும் கவனிக்கப்படும்.

டவுன் எல்லைக்குள் பாங்கால் அங்கீகரிக்கப்படும் ஸ்தாவர சொத்து முதல் ஈட்டின் பேரில் கடன் வசதி அளிக்கப்படும்.

A. L. பாலகிருஷ்ணையர்,
மானேஜிங் டைரெக்டர்.

பெருமாள் செட்டியாருக்கு அவர் எழுதிய சீட்டுக் கவியில் பின்வருமாறு காண்கிறோம்.

"கணிகொண்ட பஞ்ச லட்சணமும் ராமாயணக்
கடலையும் உணர்ந்த புலவன்
கவிராசர் புகழ்கின்ற அருணாசலக்
கவிராயன் எழுதும் ஓலை"

ராமாயணக் கடலையும் உணர்ந்தவர் தாம் என்றும், கவிராசர்கள் எல்லோராலும் புகழப்பட்டவர் தாம் என்றும் எழுதியிருக்கிறார். சரஸ்வதி கடாக்ஷம் ஏராளமாக அனுபவித்த கவிராயருக்கு 'ஆனைக்கும் அடி சறுக்கும்' என்பதுபோல் இந்தக் குற்றம் ஏற்பட்டது என்று அம்மாஞ்சி எடுத்துக்காட்டத்தான் நான் சமீபத்தில் அறிந்தேன். ஆனால் தேவலோக வாசிகளுக்கே இத்தகைய குறைகள் இருந்ததாக நாம் புராணங்களில் படிக்கிறோம்; ஆதலால் இதுவும் சகஜம் என்றுதான் நாம் அறியவேண்டும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கோருவது என்னவென்றால், 1700 வருஷத்திலிருந்து 1900 வருஷம் வரையில் தமிழ் நாட்டில் ஜீவித்திருந்து சங்கீத சம்பந்தமாக உழைத்த யதிச்ரேஷ்டர்களின் ஜீவிய சரித்திரங்களையதார்த்தமாகவும், ஜாதி மத பேதமின்றியும், அவரவருடைய தத்துவங்களைக் குறித்தும் நூல்கள் வெளிவரவேண்டும். அவை நம் சிறுவர் சிறுமிகளுக்குச் சிறிய வயதிலேயே உபயோகப்படும்படி எளிய நடையில் எழுதியிருக்கவேண்டும். இந்தக் காரியத்தை யாராகிலும் எடுத்துக்கொண்டால் பெரிய உபகாரமாயிருக்கும். அப் பெரியோர்களின் பெயர்களை எனக்கும் அம்மாஞ்சிக்கும் தெரிந்தவரையில் குறிப்பிடுகிறேன். புரந்தர தாஸர் (பதினாறும் நூற்றாண்டு) க்ஷேத்ரஞயர், (பதினேழாம் நூற்றாண்டு) பல்லவி கோபாலய்யர், ஆனை அய்யர், கனம் கிருஷ்ணய்யர், தீக்ஷதர், சாமா சாஸ்திரியார், தியாகய்யர், அருணாசலக் கவிராயர், கோபாலகிருஷ்ண பாரதி, கவி குஞ்சர பாரதி, ஸ்வாதி திருநாள், கோவிந்த மாரார், சதாசிவ ப்ருமேந்திரர், போதேந்திர ஸத்குரு, திருவிசைநல்லூர் அய்யாவாள், வீணை குப்பய்யர், வாலாஜாபேட்டை வெங்கட்ராம பாகவதர், மனம்புச்சாவடி வெங்கடசுப்பய்யர், பட்டணம் சுப்ரமணிய அய்யர், மஹாவைத்தியநாதய்யர், முத்துத்தாண்டவர் இன்னும் பலருண்டு.

ஃ ஃ ஃ

சென்ற மாதம் 20ஆம் தேதி அம்மாஞ்சி மதராஸுக்குப் போயிருந்தான். திரும்பி வந்தபின் அங்குள்ள விசேஷங்கள் என்ன என்று கேட்டேன். பெருமூச்சு விட்டுக்கொண்டு "ஒன்றுதான் முக்கியமானது' அது என்னவென்றால், காளிதாசர் அகில இந்திய ரேடியோ நிலயத்தின்முன், தலையில் ஒரு துண்டைப் போட்டுக்கொண்டு, வெகு விசாரத்துடன் உட்கார்ந்துகொண்டிருந்தார்" என்றான். எனக்கு ஒன்றும் புலப்படவில்லை. அதன்பின் எனக்கும் அம்மாஞ்சிக்கும் நடந்த சம்பாஷணையை அப்படியே எழுதுகிறேன்:—

நான்: எந்தக் காளிதாஸர்?

அம்: "மாளவிகாக்னிமித்ரம்" என்ற நூலை எழுதிய கவி காளிதாஸர்.

நான்: இது என்ன ஹாஸ்யம்?

அம்: அவர் அதில் எழுதிய சுலோகத்தை ரேடியோ நிலயத்தினர் அதிகாரமாக எடுத்துக்கொண்டு நவீன சங்கீதம் என்பதைச் சிருஷ்டித்திருக்கிறார்களாம்.

நான்: அது என்ன சுலோகம்?

அம்: "புராணமித்யேவ நஸாதுஸர்வம்
நசாபி காவ்யம் நவமித்ய வத்யம்
ஸந்தப் பரீக்ஷய அன்யதரது பஜந்தே
மூடஹ பரப்ரத்யய நேயபுத்திஹி."

இதற்கு அர்த்தம், புராதனம் என்று சொல்லப்படும் வஸ்து எல்லாம் நல்லதாகவே இருக்குமென்று சொல்ல முடியாது; நவீனமாக ஏற்பட்டவை எல்லாம் சிரேஷ்டமாயிராது என்று சொல்வதும் தவறு; ஸத்புருஷர்கள் கூடி எல்லாவற்றையும் பரீட்சை செய்து நல்லதை ஏற்றுக்கொள்ளவேண்டும்; மூடர்களாயிருப்பவர்கள் பிறருடைய புத்திக்கு எது நல்லது என்று ஏற்படுகிறதோ அதையே கைப்பற்றுவர்கள்.

இதில் இரண்டாவது அடியை ஆதாரமாக வைத்துக்கொண்டு, ரேடியோ அதிகாரிகள் ஸ்ரீமதி வசுந்தாராதேவியின் உதவியாலும், அவருடைய கூட்டு வாத்திய கோஷ்டியாருடைய உதவியாலும், நவீன சம்பிரதாயத்தையொட்டி லகு சங்கீதம் ஒலி பரப்பினர். இந்த நிகழ்ச்சிக்குமுன் என்ன படாடோபம், ஆடம்பரம், பத்திரிகைகளில் என்ன பிரசாரம், ஸ்ரீ வசுந்தரா தேவியின் உருவப் படங்கள் சகிதமாக என்ன ஆரவாரம்! அந்த நிகழ்ச்சியின்

ஆரம்ப தினத்தில் கர்னாடக சங்கீத அபிமானிகள் அனைவரும் தம் ரேடியோ யந்திரங்களைத் தயாராக்கிக் கொண்டு காத்திருந்தனர். கோஷ்டி கானம்முதலில் கிளம்பியது. பிறகு ஸ்ரீ வசுந்தராம்மாள் 'தெருவில் வாரானோ, திரும்பிப் பாரானோ' என்ற உருப்படியைப் பாடினார். பாடியவரையில் அழகாகத்தானிருந்தது. ஆனால் சுலோகத்துக்கும் நிகழ்ச்சிக்கும் என்ன பொருத்தம் என்று எனக்கு விளங்கவில்லை. காளிதாஸர் உட்கார்ந்திருந்த இடத்தில் திரும்பிப்பார்த்தேன். அவர் புல்லின் மேல் விழுந்து புழுப்போல் துடித்துக் கொண்டிருந்தார். திடீரென்று வயிற்றுவலியோ என்று உத்தேசித்து 'ஓமம் வாட்டர்' கொண்டு வரலாமா என்று யோசித்தேன். அவர் ஞான திருஷ்டியால் என் மனோபாவத்தையறிந்து, படபடவென்று சம்ஸ்கிருதத்தில் ஏதோ சொல்லிவிட்டு, என் கையைப் பிடித்து, பரபரவென்று இழுத்து, ரேடியோ நிலயத்தின் கேட்டுக்கு வெளியே என்னைத் தள்ளி 'இந்தத் தெருவில் வாராதே, இனித் திரும்பிப் பாராதே' என்று வெடுக்கு வெடுக்கென்று தமிழில் சொல்லிவிட்டு மறைந்து விட்டார். இதுதான் நடந்த சங்கதி.

நாமெல்லோரும் பிராசீனமான கர்னாடக சங்கீதம் கேட்கத்தகாத வயிற்று வலிக்காரர்களாம். நமக்கு உப்பில்லாத சவ்வரிசிக்கஞ்சி போன்ற லகு சங்கீதம்தான் கேட்க சக்தியுண்டாம். இந்த விஷயத்தை பரீக்ஷை செய்ய யோக்கியதையுள்ள புருஷர்கள் யார்? ரேடியோ அதிகாரிகள். ஆதலால், மூடர்கள் யார்? ரேடியோவைக் கேட்கிறவர்கள் அனைவரும். இதற்கு ஆதாரம்? காளிதாஸருடைய "மாளவிகாக்னிமித்திரம்." நிரம்பவும் சரிதான்.

NICO FERRIN
Iron and Vitamin B Tonic.
நிக்கோ-பெரின்
அயர்ன் வைடமின் B டானிக்

ரத்த சோகை, பெர்னீஷஸ் அனீமியா (Anaemias-Primary, Secondary) பலஹீனம், ரத்தக்குறைவு, முதலிய வியாதிகளுக்கு சிறந்த டானிக்.

ஜீரண சக்தியைச் சீர்படுத்துவதிலும், ரத்தத்தை விருத்தி செய்வதிலும் நல்ல உதவி செய்கிறது. ஜ்வரங்களுக்குப் பிறகு ஏற்படும் பலஹீனத்தையும், கர்ப்ப ஸ்திரீகளுக்கு ஏற்படும் சோர்வு, ஓய்ச்சல் பலஹீனத்தையும் போக்குகிறது.

KERMES INDICA.
கர்மஸ் இண்டிகா

க்ஷயம் இழுப்பு (Asthma) இருமல், கக்குவான், குத்திருமல், ப்ராங்கைடீஸ், நியூமோனியா முதலிய நோய்களுக்கும் இன்னும் சுவாசக்குழாய்கள், சுவாசப்பை சம்பந்தமான சகல வியாதிகளுக்கும் சிறந்த மருந்தென்று வைத்திய நிபுணர்களால் ஆமோதிக்கப்பட்டது.

கபத்தை வெளியாக்கும் தன்மையுடையது. கோழையை சுலபமாய் இருமி வெளிப்படுத்தி இருமலைக் குணமாக்கி மார்பு விலாப் பக்கத்திலுள்ள வலியைப்போக்கி இழுப்பை குணமாக்குகிறது.

மருந்துகள் எல்லா ஊர்களிலும் எல்லா இங்கிலீஷ் மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.

தயாரிப்பவர்கள்:— **K. P. LIMITED.,**
40, Hunters Road, VEPERY MADRAS.

இந்தியாவுக் கென்றே தயாரிக்கப்பட்டவை!

எப்பொழுதும் சரியான மணி காட்டுபவை என்று வெஸ்ட் எண்ட் வாட்சுகள் 50 ஆண்டுகளாகப் புகழ் பெற்றிருப்பது பற்றி நாங்கள் பெருமை கொள்கிறோம். சிறந்த சாமான்கள், கைதேர்ந்த வேலைப்பாடு இரண்டும் சேர்ந்து வெஸ்ட் எண்ட் வாட்சுகள் பணத்திற்கேற்ற சரக்காக விளங்குவதுதான் இப் புகழின் காரணம். எந்த சீதோஷ்ண நிலைமையிலும் பழுதற்ற உழைப்பு இன்னொரு காரணம். வெஸ்ட் எண்ட் வாட்சுகள் எல்லாம் இந்தியாவின் சீதோஷ்ண நிலைமைக்கு ஏற்றவாறு தயாரிக்கப்பட்டு எல்லா விதத்திலும் திருப்தி யளிக்கும். சித்திரங்களடங்கிய கேட்லாக் வேண்டுபவர்களுக்கு இனாம்.

வெஸ்ட் எண்ட் வாட்ச் கம்பெனி,

பம்பாய் :: கல்கத்தா



நியூ பிஜோ

18 காரட் முழுத் தங்கம் ... ரூ. 298

(ரேடியம் எண்களும், முட்களும் கூடிய எந்த ரகமும் ரூ. 3/- பிரத்யேகம்.)



பிஜோ "ட்வின் டயல்"

பேடென்ட் எவர் ப்ரைட் ஸடீல் ரூ. 124

18 காரட் முழுத் தங்கம் ... ரூ. 270

WEST END WATCH Co

BOMBAY **CALCUTTA**

சுயம்வரம்

●

எம். எஸ். கமலா

காங்கிரஸ் மாளிகை நெருப்புப் பிடித்துக் கொண்டுவிட்டது. எவ்வளவோ ஜாக்கிரதைக்கிடையிலும் அந்தத் தீ பரவியது வெகு அற்புதம். அதை அணைக்கப் போய் ஜனங்கள் எவ்வளவு வெற்றி கொண்டார்களோ அவ்வளவு வெற்றிதான் கொண்டான், தன் மனதை அடக்கப்போய் அனந்தராமன்.

அனந்தராமன் இன்கம்டாக்ஸ் இன்ஸ்பெக்டர். கறுப்பு நிறம். மண்டை பெரிது. ஷெல் பிரேம் போட்ட பெரிய மூக்குக் கண்ணாடி முகத்தில். கண்ணாடிக்குள் கலங்கிய கண்கள். அவை கூர்ந்து பார்ப்பவர்களுக்குத்தான் தெரியும். வேலையில் நல்ல கெட்டிக்காரன். வயது சுமார் முப்பத்தைந்து. அவன் வாழ்க்கைப் பாதை மேடு பள்ளங்கள் கொண்டது. அவனும் அதில் சமவெளியைப் பார்க்க ஆவலுடன் எதிர்பார்த்து, கரடுமுரடுகளைச் செப்பனிடத் தொடங்கினான். அவன் ஒருபுறம் சீர்திருத்தினால் அது ஒருபுறம், மண் சுவரைப்போல், மடமடவெனச் சாயும். அவன் என்ன செய்வான்? இனி தன் வழியைக் கடவுள்தான் சீர்திருத்தவேண்டுமென்று கடவுள் மேல் பாரத்தைப் போட்டான்.

இன்கம்டாக்ஸ் இன்ஸ்பெக்டராய்ப் பெஜவாடாவில் வேலை பார்த்துக் கொண்டிருந்தான். அப்பொழுதுதான் அவன் வாழ்க்கையில் பெரும் பள்ளம் தோன்றி, அது அவனை இழுத்துக்கொண்டது. அழகிய சிறு பங்களா. அழகுள்ள மனைவி. கிருஷ்ண விக்ரஹம்போல் இரண்டு பிள்ளைகள். தன் மனைவியையே உரித்துக்கொண்டு வந்த கைக்குழந்தை சரோஜா. அன்று ஜனவரி முதல் தேதி. நன்றாய் உடுத்து, மேலதிகாரிகளைப் புது வருடப் பரிசுடன் பார்த்துத் திருப்தி செய்துவரப் புறப்பட்டான் அனந்தராமன். அவன் எல்லோரையும் திருப்தி செய்து, சோர்ந்துபோய் மத்தியானம் வீட்டிற்கு வரும்பொழுது வீடு அமளிப்படுகிறது. அவன் மனைவி தேள் கொட்டி தெய்வலோகத்தைப் பார்க்கப் போய்க்கொண்டிருந்தாள். மேலதிகாரிகளுக்குக் கொடுத்த பரிசோ, பழங்கள் மாலைகள் முதலியவை. காலனுக்குக் கண்ணீருடன் கொடுக்கும் புது வருடப் பரிசு......மக்களை அனாதையாக்கித் தன்னைத் தலைகிழாய்ப் பெரும் பள்ளத்தில் தள்ளிச்செல்லும் அழகுடைய அன்பு மனைவி. அவள் இன்னும் நன்றாக இருபது வயதே எட்டாத இன்பஸ்வரூபி. அவன் சம்சார நாடகத் திரை கவிழ்ந்தது. அவன் நெற்றியில் இரண்டாங் கல்யாணக்காரன் என்ற எழுத்துக்கள் பதிப்பிக்கப்பட்டன. எதை மறந்தாலும், ஜனவரி முதல் இரண்டு தேதிகள் இவனை மறக்கமுடியாத நினைவுகளில் கொண்டழுத்தித் துன்புறுத்தும். குழந்தைகளோவெனில் முறையே மூன்று வயது, ஒன்றரை வயது உடையவை. கைக்குழந்தை சரோஜா மூன்று மாதம். குழந்தைகளில் சரோஜா அவன் உயிர்நிலை. அவனை அவன் தாய் வைவது துடைகாலி. அச்சமயங்களில் அவன் கண்களில் நீர்மல்கும்.

2

அனந்தராமன் இறந்தவளுடன் இறக்கக் கூடுமா? 'பார்யா துக்கம் புனப்பார்யா' என்றபடி, பெற்றோர்களின் கடமையாலும், பந்துக்களின் நிர்ப்பந்தத்தாலும், பெண்களைப் பெற்றவர்களின் நயமான தேனொழுகும் பேச்சுக்களாலும், மறுமணம் செய்துகொண்டு, மனைவி இறந்த பிளவை ஒட்ட வைத்துச் சுற்றி வரலானான். குழந்தைகளின் முகத்தைப் பார்க்கும்போது அவைகளின் நிராதரவான தன்மை மனதை வருத்தும். அவன் இளம் மனைவி, இரண்டுங் கெட்டானான அக்குழந்தைகளுடன் படும் அவஸ்தை—அவள் வருவதற்கு முன்பே மூன்று குழந்தைகளின் தாய் ஸ்தானத்தை அடைந்தது—இவைகளை நினைத்து பெருமூச்சு விடுவான். குழந்தைகளுக்குச் செல்லம் பாதி, சலுகை பாதி. ஒவ்வொன்றும் முரண்டு அவளை வதை செய்யும். அவள் என்ன செய்தாலும் 'இளையாள் தானே!' என்ற சொல்லுடன் அவள் சிரமத்திற்கு வெற்றுப்புள்ளி இட்டு வெகுமதியளிப்பார்கள் உற்றார் உறவினர்கள். அனந்தராமன், அனுபவமில்லாத சிறுமி படும் அவஸ்தையைப் பார்த்து அவைகளைக் கண்டித்தால் 'இளையாள் மோகம் உலகிற்கே உண்டானதுதானே' என்பார்கள். இதை அறிந்து அவன் நியாயா நியாயத்தைச் சொல்லப் பயந்து,

சங்கக்கட்டுப்பாட்டிற்குள் கட்டுப்பட்டு மௌனமாய் இவர்களில் யார் பக்கமும் சேராமல், பற்றற்ற யோகியைப்போல் நடக்க, பல்லைக் கடித்துக்கொண்டு, பிரயத்தனப்பட்டான். மறுபடியும், எவ்விடம் ஒட்ட வைத்தானோ அவ்விடமே பெரும் பிளவு ஏற்பட்டது. அவன் சிந்தை கலங்கியது. நெஞ்சம் கஷ்டத்தை எளிதாய்த் தாங்கக்கூடிய பக்குவமடைந்தது. இப்பொழுது கடமைக்காகப் போராடும் பெற்றோர்களில்லை. உற்றாரின் உருக்கமுள்ள சொற்கள் வேலை செய்ய மறுத்தன. பெண்களைப் பெற்றவர்கள் வந்து தங்கள் பெண்களைக் கொடுப்பதாய்ச் சொன்னால், ''அய்யா! எனக்குக் கொடுத்து ஏன் சாகடித்துக் கொள்கிறீர்கள்? எங்காவது ஏழைச் சிறுவனைப் பார்த்துக் கொடுங்கள். நான் தொட்டுத் தாலி கட்டினால் வேறு எமன் வேண்டியதில்லை...'' என்பான். இப்பொழுது அவன் மனதில் காதலுக்கோ, காமத்திற்கோ, இச்சைக்கோ எதற்கும் இடமில்லாமல் இரண்டு பெரிய பள்ளங்கள். அப்பள்ளங்களை நினைத்தாலும் குலை நடுங்கும். இவன் தடுத்துத் தள்ளினாலும் இவன் கஷ்டங்களைப் பங்கு கொள்ள எத்தனையோ கன்னிகைகள் காத்துக் கிடந்தனர். எத்தனையோ தந்தையர்கள் வந்து பலவந்தப்படுத்தினார்கள். இத்தொல்லையிலிருந்து விடுபடவேண்டி லீவ் எடுத்துக்கொண்டு தன்னை அறிந்தவர் யாருமில்லாத கொள்ளிடக் கரைக்குப்போய் தன் குழந்தைகளுடன் வசித்தான். தினமும் காலை ஒருமுறை, மாலை ஒருமுறை கொள்ளிடமும் காவேரியும் சந்திப்பதை வெகு விநோதமாய்ப் பார்ப்பான். யுகயுகாந்தரங்களுக்கு மாறுதல் உண்டாகலாம்; கணவன் மனைவியருக்கு வேற்றுமை உண்டாகலாம்; கொள்ளிடம் காவேரி சக்கிய பாவத்திற்கு நித்தியத்வம்—சிரஞ்சீவித்தனம் இருக்கிறது கடவுள் தன்னிடத்தில் சக்கியபாவத்தைப் பிரித்தெடுத்து அவ்விடத்தில் ஏனோ பெரும் பள்ளத்தை ஏற்படுத்தினார்? ஆம், அது விதி. தான் ஜன்மாந்தரத்தில் செய்த பாபம். அதற்குத் தண்டனை இந்த ரூபத்தில்.

3

அன்று சூரியவெப்பம் அதிகமாய் இருந்தது. அவனால் பொறுக்கக்கூடவில்லை. காவேரியை நோக்கிப்புறப்பட்டான். 'அப்பா! நானும் வருவேன்' என்று பின்புறமாகவே ஓடி வந்தாள் மதலைச் சொற்களுடன் மூன்று வயதுள்ள 'சரோஜா.' அவளையும் கையைப் பிடித்து அழைத்துச் சென்றான். குழந்தை காவேரியின் நிச்சலமான நீரோட்டத்தைக் கண்டு கலகலவென்று நகைத்தாள். அவன் சற்றுநேரம் விளையாடி ''சரோஜ்! இங்கேயே உட்கார்ந்திரு. நான் குளித்துவிட்டு வருகிறேன்'' என்று நீரில் இறங்கினான். ''நானும் அப்பா!'' என்ற குழந்தையின் சிறு குரல் காவேரியின் சலசலத்வனியில் கேட்கவில்லை. அவன் நீரினுள் இறங்கிச் சென்றான். அவன் மனக்குகையிலிருக்கும் தாபத்தையறிந்து காவேரியன்னை தன் குளிர்ந்த சிறு கைகளால் அவனை அணைத்து இன்புறச்செய்தாள். அவன் கரையில்விட்ட குழந்தையை மறந்து நீரில் அமிழ்ந்து அமிழ்ந்து எழுகிறான். கரையிலிருக்கும் குழந்தையோ அவன் நீருக்குள் மறையும்போது விக்கினபடி கண்களில் ஏமாற்றம் தோன்றத் திகைத்து நிற்பதும், அவன் மேலெழும்போது ஆசையுடன் தந்தையை அணுக இரண்டோர் அடி முன் வைப்பதுமாய் நடந்தாள். நீல நிற வளையங்கள் ஒன்றுடன் ஒன்று பிணைத்துக்கொண்டு தொங்குவதைப் போல் வளர்ந்தும் வளராமலும் இருக்கும் கூந்தல் வளையங்கள் கதிரோனின் காந்தியால் அதிநீலமாய் மின்னிக்கொண்டிருந்தன. நீல நிறக் கண்மணிகள் நீர் நிரம்பி திகைக்க அக்குழந்தை தன் முன் ஓடும் நீரோட்டத்தையும் லக்ஷியம் செய்யாமல் தந்தையை அணுகச் சென்றுகொண்டிருந்தாள். அக்குழந்தையின் முகத்தில் பால்மணம் மாறவில்லை. வாய் மாதுளம் பூப்போன்ற சிவப்பு. நீரிலிருக்கும் 'அனந்தராமனோ' அந்தச் சாந்தியான இடத்தில் எதையோ தேடியலைந்தான். உடலில் ஊறும் புனலின் குளிர்ச்சியில்—ஆனந்தவெறியில் தன்னைத்தான் மறந்தான். அவன் அவளிடம் லயித்தான். உள்ளத்திலெழுந்த உணர்ச்சிகளை உருவாக்க முயன்றான். கண்களை மூடிக்கொண்டான். கண்களில் கனவுகளோ அல்லது நினைவுகள்தாமோ உருக்கொண்டு உலாவின. அவன் ஹிருதயத்தினுள்ளிருக்கும் இரண்டு பள்ளங்களில் இரண்டு ரூபங்கள். ஒன்றையொன்று முந்திக்கொண்டு போராடுகின்றன. ''அவ்விடமும் சக்களத்திச் சண்டையா?'' என்று வாய்விட்டுக் கத்தினான். அக்குரல் எதிர் கரைவரையில் எட்டிற்று. குழந்தை அக்குரலைக்கேட்டு ''அப்பா!'' என்று மேல் ஸ்தாயியில் கூவிக்கொண்டே பின்னும்

இரண்டடி வைத்தது. 'டுப்' என்னும் சப்தம். "ஐயோ" என்ற புதிய அலறல். இத்தனையும் அவனை ஓர் நிலைக்குக்கொண்டுவந்து கனவிலிருந்து எழுப்பியது. மகளை விட்ட இடத்தைத் திரும்பிப்பார்த்தான். "திக்"கென்றது. வெற்றிடத்தை வெறிக்கப்பார்த்தான். உள்ளம் துடிக்க நீரை கிழித்துக்கொண்டு வெளி வந்தான். அவன் கனவு எங்கு போயிற்றோ? அவ்வெயிலே அவன் உள்ளத்தையும் காயச் செய்துவிட்டதோ? அவன் வேகும் உள்ளத்தில்—மற்றொரு......மனப்பள்ளத்தில் படர்ந்திருந்த பாசியும் ஒதுக்கப்பட்டு மறுபடியும் பள்ளத்தின் ஆழத்தைக் காண்பிக்குமோ? அவன் கற்பனையைத் தாங்கக்கூடிய சக்திகூட அவன் ஹிருதயத்திற்கில்லை. அவ்வளவு பலஹீனமாய் இருந்தது. அவன் கண்கள் காவேரியின் வெள்ளத்தின்மேல் இருந்தன. கண்களிலிருந்து கண்ணீர் முகத்தில் வழிகிறது. உடலிலிருந்து வழியும் நீர் காய்ந்த மணலின்மேல் விழுந்து, நிழல்போல் புகைச் சுருள்மேல் நோக்கிச்சென்று தங்கள் ஆண்டவனை ஆதித்தியனைத் தழுவச்சென்றது. உள்ளத்தில்கண்ட புகையோ உடலைச் சொல்லறியா ஈட்டிகளால் குத்திப் புண் செய்து உயிரைப்பிடித்தாட்டித் திணறடிக்கிறது. உள்ளம் துடிக்கிறது. கண்கள் சுழல்கின்றன. ஒரு மனித சரீரத்திற்கு எத்தனைவிதச்சங்கடங்கள் உண்டோ அத்தனையையும் அவன் அந்த க்ஷண நேரத்திலடைந்தான். "காவேரி" கடினசித்தையல்ல. கருணையற்றயவளுமல்ல. இவன் வேதனையையறிந்தாள். தன் மெல்லிய கரங்களினால் தாயற்ற தனையைத் தாலாட்டினாள். முதலில் குழந்தையை மாத்திரம் மெல்ல மெல்ல வெளியில் கொண்டுவந்தாள். அதை ஏந்திய கைகள் தாமரைத்தண்டுகள்போல் ஆட்டம்கொடுத்தபடி வெளியில்வர அதனுடன் ஓர் ஸ்திரீமூர்த்தியும் வெளிவந்தது. அவன் கண்கள் மலர்ந்தன. அவன் கண்களில் காணும் கனவுகள்......... "காவேரி"தான். கன்னி வடிவம் ஏந்திவந்தாளா? தன்னுடைய நன்றியை வாய்விட்டுச்சொல்ல முடியவில்லை. அவன் ஹிருதயம் பூரணமாய் நிரம்பியிருந்தது. அவன் ஆனந்தத்தை அவன் கண்கள் வெளியிட்டன. கரையை அணுகிய கன்னி குழந்தையை மடியில் வைத்துக்கொண்டமர்ந்தாள். அவன் கண்களை இமைக்காமல் ஊமையைப்போல் கண்ணீர்வடிய ஸ்தாணுவாய் நின்றிருந்தான். குழந்தைக்கு வேண்டிய பிரதம சிகிச்சைகளைச் செய்தாள். குழந்தையின் கண்கள் மெல்லத் திறந்தன. அவன் உள்ளத்திலிருந்த பயங்கரத்திரை மெல்ல விலகியது. அவன் நன்றியுள்ள பார்வையுடன் அவளைப் பார்த்தான். அவள் தலை குனிந்தாள். அன்றுடன் காவேரிக்கு வருவதை விட்டான் "அனந்தராமன்."

4

நாட்கள் மெள்ள மெள்ள ஊர்ந்து சென்றுகொண்டேயிருக்கின்றன. அனந்தராமன் குழந்தைகள் வளர்ந்துகொண்டிருக்கிறார்கள். மைந்தரிருவரும் நான்காம் வகுப்பும் மூன்றும் வகுப்பும் படிக்கிறார்கள். சரோஜா முதல் வகுப்புப் படிக்கிறாள். குழந்தைகளின் பராமரிப்பை எவ்வளவுதான் வேலைக்காரி நன்றாய்ச் செய்தாலும் அவனுக்குத் திருப்தியில்லை. அதற்காக அவன் என்ன செய்ய முடியும்? ஒவ்வொரு சமயம் காவேரிக் கன்னி அவனையுமறியாமல் அவன் முன்வந்து நிற்பாள். அச்சமயம் அவள் விரிந்த கூந்தல், நனைந்த ஆடை வெய்யிலின் வெப்பம், வெள்ளத்தின் வெகு கம்பீர ஓட்டம், கன்னியின் கனிகரச் செய்கை, இவைகள் நினைவிற்கு வந்து ஆனந்தத்தையூட்டும். அவன் அவளிடம் லயிப்பான். கண்களை மூடிக் கொள்வான். காவேரியின் காய்ந்த மணல்வெளி வெண்ணிலவின் வெள்ளிப்பரப்பாய்த் தோன்றும். அவன் ஹிருதயப் பள்ளங்களிரண்டும் ஆனந்த ஊற்றுக்களாயும் அவற்றில் அலர்ந்த பத்ம மலர்கள் மணத்தை அள்ளி வீசும். அந்த ஊற்றுக்களிலிருந்து உதிப்பாள் காவேரி. உருவம் மிதந்து இவன் அருகில் வருவது போல் தோன்றும். அவன் கற்பனை வெளியில் அவள்......அவள் எங்கிருப்பவள்? அவள் யார்? அவனுக்கு அதைப்பற்றித் தெரியாது; சொல்பவரும் இடையாது. அவனுக்குக் கவலையின் சிகரத்திலிருந்து அலுத்துவிட்டது. அவன் ஜீவிதத்திற்கு ஜோதி இன்றியமையாததாய் வேண்டியிருக்கிறது. அந்த ஜோதி இருக்குமிடம்......

மதராஸில் பீட்டர்ஸ் ரோட்டில் 'பிருந்தாவன்' என்ற பங்களாவிற்குத் தெற்கிலிருந்து மாற்றலாய் வந்த அனந்தராமன் தம் குழந்தைகளுடன் குடியேறினார். அப்பங்களாவின் வெளி வீட்டில் (out house) ஒரு மாணவி வசித்து வருகிறாள், அப்பங்களாவிற்கு யார் குடி வந்தாலும் அவள் அவ்விடத்தைக் காலி

செய்து கொடுப்பதில்லை. அவ்வீட்டு முதலாளி அதை அவளுக்கு இலவசமாய் விட்டிருக்கிறார். அனந்தராமன் ஆபீசிலிருந்து ஆறு மணிக்கு வந்துவிடுவார். அதற்குப் பின் குழந்தைகளுடன் காரில் 'வாக்' போய் வருவார். காலை எழுந்ததும் குழந்தைகளின் வேலைகளைத் தம் மேற்பார்வையில் சரிவர நடத்தி, அவர்களைப் பள்ளிக்கனுப்பிப் பிறகு தான் வேலைக்குச் செல்வார். சுற்றுப்புறங்களிலிருப்பவர்கள் 'ஒரு புருஷனுக்கும் இவ்வளவு பொறுமையா?' என்று ஆச்சரியப்பட்டார்கள்.

அன்று சனிக்கிழமை அனந்தராமன் ஆபீஸிற்குச் சென்றிருந்தார். பின்புறமிருக்கும் மாணவி ஸ்நானம் செய்து தலையை ஆற்றிக் கொண்டு நின்றிருந்தாள் தன் விடுதியின்முன். அனந்தராமன் குழந்தைகள் காம்பௌண்டைச்சுற்றி ஓடி விளையாடிக்கொண்டிருந்தன. குழந்தைகளின் கலகலத்தசிரிப்பு மாணவியை வெளிவரச்செய்தது. ஓடும் குழந்தைகளைக்கண்டாள். நீலநிற மோதிரச் சுருள்களைப் போன்ற சரோஜாவின் கூந்தல் அவ்வெய்யிலில் ஆட்டம் கொடுத்து மின்னவே அவளைத் திக்பிரமையில் ஆழ்த்தியது. அவளைப் பார்த்தபடியே நின்றாள். சரோஜா ஓடமுடியாமல் அப்படியே நின்று அழ ஆரம்பித்தாள். அவளை மாணவி தாவி எடுத்து அணைத்துக்கொண்டாள். சிறுவர்களிருவரும் சுற்றிக்கொண்டு வரும்போது புதியவளைப் பார்த்துத் திகைத்து நின்றனர். அன்றைபிலிருந்து அவர்கள் மாணவியின் மனமொத்த நண்பர்களாயினர்.

இப்பொழுதெல்லாம் தந்தையுடன் வெளிச்செல்லக் குழந்தைகள் இஷ்டப்படுவதில்லை. தந்தைக்குச் சிரமமளிக்காமல் தங்கள் உடைகளைச் சுத்தமாய் வைத்துக்கொண்டு, சமர்த்தாய்ப் படிக்கிறார்கள். இந்த மாறுதலுக்குக் காரணம் தந்தைக்கே தெரியவில்லை. அனந்தராமன் வீட்டில் இல்லாதபோது மாணவி வந்து இதெல்லாம் செய்து செல்வாள். குழந்தைகளுக்குக் கல்வி போதிப்பாள். இதை அவன் அறிவானா? அவள் ஏழை மாணவி; உபகாரச் சம்பளத்தில் படிக்கிறாள். சட்டப் பரீக்ஷைக்குச் செல்கிறாள். இரண்டு மூன்று பேர்களுக்குப் படிப்புச் சொல்லிக்கொடுத்து அதன் மூலம் வரும் பொருளால் தன் காலத்தை நடத்திவருகிறாள். அவளின் ஏழ்மையறிந்தவர்கள் வெகு சிலரே. அதை அவள் வெளிப்படுத்தமாட்டாள். இயற்கையன்னையின் இன்ப சந்தானங்களில் அவள் ஒருத்தி. அவள் அவ்வருடம் பரீட்சைக்குப் பணம் கட்டவேண்டியதால் அதற்கு வேண்டும் பிரயத்தனங்களிலீடுபட்டாள்.

கிறிஸ்துமஸ் விடுமுறை. அவ்வருடம் காங்கிரஸ் மாளிகையில் நடக்கும் பொருட்காட்சி சாலையில் தனக்கேதாகிலும் வேலை கொடுக்க வேண்டுமென்று விண்ணப்பம் செய்துகொண்டாள். அவள் அதிருஷ்டம் காதி பண்டாரில் வேலை கிடைத்தது. காலை எழுந்ததும் எளிய உடையானாலும் சுத்தமாக உடுத்து மலர்ந்த முகத்துடன் காங்கிரஸ் மாளிகையை நோக்கிச் செல்வாள். மத்தியானம் உணவிற்கு வரும்போது அவள் சிஷ்யைகளுக்குப் பாடம் கற்பித்துச் செல்வாள். இரவில் பத்து மணிக்கு மேல் வந்து கண்ணயர்வாள். அன்று இரவு பத்து மணியாகிவிட்டது. மறுநாள் ஜனவரி முதல் தேதி. அனந்தராமனுக்குத் தூக்கம் பிடிக்கவில்லை. அவர் வாழ்க்கையில் பெரும் பள்ளம் தோண்டப்பட்ட நாள். அன்றுடன் ஆறாண்டுகள் முடிந்துவிட்டன. மறுநாள் புது வருடம் பிறக்கும்போது ஏழாவதாண்டு பிறக்கிறது. கட்டிலில் தம் அருகில் படுத்திருக்கும் சரோஜாவைப் பார்த்தார். "சரோஜா அவள் ரூபத்தை ஒத்திருக்கிறாள்......... ஆனால் அவளிடத்தை நிரப்ப உன்னாலாகுமா?" என்று முணுமுணுத்தார். என்ன அசட்டுக் கேள்வி? தம்மைத்தாமே கண்டித்துக்கொண்டான். மறுபடியும் திரை விலகிற்று. காவேரியில் நடந்த அரைக்ஷண திருச்யம். "அவள் யார்? எங்கிருக்கிறாள்? கேட்காமற் போனேனே! வலிய வந்தவர்களை வேதாந்தம் பேசித் துரத்தின நான் சுயமாய் அவளை வரிக்க.........சுயம்வரமா? அதிசயம் தான். மூன்று ஜாமத்திற்கு மேல் உண்பவரில்லை, முப்பதிற்குமேல் விவாஹமில்லை. முப்பத்தைந்திற்குமேல் விவாஹமா? என்ன பைத்தியக்காரத்தனம்?" சிந்தனை அலைகள் தரை மட்டத்திலிருக்கும் கரையை அணுக வந்ததும் தங்கள் நியமித ஸ்தலத்திற்குள் திரும்பிச் செல்லும் அலைகள் போல் எத்தனையோ வித யோசனைகள் அவன் மனதிற்குள்ளேயே புரண்டு அதற்குள்ளேயே அடங்கின. அச்சமயம் கிரீச் என்று கேட் திறந்த சப்தம். வந்து பார்த்தான். சந்திரிகையில் நில ஒளியில் நிதானமாய் நடந்து செல்லும் ஸ்திரீ மூர்த்தி 'பிருந்தாவன்' பின்புறத்தை நோக்கிச்

செல்லும் அவள் கிருஷ்ணனைத் தேடிச் செல்லும் கோபியா? அல்லது அறிவிழந்து ஆனந்த வெறி கொண்ட நிச்சல பக்தை ராதையா? அவள் யார்? எங்கிருக்கிறாள்? அவர் தன் சிந்தனையிலிருந்து விடுபடுவதற்குமுன் அவள்மறைந்தாள். ஒன்றும் தெரியவில்லை. அவள், அப்பொழுதுதான் காங்கிரஸ் மாளிகையிலிருந்து வந்தாள்.

5

அன்று ஜனவரி முதல்தேதி. அவர் மனது துடித்துக்கொண்டிருந்தது. இரவெல்லாம் சிந்தனையில் கதிகலங்கினார். காலை 'திதி' என்று கிரியைகளால் சங்கடப்படுகிறார். சுவர்க்க லோக வாஸியாகிய தம் மனைவியின் பிரதிநிதி வந்திருக்கிறாள். கருத்த பூதாகாரமான உடல். நரைத்த தலை. வாயில் ஓரிரண்டு பற்கள் மறைந்து சுருக்கம்விழுந்த கன்னங்கள். இவைகளைக்கண்டதும் அவருக்கு இன்னும் துக்கம் அவரை மீறிக்கொண்டுவந்தது. கடமை கடமை என்று கருத்தில்லாமல் நியமித்த சாஸ்திரங்களின்மேல் சலிப்புக்கொண்டார். அழகிய மேகவர்ணப்புடவை வாங்கியிருந்தார். அதை உடுத்து அக்கிழவி வீற்றிருப்பதைப் பார்த்ததும் அவர் கண்களில் நீர்த் துளித்தது சரோஜா அங்கு நடப்பவைகளை விசித்திரமாய்ப் பார்த்துக்கொண்டிருந்தவள் "அப்பா! புடவெ நன்னாருக்கப்பா! அக்கா உடுத்திண்டா......இன்னிக்கு என்னப்பா?"

"இன்னிக்கு......இன்......னிக்......கு... உங்......கம்......"

"என்னப்பான்னா?"

"இன்னிக்கு பண்டிகை. புது வருஷம் பிறந்திருக்கிறதோன்னோ?" அவன் குரலில் கரகரப்பு; சொல்லில் நடுக்கம்; கண்களில் கலக்கம். இவைகளை அக்குழந்தை அறியவில்லை. ஒன்பது வயது மூத்த பையன் மாத்திரம் மலைத்தான். இரண்டாவது பையன் இரண்டுங்கெட்டானாய் விழித்தான். சரோஜா மாத்திரம் "அண்ணா! அக்காவையும் நம்முடன் பக்ஷணம் திங்கக் கூப்பிடடா" என்றாள். 'அனந்தராம்' ஆச்சரியத்திலாழ்ந்தார். "அக்கா, அக்...கா...யார்?" அவள் அச்சமயம் வீட்டிலில்லை என்பது அவர்களுக்கு நினைவில்லை.

1939 செப்டம்பர் மாதம் உலக மஹா யுத்தத்தின் யுத்த பேரி முழக்கப்பட்டது. தேசங்களில் யுத்த அரக்கன் தன் நர்த்தனத் தாண்டவத்தை மெல்ல மெல்லத் தொடங்கினான். ஒவ்வொரு தேசத்தில் ஒவ்வொரு பாதத்தாண்டவம். யுத்தம் தொடங்கி மூன்று மாதம்தானாகிறது. 1940-ம் பிறந்தது. 'ஜனவரி' இரண்டாம்தேதி காலையில் அவள் தன் வேலைக்குச்சென்றுவிட்டாள். கருநாகம்போல் வளைந்து தொங்கும் பின்னலின் உச்சியில் அதற்கு முகப்பை ஏற்படுத்தியதைப்போல் மலர்ந்த ரோஜாமலர், நிர்மலமான பார்வை, இயற்கைப் புன்னகை, நிதானமான நடை. 'அவள் காங்கிரஸ் மாளிகைக்குச் செல்லும் போது பார்த்தால் 'பாரதமாதா' தன் எளிய மக்களின் துயரைப்போக்கச் சாந்தமான வடிவுடன் மந்தஹாஸத்துடன் வருகிறாளோ?' என்று தோன்றும் கலைஞனாயிருந்தால் அவள் ரூபத்தைச் சித்திரித்துக் காண்பிப்பான். மத்தியானம் அவள் உணவுக்கு வந்துவிட்டுப் செல்லும்போது குழந்தைகள் அவளைச்சுற்றி வளைத்துக்கொண்டன அவர்களைச் சுத்தப்படுத்தித் தலைவாரிவிட்டுச் சுத்த உடைகளை அணிவித்து அவர்களுக்கு நல்லவார்த்தை சொல்லி அவள் அவசரமாய்த் தன் வேலை நிமித்தம் சென்றாள்.

6

எங்குப் புகைந்ததோ? எவ்விடம் இச்சை கொண்டு தழுவினானோ? அக்னிதேவனின் ஆனந்தத் தாண்டவம். சுதேசப் பொருட்காக்ஷி சுடர் விட்டெரியத் தொடங்கியது. தெருவில் ஜனங்களின் கலகலப்பான பேச்சுக் குரல்கள். ஸ்திரீகளின் அர்த்தமற்ற அழைப்புக்கள். சாரணர்களின் சாஹஸச் செய்கைகள். பொருட்காக்ஷியைக்காண வெளியிடங்களிலிருந்துவந்த ப்ரேக்ஷகர்களின் ஏமாற்றக் குரல்கள். எல்லாம் சேர்ந்து வீட்டிற்குள் அடைந்து கிடந்தவர்களையும் வெளிவரச் செய்தது. அனந்தராமன் கணக்கற்ற யோசனைகளுக்கிடையில் கண்ணயர்ந்தான். சுவப்பனத்தில் காவேரிக் கன்னியின் கருணைச் செய்கை. மூன்று வருடமாயும் அன்று மலர்ந்த புஷ்பத்தைப்போல் அழகு பெற நின்றிருந்தது. விதிக் கடவுள் (பிரம்மா) முதலில் பிடித்த அழியில்லா அழகுப்பெண்ணா அவள்? ஸ்ரீ ரங்கநாதனுடைய சிரித்துக்கொண்டு வெளிவந்த ஸ்ரீ தேவியா? அல்லது குளிக்கச் சென்றவிடத்தில் தன்னை மயக்க வந்த மங்கையா?

அவருக்குக் கவலைச் சிகரத்திலிருந்து இறங்கியகளிப்பு. கனவின் கற்பனை. கனவிலும் ஓர் இன்பம். சுவப்பனத்தில் சுழன்றுகொண்டிருந்த 'அனந்தராமனை' அங்கும் நிலைக்கவிடாமல் ஜனங்களின் பற்பல குரல்கள் திடுக்கிடச் செய்தன. சரேலென்றெழுந்தார். 'சரோஜா' என்று கூவியபடியே வெளியில் வந்தார். பிள்ளைகளிருவரும் தெருவில் போவோர் வருவோரைப் பார்த்துக்கொண்டு நின்றிருந்தனர். "சரோஜா! சரோஜா! எங்கேடா சரோஜா?" என்று குரல் தழுதழுக்க நாற்புறமும் நோக்கினர். சரோஜாவைக் காணவில்லை. மணி நான்காயிற்று. போலீஸ் ஸ்டேஷன்களுக்கெல்லாம் 'போன்' செய்தார். அன்று 'காவேரி'யில் வீழ்ந்து பிழைத்தது இதற்காகவா? அன்று அவள் அளித்தாள். அந்தக் கருணாமயி, கன்னித்தெய்வம். இன்று......எவ்வித விஷயம் யார் மூலமாய் எப்படிக் கேட்க நேருமோ? என்று கவலையுடன் கண்ணீர்வடித்தபடி 'வெராந்தா'வில் உட்கார்ந்து ஆகாயத்தைப் பார்த்தவாறு வீற்றிருந்தார். காங்கிரஸ் மாளிகையைப் பிடித்த 'தீ' வானை நோக்கிச்சென்று புவியில் நடக்கும் அநியாயத்தை வானவர்களுக்கு மேகத்தின் மூலமாய்ச் (மேகசந்தேசம்) சொல்லி அனுப்பிக்கொண்டிருந்தது. மேகமும், புகையும் ஒன்றாய் லயிப்பதை உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தவரின் உள்ளத்தில் ஓர் எதிரொலி எழும்பியது. 'நேற்று வந்த அவள் தாய் இந்த ரூபத்தில் அவளை அவளுடன் ஐக்கியப்படுத்திக்கொள்ளுகிறாளா?' அவர் உன்மத்தனைப்போல் தம்முடைய நிலைமையை வெளியிட அசக்தரானார். உள்ளத்தில் கோரக் கொந்தளிப்பு.

வேலைக்குச்சென்ற அவளோ பொருட்காக்ஷியில் பிடித்த அக்கினியைக்கண்டு மருண்டாள். அலறி ஓடும் ஜனத்திரளைக்கண்டு நடுங்கினாள். தடமாடிக்கொண்டோடும்சிறு குழந்தைகளைத் தன்னாலியன்றமட்டும் வெளிக்கொண்டுவந்து சேர்த்தாள். இனி உள்ளே ஒருவரையும் அனுமதிக்கவில்லை. திகைத்து வாயிலில் நின்றாள். எத்தனை பொருள்கள், ஏழைகளின் கைப்பாடுகள், அக்கினிக்கு ஆஹுதியாயின! எத்தனை ரூபாய்கள் நஷ்டம்! இதுவும் இந்தியர்களின் துரதிருஷ்டமா? "ஒருநாளுமில்லாமல் திருநாளுக்கு வந்தால் திருநாளும் வெறுநாளாய்ப்போச்சு" என்பதைப்போல் தான் இவ்வருடம் வேலைக்கு வந்ததால் வந்த......என்று கலங்கியபடி நின்றிருந்தாள். அனாவசியக்கூட்டம் அதிகமாவதை நோக்கி இனி அங்கு நிற்பதில் பிரயோஜனமில்லை என்று வீட்டுமுகம் நோக்கி நடந்தாள். வழியில் எங்கோ "அக்கா" என்ற குரல். த்வனி வந்த திக்கை நோக்கினாள். கண்ணீருடன் அழுதுக்கொண்டிருக்கும் 'சரோஜா' யாரோ புதியவன்கையில். நெஞ்சம் படபடவென் றடிக்க அவளருகில் சென்று "சரோஜ்!" என்று அன்பொழுக அழைத்தாள். குழந்தை தாவிவந்து அவளிடம் அடைக்கலம்புகுந்தது. அவன் ஏதோ கேள்விகள் கேட்கத்தொடங்கினான். "சொல்லவேண்டிய இடத்தில் சொல்லுகிறேன்" என்று சொல்லிச் சென்றாள். 'எங்கோ யோசனை' பரீக்ஷைக்கு எப்படி ரூபாய் கட்டுவது? அத்துடன் படிப்பை நிறுத்திக் கொள்ளலாமா? அரைகுறையாய் நின்றால்... வேலை எப்படிக் கிடைக்கும்? பழக்கத்தின் வழக்கப்படி கால்கள் கொண்டுவந்து வீட்டில் சேர்த்தன.

சரோஜா அவள்மேல் உல்லாசமாய்ச்சாய்ந்துகொண்டு அன்னையின் அரவணைப்பைக்கண்டவள்போல் ஆனந்தத்துடன் நாற்புறமும் செல்லும் ஜனங்களின் கோலாஹல த்வனியைக் கேட்டவாறு பார்த்துக்கொண்டே சென்றாள். இரண்டொருமுறை அக்காவிடம் பேசினாள். அவள் யோசனையில் பதில் கொடுக்காததால் தன்னைப்போல் அவளும் வேடிக்கை பார்க்கிறாள் என்று நினைத்துக்கொண்டாள். வீடடைந்ததும் 'வெரந்தா'வில் வீற்றிருக்கும் தந்தையைக் கண்டதும் "அப்பா" என்று அழைத்தாள். தேனினுமினிய குழந்தையின் சொல்காதிற்படவே எரிமலையில் நின்றிருந்தவன்மேல் குளிர்ந்த தென்றல் வீசியதைப் போல் அவர் ஹிருதயம் குளிர்ந்தது. தம் ஆனந்தம் முழுவதையும் கண்களால் வெளியிட்டார். அவள் இடுப்பிலிருந்த குழந்தை சரசரவென்றிறங்கித் தந்தையை அணைத்துக் கொண்டது. அவள் வந்த திக்கைப் பார்க்கும் போதே அவ்விடம் சூனியமாயிற்று. அவ....ள், அவள்....எப்படி வந்தாள்?" அணைத்த குழந்தையின்மேல் தன்பாரம் முழுவதையும் ஏற்றி வெறிக்கப் பார்த்தார்.

"யாரப்பா?"

"உன்னை எடுத்து வந்தவள் தான்."

"நம்மாத்திலிருந்து தான்"

"என்ன?நம்மா....த்தி...லிருந்தோ.......?"

"ஆமாமப்பா! நம்பாத்து பின்பக்கம்தான் அந்த அக்கா இருக்கா" ஏக காலத்தில் குழந்தைகளெல்லாம் சேர்ந்து சொல்லின. அவர் பேந்தப் பேந்த விழித்தார். அர்த்தமற்ற சொல்லென்று அவர் அவர்களை வெறிக்கப் பார்த்தார்.

"ஐயையே! இதுகூட அப்பாக்கு தெரியல்லையே? நாம் இருக்கிற பங்களாவில் இருக்கும் அக்காவை"...... என்று குதித்துக் கொண்டு சிரித்தனர். குழந்தைகளிடம் எத்தனையோ கேள்விகளைக் கேட்டபின் அவர் ஒரு நிலைக்குவந்தார்.

7

தங்களைப் பாதித்த பத்மப்ரியன் மேற்குக் கன்னியின் கர்ப்பத்திலாழ்ந்த சந்தோஷத்தை தெரிவித்துக்கொண்டு நக்ஷத்திரங்கள் தங்கள் சிரிப்பைத் தோற்றுவித்துக்கொண்டு இயற்கையன்னையைக் கண்சிமிட்டி அழைக்கத் தொடங்கின. மல்லிகை, முல்லை, சந்திரகாந்திகள், இரவின்ராணி முதலிய மலர்கள் தங்கள் உற்சாகத்தை அவற்றைவிட அதிகமாய்த் தோற்றுவித்துக்கொண்டு 'ஏ நக்ஷத்திரங்களே! உங்களிடம் கண்சிமிட்டல் ஒன்றுதான். எங்களிடம் மணம், குணம், அர்ச்சாசக்தி, ஸேவா சக்தி, வசீகர சக்தி எல்லாம் இருக்கின்றன. இயற்கையன்னை எங்கள் அன்னை. எங்களைப் புனிதமாக்கின எங்கள் அன்னையை நீங்கள் அம்பரத்திலிருந்து விழித்துவிழித்துப் பார்க்க வேண்டியதே ஒழிய வேறில்லை" என்று ஏளனம் செய்துகொண்டு, சந்திரனை மாத்திரம் ஆடி அசைந்து தலைவணங்கி வரவேற்றன.

இவ்வளவு இன்பம் வீணுய்ப்போகும்போது அவள் மாத்திரம் நாற்புறச் சுவர்களுக்கிடையில், கயிற்றுக் கட்டிலில், கன்னத்தில் கை வைத்தபடி கண்ணை மூடிக்கொண்டு கண்ணீர் சோர வீற்றிருந்தாள். அவளுக்கு இவ்வுலக ஞானமே இல்லை. வாழ்க்கையின் வழி...... இல்லை......வாழ்வின் வழி......அதன் மேல் கவிழ்ந்திருக்கும் கனத்த பாறையைத் தள்ளும் வழியை ஆராய்ந்து கொண்டிருந்தாள். கல் தச்சனைக் கூப்பிட்டுக் கல்லுளியால் தகர்க்கலாமா? முடியாது. டைனமோ பிரயோசனப்படுமா? படாது. தன்னைப் படைத்த சைத்திரிகன் உளியை எடுத்துவந்து செதுக்கித் தள்ளினல்தானுண்டு. தன் வாழ்வு அவமான 'சாக்கிரி' (வேலை)யுடன்தான் கழியவேண்டும். கௌரவமான வேலை தன் தலையில் எழுதப் படவில்லை. இப்படியெல்லாம் நினைத்துக் கொண்டு அழுது கொண்டிருக்கும்போது, "அக்கா! அப்பா வரா......அக்கா! அக்கா!" என்று முன்புறம் பையன்கள் ஆர்ப்பரித்துக் கொண்டுவர அனந்தராமன் அவள் அறையின் வாசலில் வந்து நின்றார். பையன்களிருவரும் அவளைக் கட்டிக்கொண்டார்கள் இருபுறமும். சரோஜ் அவள் முகத்தைப் பார்த்து மலைத்து நின்றவள் 'அக்கா' என்று சுருதி கூட்ட ஆரம்பித்தாள். அவள் கவலைப்பாறை தகர்ந்து தூள் விழுந்தது. உதறிக்கொண்டு எழுந்தாள். அவளை எடுத்தணைத்துக்கொண்டு முத்தமிந்தாள். முன்புறம் தொங்கி ஊசலாடும் கூந்தலைக் கோதியபடியே, "சரோஜ்! ஏன் இப்போ வந்தே, படுத்துத் தூங்கவில்லையா? வாசு! ராஜு! நான் உங்களிடம் என்ன சொல்லியிருக்கேன்? உங்கப்பா வீட்டிலிருக்கும்போது நீங்கள் இங்கு வரக்கூடாது. விளக்கு வைத்தால் சமர்த்தாய்ப் படித்துவிட்டுத் தூங்க வேண்டும். அப்பாவையும் சிரமப்படுத்தக் கூடாதுன்னு சொல்லியிருக்கேனென்னே? ஏன் இப்பொழுது இந்த இருட்டில் வந்தீர்கள்?" என்று அன்புடன் கடிந்துகொண்டு கேட்டாள். அவள் குரலின் இனிமைதானென்ன? வசீகரிக்கும் வாணியின் குரலா? அவர் அப்படியே நின்றார். அவள் தூய்மையான அழகு அப்ஸரஸையும் பழிக்கக் கூடியதாயிருந்தது. அவள் இருபுறமும் நிற்கும் தம் மைந்தர்கள் சுந்தோப சுந்தர்கள் போலவும், சரோஜாவை எடுத்துக்கொண்டு நிற்குமவள் அம்ருதகலசத்தை ஏந்தி நிற்கும் மோஹினியைப்போலவும் தோன்றினர்கள். இம்மோகன திருச்யத்தைக் காண வனலக்ஷ்மியும் வகை வகையான வர்ணப் புஷ்பங்களை ஏந்தி நிற்கிறாளோ என்ற ஐயப்பாடும் தோன்றிற்று அவருக்கு. அவர் தியானதத்பரனை பக்தன் போல் கண்ணிமைக்காமல் நின்றிருந்தார். மறுபடியும் வாயிலில் நிற்கும் தந்தையைப் பார்க்கின்றன. இவளையும் பார்க்கின்றனர். அவர்கள் பார்க்கும் திசையை அவளும் பார்த்தாள். அறையிலிருந்த விளக்கு அவன் முகத்திற்குச்சரியாய் பளிச்சென்று பிரகாசிக்கிறது. மூலையில் தொங்கும் கண்ணாடியில் இவன் முகம் நன்றாகத் தெரிகிறது. அதில் பார்த்தாள். அவன் கவலையுள்ள முகம் அவளைத் திடுக்கிடச் செய்தது. நாக்குழற, "வாருங்கள்" என்றாள். அதற்குமேல் அவளால்

பேச முடியவில்லை. அவனால் பதில் கூடச் சொல்ல முடியவில்லை. யந்திரத்தைப்போல் நடந்து உள் சென்று, கட்டிலருகில் போய் நின்றான். எவ்விதம் உட்காருவது? அவ்விடம் இருப்பது அவ்வொரு கட்டில்தான்.

"உட்காருங்கள்" அவளே மறுபடியும் பேச வேண்டியதாயிற்று. மறுபடியும் மௌனம். குழந்தைகள் கூட.... அவ்விடம் மௌனத்திலேயே நிரம்பி இருந்தது.

திரும்பவும் அவள், "குழந்தைகள் விளையாட்டுப் புத்தியில் இருட்டையும் பாராமல் வந்துவிட்டார்கள். நான் அழைத்துவந்து விட்டிருப்பேனே! நீங்கள் சிரமப்படவேண்டியதாயி....ல்லை. அழைத்துச் செல்கிறீர்களா?"

அவன் ஹிருதயத்தைத் தடவிக்கொண்டான். அப்பள்ளங்கள் விரல்களுக்கு தடைபட்டனவோ என்னவோ? "நான் சிரமப்பட வேண்டாமா?" என்று தனக்குத்தானே சொல்லிக்கொண்டு அவளை நிமிர்ந்து நோக்கினான். அவள் தலை குனிந்தாள்.

8

திடீரென்று இருட்டையும் பிளந்துகொண்டு கரகரப்பான ஒரு குரல். அக்குரலில் ஓர் கனிவு, வேதனை, ஆவல் எல்லாம் ஒருங்கே ஒலித்தன. "இரண்டு வருடங்களுக்கு முன் ஸ்ரீரங்கத்தில் அன்று மத்தியானம் காவேரியில் விழுந்த என் சரோஜாவை எனக்களித்தவள் நீதானே? சொல்லு....சொல்லு....சிக்கிரம், உண்மையாய்ச் சொல்லு. நீதான்........ நீ தா....னே........"

அவள் முகத்தில் மின்னலைப்போல் ஓர் முறுவல் ஓடி மறைந்தது. குனிந்த தலையை நிமிர்ந்து நோக்கினாள். அவள் கண்களில் கருணை பொழிந்தது. அவள் கைகள் சரோஜாவை இன்னும் கெட்டியாய் அணைத்துக் கொண்டன.

"நான் கேட்டதற்கு பதில் சொல்லேன்.... நீ தா....னே........?"

அவள் தன்னுள் யோசித்தாள். உடல் சிலிர்த்தது. மெள்ள "இரு...க்...கா......"

"இருக்கலாம்.... என்ன? கண்டிப்பாய் நீதான். அன்று என் உயிரை மீட்டிக் கொடுத்தவளும் நீதான். அப்பா இனி என்னால்...."

நாட்கள் என்னும் இதழ்களால் போர்க்கப்பட்ட மலர் என்னும் மாதங்கள் மூன்று மலர்ந்து கால கர்ப்பதினுள் கலந்தன. ஏப்ரல் மாதம். தினகரனின் தீக்ஷண்ய ஜ்வாலை. பள்ளிக்கூடங்களுக்கு விடுமுறைகள். அவள் அன்றுதான் தன் பரீட்சையின் கடைசிப் பேப்பரை முடித்துவிட்டு, பெரிய பாரம் நீங்கப் பெற்றவளாய் வீட்டிற்குள் நுழைந்தாள். அனந்தராமனின் குழந்தைகள் அவளைக் கண்டதும் அவளுடன் உற்சாகமாய் விளையாடத் தொடங்கின. ஓடி விளையாடும்போது சரோஜா தடுக்கிவிழுந்து காலில் நல்ல அடிபட்டு அழத் தொடங்கினாள். அவள் காயத்தைக் கட்டி அவர்கள் வீட்டில் அவளைப்படுக்க வைத்தாள்.

இரவு அவள் விளக்கின்முன் விற்று பரீக்ஷை பத்திரங்களை எல்லாம் அடுக்கிக்கொண்டிருக்தாள். "அக்கா!" என்னும் சிறுவர்களின் குரல். திரும்பிப்பார்த்தாள் அவள் பார்வையில் "ஏன்?" என்னும் பிரச்னை தோன்றிற்று.

"அக்கா! சரோஜா ரொம்ப அழுரா. அப்பா உன்னைக் கூப்பிடரா"

சற்று மலைத்தாள். வேளையோ இரவு. கூப்பிடுவதோ......தன் மனதைத் தைரியப் படுத்திக்கொண்டு 'அப்பா என்ன செய்யறா?'

"சரோஜா பக்கத்திலே ஒக்காந்திருக்கா. சரோஜாவுக்கு காச்சல் வந்திருக்குன்னு அப்பா சொன்னா"

விளக்கை நிறுத்திவிட்டுத் தன் விடுதியின் கதவை மூடிக்கொண்டு குழந்தைகளுடன் அவள் சயன அறையில் நுழைந்தாள். அன்றுதான் அவ்வறையில் அவள் முதல் முதல் நுழைவது. வாயிற்படிக்கு எதிர்புரச்சுவற்றில் சாந்தமான அழகிய பதினைந்து வயது பெண் உருவம் ஒன்றின் புகைப்படம் பெரிதாய் மாட்டியிருந்தது. அதைப் பார்த்ததும் அவள் தலை தானாய் குனிந்து வணங்கிற்று. கட்டிலில் ஜுரத்தின் வேகத்தால் தினறும் குழந்தை "அக்கா! அக்கா!" என்று மெல்ல கூவிக் கொண்டிருந்தது. அனந்தராமன் கண்ணீர் சோர குழந்தையை கனிவாய் வருடியபடி வீற்றிருந்தார். அவர் உள்ளத்துள்ளோ கடாந்தகாரம். சயன அறையோ சூனியம். நாற்புரமும் தேக்கப்பட்ட குளத்தில் நீராழி மண்டபம்போல் எவ்வளவோ துக்கஊற்றிற்கு நடுவில் 'சரோஜா' குன்று. அது அவர்

ஜீவிதத்தின் பற்றுக்கோல் என்று அவர் முழு நம்பிக்கை.

உள்நுழைந்தவள் நிசப்தத்தைப் பிளந்துக் கொண்டு 'சரோஜ்' என்று அவள் தலைப்புரம் போய் நின்று தடவினாள். குழந்தை தன் வலியையும் சட்டைசெய்யாமல் "அக்கா" என்று தன் இரண்டுகரங்களை மேலெடுத்தது. அவன் ஹிருதயாந்தகாரம் பளிச்சென்று அகன்றது. "அப்பா, இனி என்னால் இந்த பாரத்தை எல்லாம் பொருக்கமுடியாது. நீ தான் பார்த்துக்கொள்ள வேணும்" என்றார். என்ன முரட்டுப்பேச்சு. ஓர் பெண்ணினிடம் முதல் முதல் தன் மனதை வெளியிடும் எவனும் இப்படிப் பேசுவானா ? என்று நினைக்கலாம், ஆம். அவனுடைய மனம் அவ்வளவு சிதைந்திருந்தது. அவனுடைய இச்சையை அதற்குமேல் அழகுப்படுத்தி சொல்ல அவனுக்கு அச்சமயம் சக்தியில்லை. அவள் கலீர் என்று நகைத்தாள். அவள் நகைப்பின் எதிரொலி இருட்டைப் பிளந்துக் கொண்டு ஆடும் மலர் செடிகளுடன் மறைந்தது. அவள் நகைத்தமுகம் இவனுக்கு சாந்தியை அளித்தது.

9

இனி வளர்த்துவானேன். அவள் கையில் அவர் வாழ்க்கையின் பத்திரங்கள் அன்றே கொடுக்கப்பட்டன. அவள் அதில் முதல்தர மாய்த் தேறுவாள் என்பதில் ஐயமே இல்லை. எங்கோ "ஆச்சானுக்கு மச்சான். மதனிக்கு உடன் பிறந்தான்" என்பவர்களை துணைக் கொண்டு, திருவற்றியூரில் சுவாமி சன்னதியில் விவாகத்தை முடித்துக் கொண்டார் அனந்தராமன். எல்லோரும் வலிய வந்து வற்புறுத்தியபோது வேதாந்தம் பேசினார். அவர் 'சுயம்வரம்' ஈடேறிற்று.

ஒருநாள் ஆபீஸில் வேலைசெய்ய வெறுப்பாய் இருந்ததால் சீக்கிரமே வீட்டிற்கு வந்தார் அனந்தராமன். ஹாலில் குழந்தைகளுக்கு கல்வி கற்பித்துக் கொண்டிருந்தாளவள். அவள் அன்பிற்கு வியந்து பார்த்துக் கொண்டே நின்றிருந்தார். ட்ரைவர் 'சிகார்ட்' ஸை ஆபீஸ் அறையில் வைத்துவிட்டு வந்து "நான் போகலாமா ?" என்று கேட்டான். குரலோசையைக் கேட்டு திரும்பிப் பார்த்தாள். திகைப்புடன் குரலில் கவலை தொனிக்க "என் இவ்வளவு சீக்கிரம் வந்தது?" என்று கேட்டுக் கொண்டே எழுந்து "நீங்களெல்லோரும் சமத்தாய் எழுதிக்கொண்டிருங்கள்" என்று சொல்லி அடுக்களையில் புகுந்தாள். அவசர அவசரமாய் 'காபி' போடத் தொடங்கினாள். அவள் பின்புறமே வந்து நின்ற அவர்,

"கார்யேஷு தாஸி
கரணேஷு மந்திரீ
'காவேரி' கன்யாம்—"ஊஹூம் தப்பு தப்பு" காருண்ய சித்தாம் காவேரி கன்யாம்"

என்று குறும்புடன் பாடினார்.

"கவிச்சக்கரவர்த்தி 'போஜராஜன்' காலம் கூட அல்லவே, அக்ஷலக்ஷம் கொடுக்க......" என்று சொல்லியவாறே காபியைக் கலந்தாள்.

"எதற்கோ?"

காபியை அவர் கையில் கொடுத்து "சுயகவனத்திற்கு" என்றாள்.

"ஓஹோ! எனக்கேன் அரசன்? என் அரசி 'காவேரி' எனக்கு வேண்டியதை அளிக்க இருக்கும்போது......"என்று குறும்புத்தனம் செய்தார். அவள் சற்று விலகி நின்றாள்.

அவர் கண்களில் ஏமாற்றம். ஏமாற்றத்தின் சீற்றம் குரலில் தொனித்தது. "ஒன்று வேலை, ஒன்று குழந்தைகள். அலுப்பு சலுப்பு இல்லையா? காபியும் வேண்டாம், மண்ணும் வேண்டாம். வா! சற்றுநேரம்......உட்காரு" என்று அவள் கையைப் பிடித்திழுத்தார். நிமிர்ந்து பார்த்தாள். அவர் கண்களில் விளையாடும் குறும்புத்தனத்தைக் கூர்ந்து நோக்கினாள்.

"நன்றாயிருக்கிறது, சற்று வழிவிடுங்கள். குழந்தைகள் பாடம் எழுதியாயிருக்கும். வெட்கக்கேடுதான்" என்று சிரித்துக் கொண்டே அப்புறம் சென்றாள்.

சிரித்தமுகத்துடன் வரும் சிற்றன்னையை நோக்கி குழந்தைகளும் கலகலவென்று சிரித்தனர். அர்த்தமற்ற அக்குழந்தைகளின் சிரிப்புடன் அவளும் தன் அர்த்தமுள்ள சிரிப்பை அள்ளி வீசியபடி அனந்தராமனை பெருமையுடன் பார்த்தாள்.

தன் 'சுயம்வர'த்தால் கிடைத்த காவேரியை மகிழ்வுடன் பார்த்து மலைத்து நின்றான். 'காவேரி'யின் ஓட்டம் அவர் மனோ ஓட்டத்தை அடக்கி விட்டது.

ரகுவின் ஜயம்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

கே. சு.

5

ரகு நேரே விஜயாவின் வீட்டிற்குச் சென்றான். சூபரின்டெண்டெண்டும், அவர் சம்சாரமும், வெளியில் செல்லப் புறப்பட்டுக்கொண்டிருந்தார்கள். இவனைக்கண்டதும், "ரகு! நாங்கள் ஒரு கல்யாணத்திற்காகத் திருப்பரங்குன்றத்திற்குச் செல்லுகிறோம். அநேகமாய் நாளைக் காலையில்தான் வருவோம். விஜயா எங்களுடன் வரவில்லை, அதனால் நீங்கள் ஸாரஸாவின் காரில்தான் வெளியில் செல்ல வேண்டும்" என்றார்.

"அதற்கென்ன அப்படியே செய்கிறது" என்றான்.

பிறகு சிநேகிதர்கள் யாவரும் ஒன்றுகூடி 'மாட்னி சினிமா' முதலிய இடங்களுக்குச் சென்றுவிட்டு, இரவு எட்டு மணிக்கு அவரவர் வீடு சென்றார்கள். ரகுவும் விஜயாவை அவள் வீட்டில் விட்டு விட்டு, தன் வீட்டிற்குக் கிளம்பினான். வீட்டில் சண்டையிட்டுக் கொண்டு வந்தாலும், தாயின் அன்பான வரவேற்பு நிச்சயமாகக் கிடைக்குமென்பது அவனுக்குத்தெரியும். இவ்வளவு நேரம், விளையாட்டிலும், விஜயாவின் புன்சிரிப்பினாலும், மன நிம்மதியாக இருந்தான். வீட்டிற்குக் கிளம்பும்பொழுது மனம் சஞ்சலமடைந்தது. தகப்பனார் என்ன நிலைமையில் இருக்கிறாரோ என்ற கவலை தோன்றலாயிற்று. யாவற்றையும் உள்ளடக்கி, புன்சிரிப்பை வரவழைத்துக்கொண்டு, "விஜயா சென்றுவருகிறேன், 'குட்நைட்'" என்றான்.

"தாங்கள் இன்று இங்கே சாப்பிட்டுவிட்டுத்தான் போகவேண்டும்"

"ஏன் அப்படி? வேண்டாம், நாழிகை ஆய்விட்டது நான் சென்றுவருகிறேன்" என்று அவள் கையைப்பிடித்துக் குலுக்கினான்.

"சாப்பிடமாட்டீர்களா? அப்படியானால் எனக்கும் சாப்பாடு வேண்டாம்; தனியாகச் சாப்பிடவேண்டுமே என்று துணைக்குக் கூப்பிட்டால் கிராக்கி பண்ணிக்கொள்ளுகிறீர்களே! வேண்டாம் போய்வாருங்கள்" என்றாள் கோபமாக அவன் கைக்குள்ளிருந்த தன் கையை இழுத்துக்கொண்டே.

"அடேயப்பா? எவ்வளவு கோபம். சரி. உன்னிஷ்டம், சாப்பிடுகிறேன் வா!" என்று அவள் கையைப் பிடித்துக்கொண்டு உள்ளே சென்றான்.

இருவரும் சாப்பிட உட்கார்ந்தார்கள். சமையல்காரன் சாதம் போட்டான். சாப்பிட்ட பிறகு, ரகு புறப்படுவதற்காக சைக்கிளை எடுத்தான். அது பஞ்சராகியிருந்தது. நான் மத்தியானம் வைக்கும்பொழுது நன்றாக இருந்த சைக்கிள் எப்படிப் பஞ்சராயிற்று? என்று சொல்லிக்கொண்டே திரும்பினான். விஜயா சிரித்துக்கொண்டு அவன் பின்னால் நின்றாள்.

'போனால் போகிறது. காலையில் ரிப்பேர் செய்யச்சொல்லுகிறேன்."

"இப்பொழுது எப்படி வீடுபோய்ச் சேருவது?"

"போகத்தான் வேண்டுமோ? எனக்குத் துணையாக இரவு இங்கே தங்கக்கூடாதா?"

"எனக்கு ஆக்ஷேபணையொன்றுமில்லை. ஆனால் யாராவது ஏதாவது சொன்னால்? மேலும், வீட்டில் தகப்பனாரிடம் கொஞ்சம் வார்த்தை வளர்ந்துவிட்டது. அதனால் அவசியம் போய்த்தீரவேண்டும்" என்று வீட்டில் நடந்த விஷயத்தைச் சொன்னான்.

"அதனாலென்ன காலையில் போனால் இன்னும் நல்லது. அவர் கோபம் நன்றாக ஆறிவிடும். நம்மை யார் என்ன சொல்லமுடியும்?"

"ஆனால் இன்று நான் இங்குத் தங்கவேண்டுமென்பது உனது விருப்பமா?" என்று அவள் கையைப்பிடித்து அழுத்தியவண்ணம் கேட்டான்.

'பிறகு ஏன் சைக்கிளை பஞ்சர் செய்தேன்' என்றாள் சிரித்துக்கொண்டே.

"இது உன்னுடைய வேலையா?" என்று அவள் முதுகில் தட்டிக்கொடுத்தான். பிறகு

இருவரும் தோள்மேல் கையைப் போட்டுக் கொண்டு மாடிக்குச் சென்றார்கள். விஜயா வெற்றிலை மடித்துக்கொடுத்தாள். சற்று நேரம் ஏதோ அன்று பார்த்த சினிமாவைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள். பிறகு விஜயா கீழே சென்று வேலைக்காரர்களை அனுப்பிவிட்டுச் சமையல்காரனை வாசலில் படுக்கச்சொல்லிவிட்டு, பாலுடன் ரகு இருக்குமிடம் வந்தாள். ரகு பின் வராந்தாவில் நிலவில் கையில் தலையைத் தாங்கியவண்ணம், ஒருக்களித்துப் படுத்துக்கொண்டிருந்தான். விஜயா பக்கத்தில் உட்கார்ந்து பாலைக்கொடுத்தாள். படுத்தவாறே சாப்பிட்டுவிட்டு, அவளை அணைத்துக்கொண்டான். சற்றுநேரம் ஒருவரையொருவர் பார்த்துச் சிரித்தவண்ணம் இருந்தனர். பிறகு,

"விஜயா! இந்நிலவும், இளங்காற்றும், உன் அழகிய முகமும், என் மனதில் என்றுமில்லா ஓர் தனி ஆனந்தத்தையளிக்கின்றன. உனக்கெப்படித் தோன்றுகிறது?" என்று கேட்டான் ரகு.

"அதைச் சொல்லவும் வேண்டுமா? கரை காணா ஆனந்தம்." இப்படியாக இருவரும் மனம் விட்டுக் காதல் சம்பாஷணையில் ஈடுபட்டிருந்தார்கள்.

"விஜயா! நாம் இப்பொழுதிருக்கும் நிலைமை உனக்கு எதை நினைப்பூட்டுகிறது" என்றான் சிரித்துக்கொண்டே.

"நீங்கள் சொல்லுவதின் அர்த்தம் விளங்கவில்லையே?"

"உனக்கு இப்பொழுது 'சாகுந்தலம்' தானே சமஸ்க்ருத பாடம் நடக்கிறது. அதில் சகுந்தலை, துஷ்யந்தன் காந்தர்வ கல்யாணம் நடக்குமிடத்தை வாசித்திருக்கிறாய் அல்லவா? மஹாகவி காளிதாஸ் அவ்விடத்தை எவ்வளவு அனுபவித்து எழுதியிருக்கிறார். இப்பொழுது நமது நிலைமை அவ்விதமிருக்கவில்லையா?"

"வாஸ்தவமே நீங்கள் சொல்லுவது ஆனால் நாம் க்ஷத்திரியர்களல்ல" என்று சிரித்துக்கொண்டே அவன் கன்னத்தை லேசாகத் தட்டினாள். "யாராயிருந்தால் என்ன? மனமொத்தபின் மணம் ஆனதுபோல்தானே."

"அதனால்?" என்று கேட்டுக்கொண்டே அவன் அணைப்பிலிருந்து விலகித் தள்ளி உட்கார்ந்தாள்.

"பின் ஏன் இங்கே தங்கும்படி கேட்டுக்கொண்டாய்?"

"என்றுமே தாங்கள் எனக்குப் பாதுகாப்பாளராக இருப்பதால் இன்று இரவு, எனது பாதுகாப்பின்பொருட்டுச் சொன்னேன். நீங்கள் இந்தவிதம் அர்த்தம் செய்துகொள்ளுவீர்களென்று நான் நினைக்கவில்லை."

"நான் ஒன்றும் தப்பர்த்தம் கொள்ளவில்லை; நல்ல அர்த்தமே."

இப்படியாக இருவரும் கொஞ்சநேரம் வாக்குவாதம் செய்தார்கள். கடைசியில், காலம், இடம், பருவம், வயது, பௌர்ணமி நிலவு, ஸ்பர்சம், தனிமை, இவை யாவும், அவர்களின் புத்தியைத் தடுமாறச்செய்தன. விஜயா தலை குனிந்தாள்.

திருப்பரங்குன்றம் சென்றவர்கள் இரவு மூன்று மணிக்கு வந்துவிட்டார்கள். பாட்டி கதவைத் திறந்துவிட்டாள். இருவரும் பிரயாண அலுப்பினால் ஒன்றையும் கவனிக்காமல் மாடிக்குச் சென்றார்கள். அவர்களின் அறை உட்புறம் தாளிடப்பட்டிருந்தது. தகப்பனார் இல்லாத சமயம் விஜயா அவர் அறையில் படுப்பது வழக்கமாதலால் கதவைத் தட்டினார்கள். ரகுவும் விஜயாவும், நல்ல நித்திரையிலிருந்தார்கள். கதவு தட்டின சத்தம் கேட்டதும், இன்னதெனப் புரியாமல் ரகு வந்து கதவைத் திறந்தான். ஆத்மநாதய்யர் இவனைப் பார்த்ததும்,

"ஓஹோ ரகுவா! விஜயாவிற்குத் துணையாக இரவு இங்கே தங்கச்சொல்லலாமா என்று நினைத்தேன். பிறகு, உன் வீட்டில் என்ன நினைப்பார்களோ என்று பேசாமல் போய்விட்டேன். நிரம்ப வந்தனம்" என்று சொல்லிக்கொண்டே உள்ளே நுழைந்து விளக்கை ஏற்ற ஸ்விச்சைப் போட்டார். விஜயா தலை குனிந்தவாறு, கண்களில் ஜலம் தளும்ப சுவரோரமாக நின்றுகொண்டிருந்தாள்.

"அய்யரின் சந்தோஷம் ஒரு நொடியில் பறந்தது. ரகுவைத் திரும்பிக் கடுமையாகப் பார்த்தார். கதவைத் திறக்கும்பொழுது தூக்கக்கலக்கத்தால் ஒன்றும் புரியவில்லை. ஐயரைக்கண்டதும் திடுக்கிட்டுப்போனான். தனது நிலைமையை அப்பொழுதே உணர்ந்தான். பிறகு அவரின் சமாதான வார்த்தையினால், மனம் சற்று அமைதியுற்றது. அப்பொழுது அவர் கோபத்துடன் 'ரகு!' என்

றதும் பதில் பேசச் சக்தியின்றித் தலைகுனிந்தான்.

பிறகு வேறு ஒன்றும் பேசாமல், அவனைத் தனது ஆபீஸ் அறைக்கு அழைத்துச் சென்றார். தாயார் உள்ளே வந்து 'விஜயா' என்றாள். பதில் பேசாமல் தகப்பனார் ரகுவை அழைத்துப்போய் என்ன செய்துவிடுவாரோ என்ற பயத்தினால் தாயாரைத் தாண்டி ஓட்டமாக ஆபீஸ் அறை வெளியில் ஜன்னலுக்கருகில் மறைவாக நின்று உள் நடப்பதைக் கவனித்தாள்.

ஆத்மநாதய்யர் ரகுவை ஒரு நாற்காலியில் உட்காரச்சொல்லிவிட்டுத் தானும் ஒரு நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு, ஒரு காகிதத்தில் ஏதோ எழுதினார். அதை ரகுவினிடம் நீட்டி "இதைப்பார்த்து இன்னொன்று எழுதிக்கையெழுத்திடு" என்றார் போலீஸ் அதிகாரத்துடன்.

கைதிபோல் பணிவாக அவர் சொன்னபடி செய்தான்.

பிறகு எழுந்து அவன் பக்கத்தில் போய் நின்று, முதுகில் அன்பாகத் தட்டிக்கொடுத்து "ரகு! குற்றத்திற்குத்தகுந்த அபராதம், நான் வாங்கும்படியாய்விட்டது. ஆனால் நீ ஆண் பிள்ளை. தப்பித்துக்கொள்ளலாம். நானோ! பெண்ணைப்பெற்றவன். 'பழியானது' என்னையே சாரும். உலகத்தின்முன் தலைகுனிய நேரிடும். என் குழந்தையின் நன்மைக்கே, இக்காகிதம். நீ வருத்தப்படமாட்டாய் என்று நம்புகிறேன். கூடிய சிக்கிரம் கல்யாணத்திற்கு ஏற்பாடு செய். இவ்விஷயம் நமக்குள்ளேயே இருக்கும். நீ எப்பொழுதும் போல் வந்துபோய்க்கொண்டிருக்கவேண்டும். இல்லையேல் வீண் வம்பும், ஸந்தேகமும் உண்டாவதற்கு இடமாகும். இனிமேல் மரியாதையாக நடந்துவா. படித்த முட்டாளாகாதே. மீதமுள்ள இரவை, இந்த அறையிலேயே கழித்துவிட்டு விடிந்த பின்பு போகலாம்" என்றார்.

ரகுவிற்கு இவ்வார்த்தை 'ஐந்து நாள் பட்டினியிருந்தவனுக்குத் திடீரென ராஜ போஜனம் கிடைத்தது போலிருந்தது'! தலையை நிமிராமலே, "என்னை மன்னிக்க வேண்டும், உங்கள் உத்தரவுப் பிரகாரம் நடக்கிறேன்" என்றான்.

"சரி! படுத்துக்கொள்" என்று சொல்லிவிட்டுத் தன் படுக்கையறைக்குச் சென்றுவிட்டார். அங்கு அவர் தர்மபத்தினி ஒன்றும் தோன்றாமல், கிலிபிடித்தவள்போல் உட்கார்ந்திருந்தாள். இவரைப் பார்த்ததும் என்ன! என்பதுபோல் அருகில் வந்தாள்.

சட்டையைகழற்றிக் கொண்டே, "பெண் வளர்த்த லக்ஷணம் நன்றாக இருக்கிறது. நாகரீகமாம் மண்ணாங்கட்டி, பெரியவர்கள் செய்திருந்த ஏற்பாடே மேலானது" என்று உறுமினார்.

"என்ன செய்தீர்கள்" என்றாள் பயந்துகொண்டே.

"செய்தேன். உன் பெண்ணோ, நீயோ, லக்ஷணமோ? இப்படிக்கட்டுமீறி, பெண் நடக்கும்படி இடங்கொடுத்தவள் நீதானே; இப்படி தன்னைக் காத்துக்கொள்ளாத வகையில், ஏன் பெண்வளர்த்தாய்? நாகரிகம், நாகரிகம், என்று நடக்கத்தலைப்பட்டது, இப்பொழுது மானம் போகிற வழியாகிவிட்டது. ஏதாவது, தகரார் ஏற்பட்டால், என் மானம் கப்பலேறிவிடும். பெண்ணை ஊறுகாய் போட்டு வைக்கிறதா?" என்று அதுவரையிலும், கடுமையான வார்த்தையே சொல்லாத அய்யர், வாயில் வந்தவிதம் திட்டினார். பிறகு தான்செய்துவந்த காரியத்தைச்சொன்னார்.

"ஐயோ! அதற்குள் அவசரப்பட்டுச் செய்தீர்களே? அவன் என்ன நினைப்பான். நாளைக் காலையில், சமாதானமாகச் சொல்லலாமே"

"அவன் நினைக்க என்ன இருக்கிறது. ஆறின கஞ்சி பழங்கஞ்சியாய்விடும். விடிந்தபின் பிள்ளையாண்டான் புத்தி எவ்விதமிருக்குமோ? தன்குற்றம் உணர்ந்து கவலையின் உணர்ச்சியிருக்கும் பொழுதுதான் நாம் சொன்னபடி செய்வான். கொஞ்சம் சிந்திக்க இடம்கொடுத்தால் அபூர்வயோசனை ஏதாவது உதித்துவிடும் பிறகு நாம் ஏமாந்தவர்களாகி விடுவோம். இவ்வளவு நாள் இந்த உத்யோகம் பார்த்து வந்ததற்குச் சொந்த விஷயத்தில், முன்ஜாக்கிரதை பண்ணாமலிருந்தால், என்ன இருக்கிறது?"

ஐயர் நிச்சிந்தையாய் உறங்கிவிட்டார். அம்மா, நித்திரையில்லாமல் புரண்டுகொண்டிருந்தாள். 'நாகரிகத்தின் எதிர்காலம் எந்தப் பாதையில் சென்று விடுமோ' என்ற கவலை அப்பொழுதுதான் வருத்திற்று.

ஐயர் சென்றபிறகு ரகு ஒன்றும் தோன்றாமல் கல்சிலைபோல் அசைவற்று உட்கார்ந்

திருந்தான். தகப்பனார் மாடிக்குச்சென்றதும் மெதுவாக விஜயா உள்ளேவந்து விளக்கை அணைத்துவிட்டு ரகுவின் பக்கம் வந்து அவன் மடிமேல் உட்கார்ந்து கொண்டு, கழுத்தில் கைபோட்டு முகத்தோடு முகம் வைத்து, "என்னைக் கைவிடமாட்டீர்களே?" என்றாள்.

அன்பாக, அவள் நெற்றியில் விழும் கேசத்தை விலக்கிக்கொண்டே, "நானா உன்னைக்கை விடுவது? உனக்கு ஏன் இச்சந்தேகம்?"

"இல்லை. தாங்கள் ஆண்சிங்கம். எதுவும் செய்யலாம். ஆனால் என் நிலைமை? நாகரிகமென்று, அச்சமின்றி நடந்தாலும், ஸ்த்ரீகளுக்குரிய கடமையையும், தர்மத்தையும் விட்டுக்கொடுக்க, நான் விரும்பவில்லை. சாயங்காலம் தாங்கள், தகப்பனாரின் மனதைச் சொல்லியபடியால், ஒருசமயம் அவர்கள் வார்த்தைக்குக் கட்டுப்பட்டு என்னைக்கை விட்டால் என் நிலைமை என்னவாகும்? பிராணனைத் தியாகம் செய்வதைத்தவிர வேறு வழியில்லை." சாயங்காலம் இருந்த 'தமாஷ்' மனநிலையில் இவைகளொன்றும் தோன்றவில்லை. இப்பொழுதோ, சஹிக்கக்கூடாத சங்கடமாக இருக்கிறது."

"விஜயா! நீ விதியை நம்புகிறாயா?"

"எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. இந்த நிமிஷமுதல் எதையும் நம்பித்தான் ஆகவேண்டும் என்ற உணர்ச்சி ஏற்படுகிறது. நீங்கள் எப்படிச்சொன்னாலும், அதையேற்கவே என் மனம் துடிக்கிறது."

"நாம், இன்று, விதிக்கும், காலத்திற்கும் அடிமையாய் விட்டோம் ஆனால் நான் உன்னைக் கைவிடுவேனென்பது மட்டும் கனவிலும் நடவாத விஷயம். 'உண்மைக்காதல்' என்பது தெய்விகமானது என்றால், நம்மை ஒருவராலும் பிரிக்க முடியாது. என் ஹ்ருதயத்தில் இனிமேல், உன்னைத்தவிர வேறு ஒருவருக்கும் இடமில்லை, நீ வீணாக வருத்தப்படாதே. ஒருகால் நான் அப்படித்தவறிவிடுவேனோ என்ற பயத்தால் உன் அப்பா என்னை எட்டுக் கோர்ட்டிற்கு இழுத்துச் சந்தி சிரிக்கும் படியான, ஆதாரத்தை எழுதிவாங்கியிருக்கிறார். நானும் உன் நன்மையை உத்தேசித்தே மறுபேச்சின்றி எழுதிக்கொடுத்தேன்" என்றான். சற்றுநேரம் இருவரும் மௌனமாக இருந்தார்கள். பிறகு "என்னால் தான் இவ்வளவு விபரீதம். நான் உங்களை இவ்விடம் தங்கும்படி செய்திராவிட்டால்........." என்றாள் விஜயா.

"ஒருவர்மேலும். குற்றமில்லை விஜயா! எல்லாம் விதியின் செயல். எல்லாம் நன்மையாகவே முடியும், கவலைப்படாதே. நம்மிருவரின் அன்பு உண்மையானது என்பதில் ஐயமில்லை. ஒன்று செய்வோம், நாம் இன்று ஒரு சபதம் செய்து கொள்ளுவோம்."

"அது என்ன?"

"நான் எவ்விதமேனும் முயற்சிசெய்து, என் பெற்றோரைச் சம்மதிக்கச் செய்த பிறகே இக் கல்யாணம் நடைபெறும். அவர்களறியாமல் நான் கல்யாணம் செய்து கொள்ளப்போவதில்லை.

இக்கலப்பு விவாகத்தில் என்னைப்போல் இருவர் துணிந்து உறுதியுடன் நடந்தால்தான் தேசமக்கள் முன்னேற மார்க்கமுண்டு அப்படி அவர்கள் சம்மதிக்காதவரையில், நான் பிரும்மசாரியாகவே இருக்கவேண்டும், நீயும் கன்னிகையாகவே இருக்கவேண்டும். ஒருவருக்குப் பயந்து நாம் ஒருகாரியமும் செய்யக்கூடாது" என்றான்.

"இதை நீங்கள் சொல்ல வேண்டுமா? உண்மையாகவே நீங்கள் என்னைக் கைவிட்டுவிட்டாலும், என்காலம் கன்னிகையாகத்துன்பத்துடன் கழிக்கவேண்டுவது இயற்கையன்றோ" என்று சொல்லும் பொழுதே, துக்கம் நெஞ்சடைத்தது. அவள் கண்ணீர் ரகுவின் கையை நனைத்தது.

"விஜயா, வருந்தாதே. நீவருந்தினால் என் மனமும் கலங்குகிறது. வீண் பிரமை ஏன்? நிச்சயம் நாம் வெற்றி பெறுவேம்" என்று அவளை இறுக.......................................ன்.

அந்த அணைகடந்த இன்பத்தில் தன்னை மறந்து லயித்திருந்தாள் விஜயா.

6

அன்று சென்டரல் ஸ்டேஷனில் கூட்டம் நிறைந்திருந்தது. பத்திரிகை விற்பவர்களும், சாமான்கள் விற்பவர்களின் ஆரவாரமும் நிறைந்திருந்தன. கல்கத்தா மெயிலில் இரண்டாவது வகுப்பு வண்டியில் ரகு உட்கார்ந்திருந்தான். அவன்கூட நாற்பது வயதைத்தாண்டிய இரண்டு ஸ்த்ரீகளும் ஐம்பது வயது மதிக்கும்படியான இரு ஆடவர்களும் இருபத்து ஐந்து வயதுடைய இரண்டு வாலிபர்களும் உட்கார்ந்திருந்தார்கள்.

"ரகு! கல்கத்தாவில் எவ்வளவு நாள் வேலை பழகவேண்டும்? டெல்லிக்கு எப்பொழுது போகவேண்டும்? சம்பளம் எவ்வளவு?" என்று கேட்டார் அவன் மாமா விச்வநாதய்யர்.

"கல்கத்தாவில் இரண்டு மாதம் வேலை பழக வேண்டும். சம்பளம் நூறு, டெல்லிக்குப் போன பிறகு இருநூறு. அநேகமாக ஆறு மாதத்தில் பட்டணத்திற்கே வரும்படியாக இருக்கும்" என்றான்.

"அஃதெல்லாம் சரிதான். நீ இப்படித்தகப்பனாரை எதிர்த்து நிற்கலாமா? அவர் எவ்வளவு வருத்தத்தின் பேரில், 'ரகு கல்கத்தா போகிறான். வேண்டுமானால் ஸ்டேஷனில் போய்ப்பார். நான் அவனை வழியனுப்பவில்லை' என்று எனக்குத்தந்தியடித்திருக்கிறார்" என்றார் அத்தை புருஷன் கோவிந்தய்யர்.

"அப்பா சொன்ன எவ்விஷயத்திற்கும் கட்டுப்பட்டே நடக்கிறேன். ஆனால் கல்யாணம் என்பது என் ஆயுள்வரை பாதிக்கக் கூடியதன்றோ? இவ்விஷயத்தில்கூட என்னிஷ்டப்படி நடக்காமல் முடியுமா?

"அதற்காக ஜாதிவிட்டு ஜாதி கல்யாணம் செய்வார்களா? ஏதோ எல்லோரையும் போல் நம்ம ஜாதிப் பெண்ணாக இருந்தால் தேவலை என்றாள்" அத்தை.

"நான் பார்த்திருக்கும் பெண், கிறிஸ்துவச்சியா? துலுக்கச்சியா? முதலியாரா? நாயுடுவா? அல்லது வைஷ்ணவர்களா? நமது ஸ்மார்த்த ஜாதிதானே. பேய் பிசாசு என்று நாமாகச்செய்து கொண்டதுதானே. அதனால் இதில் தப்பொன்றுமில்லை"

"என்னமோ, ரகு! நன்றாக யோசித்துப் பார்! உனக்கு எவ்வளவோ பேர்கள் பெண்ணைக் கொடுக்கக் காத்துக்கொண்டு இருக்கிறார்கள். பி, ஏ. படித்த பெண்களும், வீணை, முதலியவை கற்று, சங்கீதத்தில் கரைகண்டவர்களும் அழகில் ரதி போன்றவர்களுமான பெண்கள் வேண்டியபேர்கள் இருக்கிறார்கள். நீ ஏன் அவர்களில் ஒருவளைத் தேர்க்தெடுக்கக் கூடாது!" என்றாள் மாமி.

"எல்லாமிருக்கலாம் மாமி! என் உத்யோகத்திற்காக வேண்டியபேர்கள் காத்திருப்பார்கள். ஆனால் என் மனதிற்குப் பிடிக்கவேண்டாமா?" என்றான் ரகு.

"அப்படி நீ பார்த்திருக்கும் பெண் என்ன அழகில் ரம்பையா?"

"அத்தே! அவள் ரம்பையல்ல. சாதாரண அழகுள்ளவளே. ஆனால் என்மனதிற்கு ரம்பையாகத் தோன்றுகிறாள்? அவ்வளவே"

"ரகு! காதல் உயர்ந்ததே; ஆனால் கடமையும் பெரிதே. நன்றாக யோசித்து உன் தந்தை சொற்படி நட. அவர்கள் வேறு இடம் பார்த்துக்கொள்ளட்டும். பீஷ்மர் தகப்பனார் பொருட்டுச் செய்த தியாகத்தை நினைத்துப் பார்" என்றார் மாமா.

"மாமா! என்ன நீங்கள் கூட இப்படிச் சொல்லுகிறீர்கள்? பீஷ்மர் த்யாகம் வேறு விதம், என் விஷயம் வேறு. 'ஜவஹர்லால்நேரு' தம் பெண்ணின் கல்யாணத்திலே என்ன செய்தார்? யாவருக்கும் எந்த விதியை எடுத்துச் சொன்னார். அப்பா அம்மாவை மீறி, அறியாமல் கல்யாணம் செய்யப்போவதில்லை. ஆனால் இந்தப்பெண்தான். அவர்கள் சம்மதம் கிடைக்காவிடில் எவ்வளவு காலமானாலும். நான் பிரும்மசாரியாகவே காலம்கழிப்பேன். அவளும் கன்னிகையாகவே இருப்பாள். இது எங்களின் உறுதியான சபதம்" என்றான்.

"ரகு உன்சபதம் எதுவரை நிறைவேறுகிறதோ பார்க்கலாம்" என்று முதுகில் தட்டிக்கொடுத்தார்கள். அவனது நண்பர்கள் சீனுவும், வாஸுவும்.

அதற்குள் ரயில் கிளம்பும் சமயம் ஆய்விட்டது. ரகுவைத்தவிரயாவரும் கீழே இறங்கினார்கள். மாமா உங்களுக்கெல்லாம் நமஸ்காரம் என்று கைகூப்பினான் ரகு. "புத்தியா கப்பிழை' என்றார்கள் பெரியவர்கள். உன் கோரிக்கையும் உறுதியும் வெற்றி பெறட்டும்" என்று கைக்குட்டையை விசிறினார்கள் நண்பர்கள்.

"சந்தோஷ சாகரத்தில் மிதந்து செல்லுபவர்களையும், துக்கசாகரத்தில் அமிழ்ந்து செல்லுவோரையும், ரகுவைப்போல் ஊசலாடும் உள்ளத்தினரையும், அவரவர்கள் விதியனுசாரத்தையொட்டி விதியின்வழியே தானும் இழுத்துச்செல்ல வேண்டியிருக்கிறதே" என்ற பெருமூச்சுடன் ரயிலும் கிளம்பிற்று. ரகு படுக்கையை விரித்துப் படுத்தான். "பேச்சுத் துணைக்கு ஒருவருமில்லை. விஜயாவும் இப்பொழுது தன்னுடன் வந்திருந்தால் ரயில் பிரயாணம் எவ்வளவு குதூகலத்தை அளிக்கும்" என்று நினைத்தான். பிறகு இப்பொழுது ஏற்பட்டிருக்கும் நிலைமையில் பெற்றோரின் வேண்டுகோள், தாயின் அன்பான வார்த்தை,

கண்ணீர் நிறைந்த முகம் இவைகள் மனக்கண் முன் தோன்ற, "ஐயோ நமக்காக, எவ்வளவு பாடுபட்டிருக்கிறார்கள். அவர்களின் மனம் வருந்த நடப்பது எவ்வளவு கொடுமை? அதனால் பிரும்மசாரியாகவே காலத்தை அவர்களின் பொருட்டுக் கடத்திவிடுவோம்" என்று நினைக்கும் பொழுது, தான் புறப்பட விடை பெறுவதற்காக விஜயாவினிடம் சென்ற பொழுது அவள் கண்களில் நீர் சோரத் தன் முன் நின்ற தோற்றம் சலனப்படம் போல் தோன்றிற்று.

"விஜயா நான்சென்று வருகிறேன். கவலைப்படாமல் படித்துக்கொண்டிரு" என்று அவன் இருகரங்களையும் தன் கைகளில் கோத்துக் கொண்டான்.

"அவன் கைகளிலிருந்து தன்கையை விடுவித்துக்கொண்டு அவன் தோளைப் பற்றி, என்னைப் பாராமுகம் செய்து, 'ஏமாந்தவர்கள் பேதையரே' என்ற வார்த்தைக்கு அத்தாக்ஷியாகச் செய்துவிடமாட்டீர்களே. வடக்கே அழகிய வங்காளிப்பெண்கள் ஆண்களை மயக்கும் நிலைமையில் இருப்பார்களென்று கேள்விப்பட்டிருக்கிறேன். தாங்கள் யார்வலையிலாவது விழுந்து, என்னையும் உங்கள் பெற்றோரையும் 'இலவுகாத்த கிளியாகச் செய்துவிடமாட்டீர்களே' என்றாள் கண்களில் நீர்ததும்ப இரக்கமாக அவனைப் பார்த்தவாறே.

"விஜயா!" என்று அவள் மோவாயைப் பிடித்துக் குனிந்து, இன்னும் நீ என்னை அறியவில்லை என்று நினைக்கிறேன். அறிந்திருந்தால் இவ்விதம் சொல்லியிருக்க மாட்டாய். நான் உன்னைப் பிரிவதனால் என்ன சங்கடப்படுகிறேனென்பதை, என் ஹ்ருதயத்தைப் பிளந்து பார். தெரியும். வீண்கவலைகளுக்கு இடங்கொடுக்காதே. என் உறுதியையும், உண்மைக்காதலையும். கடைசிவரை பொறுத்துப்பார். நாம் எவ்வளவு தூரத்தில் இருந்தாலென்ன? ஒருவர் ஹ்ருதயத்தில் மற்றொருவர் எப்பொழுதும் வசித்துக்கொண்டிருக்கிறோம் என்பது உண்மை. நம்முடைய வாய்மொழிக்குக் கடிதம் இருக்கிறது" என்றான்.

"உங்கள் கடிதந்தானே, எனது ஜீவனத்திற்கு வழிகாட்டியாகும். இருந்தாலும், தாங்கள் ஒருசமயம், கடமையைக்கருதி தகப்பனார் கோரிய பெண்ணை மணந்துவிட்டால் என் கதி? காதல்? இவை" என்றுசொல்லும் பொழுதே தாங்கமுடியாத துக்கத்தினால் அவன் தோளில் சாய்ந்தாள்.

"அவளை அன்புடன் அணைத்துக்கொண்டு, மெதுவாக, விஜயா! காதல் கடமை இரண்டும் பெரியனவே. கடமையினால் காதலையும், காதலினால் கடமையும், நிச்சயம் வெற்றி பெறுவேன். அதற்கு நாம் இருவரும் கொஞ்ச காலம் பொறுமையைக் கடைப்பிடிக்கவேண்டும். வருத்தப்படாமல் ஸந்தோஷமாக எனக்கு விடை கொடு."

சற்றுநேரம் இருவரும் மௌனம். பிறகு விஜயா அவன் அணைப்பிலிருந்து விலகி நின்று, "சரி போய் வாருங்கள், என்னைக் கைவிடலாகாது" என்றாள் மறுபடியும்.

"விஜயா மறுபடி மறுபடி சொல்லவேண்டுமா? நீ கவலையுறும் விஷயம் அனாவசியம்" என்று சொல்லும்பொழுதே அவன் குரல் தழுதழுத்தது. 'நான் வருகிறேன். வருந்தாதே' என்று பிரிய மனமில்லாமல் திரும்பித்திரும்பிப் பார்த்துக்கொண்டே வண்டியிலேறினான். படியருகில் நின்று கைக்குட்டையை விசிறினாள் விஜயா. கை சந்தோஷக்குறி காட்டினாலும், முகம், கண்ணீரைக் காட்டிற்று.

இப்படிக் காதலும், கடமையும் வருத்தக் "காதல் பெரிதா? கடமை பெரிதா" என்ற பிரச்னை தீராவண்ணம், ரகு ரயில் பிரயாணம் செய்தான்.

7

நாலு மாதம் சென்றது. ரகு டெல்லிக்கு வந்துவிட்டான். விஜயாவினிடமிருந்து வாரம் ஒருமுறை வரும் அன்பான கடிதத்தினால் அவன் மனம் ஒருவாறு நிம்மதியாக இருந்தது. விஜயாவும், அவ்விதமே இருப்பதாகக் காட்டிக்கொண்டாளே தவிர "காதல் மணத்தின்" சுகத்தை அனுபவிக்குமுன், அதன் பகீரதப்பிரயத்தனத்தின் கவலையையும் துன்பத்தையும் அனுபவித்து வந்தாள். சில சமயம் முன்னோர்களின் ஆசாரப்படி தன்னை வளர்க்காமல் இந்த வகையில் பழக்கப்படுத்திய தாயாரை மனதிற்குள் நொந்துகொள்ளுவாள். இதுவரை கோவிலில் வெறுங்கல்லாகத்தோற்றமளித்த பிம்பங்கள் இப்பொழுது விஜயாவின் வேண்டுகோளைச் செவியேற்கும் உயிர்த்தெய்வங்களாகத் தோற்றமளித்தன. இந்த நிலைமையிலும் இண்டர்மீடியட்டில் ராஜதானிக்கே முதலாவதாகப் பரீக்ஷை தேறினாள். ரகுவின்

விருப்பப்படி பி. ஏ. யிலும் சேர்ந்து படித்தாள்.

விஜயாவின் பெற்றோர்கள் ரகுவின் பெற்றோரைச் சம்பிரதாயப்படி ஜாதகம் கேட்டார்கள். அவர்கள் சரியான மறுமொழி சொல்லாமல், அவமரியாதையாக அனுப்பிவிட்டார்கள். தாயாரின் மனம் சஞ்சலமடைந்தது. இப்பெண்ணின் விதி எப்படியோ? என்று கவலைப்பட்டாள். அயல்நாட்டு நாகரிகத்தைப் பின்பற்றி நடந்ததால் வந்த பலனே என்று அவள் மனம் அடிக்கடி சொல்லிற்று. அவர்களைப்போல் 'விவாக ரத்து' செய்துகொள்ளத் தங்களுக்கு மனமும் சக்தியுமில்லையே என்பது அப்பொழுதுதான் புலனாயிற்று. 'வானம்பாடிபோல்' கவலையற்றுத் திரிந்தவளுக்குச் சாதகப்பக்ஷியின் நிலைமை ஏற்பட்டுவிட்டது. தகப்பனார் கவலையற்றவராகவே இருந்தார். அந்தப்பயல் வேறு கல்யாணம் செய்துகொள்ளட்டும். அவன் எழுதிக்கொடுத்த வாக்கு மூலத்தைக்கொண்டு ஐகோர்ட்வரை இழுத்து, அவர் மானத்தை வாங்காமல் விடுவேனா? என்று தாராளமாக வெளியில் சொல்லிக்கொண்டிருந்தார். ஆனாலும், பெண்ணைப் பெற்ற மனம் அதன் இயற்கையை அனுபவித்தது.

"இவர் இப்படி மார்புதட்டும் விஷயம், பென்ஷன் வாங்கிக்கொண்டு தம் கிராமம் சென்று வேறு வேலைக்குப் பிரயத்தினம்செய்துகொண்டிருந்த ரகுவின் தந்தை காதுக்கும் எட்டிற்று. காலமானது எவ்வளவோ மாறுதலை உண்டாக்கிவிடுகிறது. தாசில்தார் பிள்ளையின், மீது கொண்டிருந்த கோபம் மறையலாயிற்று. அவன் உறுதிக்கு அவர் மனம் அடிமையாயிற்று. அச்சமயம் இச்செய்தி தெரியவே, சரி! என் வீண் வம்பில் அகப்படவேண்டும். கல்யாணத்தை நடத்திவிடுவோம்" என்று எண்ணினர். ஆனல் தர்மபத்னி சம்மதிக்கவில்லை.

இப்படியிருக்கையில், விஜயாவை, அவள் தாயார் டெல்லிக்கு அழைத்துச் சென்றிருப்பதாக, ஒரு செய்தித் திரட்டு ரகுவின் தாயார் காதில் எட்டிற்று. அதை வெளிக்காட்டாமல், தான் அவனிருக்குமிடம் சென்று எப்படியாவது அவன் மனதைத் திருப்பிவிடுவதாகச்சொல்லி, டெல்லிக்கு அவள் மாத்திரம் பிரயாணமானள். நடுவில் பட்டணத்தில் இறங்கி நாத்தனர் இல்லம் வந்துசேர்ந்தாள். இவளுடைய திடீர் வரவு அவளைத் திடுக்கிடச் செய்தது.

"வா! மதனி, இப்படி எங்கே திடீரென்று."

"டெல்லிவரை போய்வரலாமென்றுதான். குழந்தை கிளப்புச்சாப்பாடு சாப்பிட்டு அலுத்துப்போனன் அம்மா உன்கையினல் எனக்குச் சாப்பிட வேண்டும் என்று எழுதினன். அதற்காகப் போகிறேன்" இவள் வந்த செய்தி கேட்டு மைலாப்பூரிலிருக்கும், தமையனரும் அவர்சம்சாரமும் அவளைப்பார்க்க வந்தார்கள்.

"என்ன? பிள்ளையின் மனதைத் திருப்பி விடலாமென்று போகிருயாக்கும்" என்ருர் தமையன்.

"மதனி அவனைத் திருப்புவதாவது அவன் ஒரே குரங்குப் பிடியாகவல்லவோ இருக்கிருன். இது விஷயத்தில் அவன் இஷ்டப்படியே செய்வதேமேல்" என்ருள் நாத்தனர்.

"அதுதான் நானும் சொல்லுகிறேன்" என்ருர் தமையனர்.

"நீங்களே இப்படிச்சொன்னல் என்ன செய்வது? இது ஞாயமாகுமா? நம்ம குடும்பங்களில் இதுமாதிரி நடந்ததுண்டா? அந்தப் பெண் தாலிகட்டினதும் வந்து சேவிக்கும் பொழுது, மகாராஜியாக இரு என்று எப்படி மனமார வாழ்த்த முடியும்" என்ருள் கண்களில் ஜலம் ததும்ப.

"வருத்தப்படாதேயுங்கள் அக்கா, உங்கள் மனம்போல் யாவும் நடக்கும்" என்ருள் அப்பாவி மனுஷி அண்ணனின் சம்சாரம்.

ஸதா அவளிடம் குரோதமே பாராட்டும் ரகுவின் தாயார், அவள் வார்த்தையைக் கொஞ்சம்கூட லக்ஷியம் செய்யவில்லை.

"பிள்ளைகளுக்குக் காலாகாலத்தில் கல்யாணம் செய்யவேண்டும் பணம், பணம், என்று நாளைக்கடத்தினல் இப்படித்தான் ஆகும். நல்லவேளையாக ரகு பிராமணப் பெண்ணையாவது தேர்ந்தெடுத்தானே துலுக்கச்சி, பார்சி, வங்காளி முதலியவர்களாக இல்லாமல்" என்ருள் நாத்தனர்,

"நானு பணம் வேண்டும் என்றேன்? எல்லாம் அவர்தான் உத்யோகமாகட்டும் என்ருர். என்னவோ பழிஎன்மேல்தான். இன்னமும் அவனை எவ்விதமும் மனதைத்திருப்பி, நல்லதாய் முடியும்படி செய்வேன்" என்ருள் அழுதுகொண்டே.

அதற்குமேல் அவளிடம்பேச ஒருவரும் விரும்பவில்லை.

ரகுவின் தாயார் டெல்லிவந்து ஒருமாதம் ஆயிற்று. தினம் ரகுவினிடம் கல்யாணப்பேச்சைத்தொடங்குவாள். அவன் ஒருமாதிரியாகப் பதில் சொல்லிவருவான். சிலசமயம் தாயின் அன்பு, புத்திரர்களின் கடமை, இவைகளைச் சொல்லிக் கண்ணீர்விட்டு அழுவாள். அச்சமயங்களில் ரகுவின் மனம் கலங்கும். அடுத்தாற்போல், விஜயாவின் நீர் நிறைந்த கண்கள் தோன்றும். அச்சமயம் இருதலைக் கொள்ளி எறும்பின் நிலையாய்விடும் அவன் பாடு.

அன்று விஜயாவினிடமிருந்து கடிதம் வந்தது அதில், "தங்கள் தாயார் அவ்விடம் வந்திருப்பதாக எழுதியிருக்கிறீர்கள். மாதுர் வாக்ய பரிபாலனம் செய்ய, என்வாழ்க்கை வீணாகாமலிருக்க வேண்டும்" என்று எழுதி இருந்தாள்.

அதைப்படித்துக்கொண்டிருக்கும்பொழுது தாயார் அவ்விடம் வந்தாள். இவன் கையில் கடிதத்தைப்பார்த்ததும், "யார் எழுதியிருக்கிறார்கள்?" என்று கேட்டாள்.

"விஜயா எழுதியிருக்கிறாள். உனக்குத் தன் நமஸ்காரத்தைத் தெரிவிக்கச் சொல்லியிருக்கிறாள்".

"ரகு! ஆனால் நான் சொல்லுவதைக் கேட்கமாட்டாயா?"

"அம்மா! நீ வேறு என்ன சொன்னாலும் கேட்கிறேன். கல்யாண விஷயம் மட்டும் என்னிஷ்டம்போல் விட்டுவிடு."

"அப்பா! தாயார் மனம் நோகலாகுமா?"

"அம்மா! நான் சொல்லுகிறேனென்று வருத்தப்படாதே. என் மனம்விட்டே சொல்கிறேன். வீணாக ஒரு பெண்ணின் வாழ்வைக் கெடுப்பது பாபமல்லவா? நான் ஆண்பிள்ளை. வேறு கல்யாணம் பண்ணிக் கொள்ளலாம் என்பது சரி. ஆனால் என்னையே நம்பியிருக்கும் பெண்ணின் கதி என்னவாகும்? வீணாக ஒரு பெண் பழியை ஏற்றுக்கொள்ளமுடியுமா? என்னிடம் அவள் கொண்டிருக்கும் அன்பு அணைகடந்தது. ஒரு விஷயம் சொல்லுகிறேன். எனக்குப் பிடித்தமான சமையல் செய்திருந்தால் நான் சாப்பிடவேண்டுமென்பதற்காக சைக்கிளைப் பஞ்சர் செய்து மறுபடி ரிப்பேர் செய்வாள். நான் எப்படி அவளை மறக்கமுடியும்?

"இதை அன்பென்று நினைக்கிறாயா? வஞ்சகம். சைக்கிளைப் பஞ்சர் செய்ததுபோல், குடும்பத்தையும் பஞ்சர் செய்துவிடுவாள். தெற்கித்திப்பெண்" என்றாள்.

"நீ நினைப்பது தவறு. அவள் குணம் மிக உயர்ந்தது. அவள் அழகில் என் மனம் செல்லவில்லை. குணமே என்னை அடிமை கொண்டது. மிக்க அடக்கமான பெண். நீ அவளுடன் பழகினால் அவளை விடவே மாட்டாய்."

பிள்ளையின் மனப்பான்மை நாளாவட்டத்திலேயே தாயின் உள்ளத்தை அசைந்து கொடுக்கச்செய்தது. இன்று அவனின் பேச்சும் முகமும் அவள் மனதின் உறுதியைக் குலைத்துவிட்டது. ரகு! உன் மனம் சந்தோஷிக்க, நான் இதை ஒப்புக்கொண்டாலும், கொண்டார் கொடுத்தவர்கள், உறவுமுறையார்கள் ஏசமாட்டார்களா?

"அவர்கள் ஏச இதில் தவறொன்றும் இல்லை. ஜாதிப்ரச்னை அவ்வளவு கீழ்த்தரமானதல்ல. ஒரே தீர்மானம் செய்துகொண்டிருக்கிறேன். உன்னுடைய பூர்ண சம்மதம் கிடைத்தால் தான் கல்யாணம். இல்லையேல், ஆயுள் வரை பிரும்மசாரிதான். ஆனால் அம்மா, என் சந்தோஷத்தையும் நீ கொஞ்சம் கவனிக்கவேண்டாமா?"

"நான் எப்படியடா சம்மதம் அளிப்பேன். நீ பிரும்மசாரியாக இருந்தாலும் பரவாயில்லை" என்று தோன்றுகிறது இச்சம்பந்தம்.

"அம்மா இன்றுதான் கடைசியாக நமக்குள் விவாதம். இன்றைக்கு என்ன முடிவிற்கு வருகிறோமோ அதேதான் என் ஆயுள் முடியுமட்டும். நீ சம்மதம் அளிக்காவிடில், நானும் கல்யாணம் செய்துகொள்ளப்போவதில்லை. அவளும் கன்னிகையாகவே இருப்பாள். இது எங்களின் சபதம். அப்படி மனம் வெறுக்க ஏற்படும்பொழுது புத்தி எவ்விதம் செல்லுமோ? பிறகு உத்தியோகம் எதற்கு? போர்ட்டர் வேலைசெய்து அன்றன்றம் என் வயிற்றைக் கழுவிக்கொள்ளமுடியும். எங்கும் சுற்றுவேன். இதுவே என் தீர்மானம்" என்ற கடைசிப் பாணத்தைப் பிரயோகம் பண்ணினான்.

பெற்றவளுக்குப் பிள்ளையின் சுகமே மனச்சாந்தி. அவன் பிடிவாத குணம் அறிந்தவளாதலால், "ஐயோ வேண்டாம்; அப்படி ஏதாவது செய்துவிடாதே" என்றாள்.

"என்னம்மா, இதை நீ சொல்லவும் வேண்டுமா? எனது கடமையை நான் மறப்பேனா? நீயும், அப்பாவும் மற்றக்குழந்தைகளும் என்னுடன்தான் இருக்கவேண்டும். விஜயா உங்கள் மனம் கோணாமல் நடப்பாள்."

தாயின் சம்மதம் கிடைத்ததை விஜயாவிற்கு எழுதினான் ரகு. அவளின் பெற்றோர்கள் அதிக சந்தோஷமடைந்தார்கள். ரகுவைப் பட்டணத்திற்கே மாற்றிவிட்டார்கள். தாய் தகப்பன், மற்ற ஸஹோதர சகோதரிகளுடன் வசித்துவரலானான். விஜயாவின் தகப்பனார் பட்டணம் வந்தார். ரகுவின் தாயார் சம்மதத்துக்குமுன்னேயே, தகப்பனருக்குச் சம்மதமாதலால், சம்பந்தியை வலுவிலே தாமே போய்பார்த்தார்.

கடைசியில் மாமூல் வரதக்ஷிணை ஐயாயிரமும் ஜாதிப்பிரச்னைக்காக பதினாயிரமும் பெற்றுக்கொண்டு, ஸ்ரீமான் ராமய்யர், சிரஞ்சீவி ரகுராமனுக்கு, ஸௌபாக்கியவதி விஜயலக்ஷ்மியைப் பாணிக்கிரஹணம் செய்து கொண்டார். 'பணம் பந்தியிலே, குலம் குப்பையிலே' என்றது உலகம்.

ரகுவின் தாயார் விஜயாவை "மகராஜியாக தீர்க்க சுமங்கலியாக வாழ்வாய்" என்று மனப்பூர்வமாகவே வாழ்த்தினாள். மேலும், "என் நாட்டுப்பெண் பஸ்ட்கிளாஸ் பி. ஏ." என்று யாவரிடத்திலும் பெருமை பேசிக்கொண்டாள். காலம் போகும் மாதிரியும், பணம் செய்யும் வேலையும் மிக்க அதிசயமானதே.

அவ்வருஷம் தலைத்தீபாவளிக்கு ரகுவும் விஜயாவும் மதுரை வந்தார்கள். பண்டிகையன்று ஸரஸா, வாசன், விஜயா, ரகு நால்வரும் சாயங்காலம் வண்டூர்த்தெப்பக்குளம் சென்று ஒரு சிறிய படகிலேறி உல்லாசமாகச் சென்றார்கள்.

"ரகு! நீ நல்ல ஆசாமிதான். இப்படிப்பட்ட கல்யாணங்கள் அநேகமாகப் பெற்றோரறியாமல் நடப்பதே வழக்கம். நீ எவ்வளவு சமார்த்தியமாக அவர்கள் அனுமதியுடன் அவர்களே தாரைவார்க்கக் கலப்புவிவாகம் செய்துகொண்டு விட்டாயே. ஆனால் மூன்று வருஷமாகக் கொஞ்சம் கஷ்டம் அனுபவித்து இருக்கிறாய்" என்றான் வாசன்.

"கஷ்டத்திற்குத் தகுந்தகூலி. விஜயா அதிருஷ்டசாலியே. இதற்கு மூன்றாம் தீபாவளி கழிந்த நான்குநாள் கழித்தும், போட்டில் உல்லாசப்பிரயாணம் செய்தோமே? ஞாபகம் இருக்கிறதா?" என்றாள் ஸரஸா.

"ஞாபகம் இல்லாமலா? அது மறக்கமுடியாத சம்பவமன்றோ? என் வாழ்க்கையை அடியுடன் மாறச்செய்ததன்றோ? அன்று நிலா இன்று மஞ்சள் வெயில். அன்று விஜயா அன்னியப்பெண், இன்று என்னுடையவள்" என்று சிரித்தான். மூவரும் சேர்ந்துகொண்டார்கள்.

"ஏது விஜயா! மௌனம் சாதிக்கிறாய்?" என்றாள் சரசா.

"நான் பேச சந்தர்ப்பம் வாய்க்கவில்லை. உங்கள் சம்பாஷணை ஆனந்தமாக இருக்கிறது. கேட்டுக்கொண்டிருக்கிறேன்" என்றாள்.

"ரகு எல்லாம் கெட்டிக்காரன்தான். இந்த வரதக்ஷணை பதினாயிரத்திற்கு நீ சம்மதித்தது எனக் குப்பிடிக்கவில்லை" என்றான் வாஸன்.

"கொஞ்சம் அவர்கள் மனப்படி விடவேண்டியது கடமையல்லவா? அதனால் தடுக்கவில்லை. பின்னால் அதைத் திருப்பியே தீருவேன். இது நிச்சயம்" என்றான் ரகு.

"எல்லாம் சரிதான். இதில் காதல் வெற்றி கொண்டதா? கடமை வெற்றி கொண்டதா?" என்று கேட்டாள் ஸரஸா.

"இரண்டும் வெற்றி பெற்றன" என்றாள் விஜயா.

சுபம்!

தேவன்

[கௌரி]

★

ஊரில் எங்குப் பார்த்தாலும் அவனுடைய பேச்சுத்தான். எல்லோரும் அதையே பேசிக்கொண்டிருந்தார்கள். "அவனுக்கென்ன, திடீரென்று பைத்தியம் பிடித்துவிட்டதா என்ன? ஊரில் சித்ரலேகையின் படம் ஒன்றையும் காணவிடமாட்டேன் என்கிறானே" என்று ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டனர். அழகே உருவாய் வந்த அம்மாதின் உருவப்படங்கள் கலைஞன் தேவனின் உள்ளத்தில் எவ்விதக் கிளர்ச்சியை மூட்டியது என்று யார் சொல்வது?

இவ்வளவு வருஷங்களாய்த் தேவன், அவ்வூருக்குச் சித்திரரதன்போல் விளங்கிவந்தான். அவனுடைய அழகிலும், இனிய வார்த்தைகளிலும் ஈடுபடாதவர்களே கிடையாது. அவனைத் தேடி வந்தது எவ்வளவு உயிர்கள்? அவனை நாடி வந்தவைதாம் எவ்வளவு பொருள்கள்? இப்பொழுதோ அவனுடைய அழகு போய்விட்டது. கோரம் அழகின் ஸ்தானத்தை ஆக்கிரமித்துக் கொண்டுவிட்டது. சாந்திக்கு இருப்பிடமாய் இருந்த அவனுடைய கண்கள் கலங்கிக் கிடந்தன. அவனுடைய இனிய மொழிகள் பாதாளத்தில் போய்ப் புதைந்துவிட்டன. உயிரற்ற வஸ்துக்களுக்கு உயிரளித்த அவனுடைய அழகிய கைகள் மரக்கட்டைகளையொத்திருந்தன. தேவனின் அழகிய கூரிய விரல்களுக்கணியாயிருந்த கலைக்கருவிகள் இன்று மூலையை அலங்கரித்துக்கொண்டிருந்தன. தேவனால் அலங்கரிக்கப்பெற்றிருந்த அவனுடைய அரண்மனை போன்ற வீடு இன்று சூன்யமாய் இருந்தது.

ஊர் எல்லைக்குச் சிறிது தூரத்தில் ஓர் பரந்த ஆலமரம். தேவன் இப்பொழுது அம்மரத்தடியை அலங்கரித்துக் கொண்டிருந்தான். வெகு காலத்திற்கு முன் ஓர் பரந்த ஆலமரத்தினடியில் அமர்ந்திருந்தார் சாந்தமூர்த்தியான ஸ்ரீ புத்தர் பெருமான். "அப்பா மகனே, உன் திருவாய் திறந்தோர் மொழி சொல்லடா" என்று கெஞ்சிக் கொண்டிருந்தாள் அவர் அன்னை. இன்று ரௌத்திர ரூபியாய் ஓர் பரந்த ஆலமரத்தினிடையே காட்சியளித்துக்கொண்டிருந்தான் தேவன். "அப்பா உன் அழகிய வாய் திறந்தோர் மொழி சொல்லமாட்டாயா" என்று மன்றாடிக் கொண்டிருந்தாள் அவன் அன்னை.

தேவன்! அப்பெயரைச் சொன்னால் அவ்வூரில் தெரியாதவர்களே கிடையாது. குழந்தை குட்டி முதற்கொண்டு கிழங்கட்டை வரையில் தேவனை நன்றாய் அறிவார்கள். அவன் பிரசித்திபெற்ற சித்திரக்கலை நிபுணன். அவன் வரைந்த உயர்ந்த சித்திரங்கள் எவ்வளவோ, கணக்கே கிடையாது. அவைகள் பரவாத இடங்களே கிடையாது. அவைகளைக் கண்டு களிக்காதார் இலர். எவ்வளவோ உள்ளங்களில் பதுங்கிக் கிடந்த உணர்ச்சியின் ஊற்றுக்கள் தேவனின் அழகிய சித்திரங்களால் வேகம் பெற்றுக் கவிதா ரூபமாய்ப் பாய்ந்தோடின. அவனுடைய கலைத்திறமையால் கலைம்களின் உள்ளம் பூத்துத் தழைத்தது.

தேவனுக்கு ஒரு குறையுமில்லை. அவன் செல்வத் திருமகன். பெற்றோருக்கு அரும் புதல்வன். செல்வத்திலும் சீரிலும் உயர்ந்து வளர்ந்தான். அவன் குறைபட வேண்டுமென்றால், ஒரே ஒரு விஷயத்தில்தான். அவனுடைய செல்வத் தந்தையை அவன் அதிக காலம் வைத்துக்கொள்ளக் கொடுத்து வைக்கவில்லை. முறையே கல்வி பயின்றான். கல்வியோடுகூடச் சித்திரக் கலையையும் தழுவினான். அவன் பாக்கியம், கலாதேவி அவனுடைய அன்பை ஏற்றுக்கொண்டாள். அவனுடைய அழகிய திருக்கரங்களுக்கு அருள் மழையைப் பொழிந்தாள். கலைக் காதலில் மூழ்கினான் அவன்.

வருஷங்களும் ஓடி மறைந்தன. தேவன் வளர்ந்து பெரியவனாகிவிட்டான். வீட்டில் தேவனைத் தவிர வேறு குழந்தைகள் இல்லை. மகனுக்குச் சீக்கிரம் ஒரு கல்யாணம் செய்து பார்க்க வேண்டுமென்று மிகவும் ஆசைப்பட்டாள் அவனுடைய தாய். தேவனுடைய தோழன் ராதாவிடம் சொல்லி அவனுக்குச் சொல்லச் சொன்னாள். ஆனால் தேவன் இதற்கு ஒன்றும் செவிசாய்க்கவே இல்லை. அவனுடைய கலையிலேயே புதைந்து கிடந்தான். நாளுக்கு நாள் மாதத்திற்கு மாதம் தேவனின் கலைத்திறமை செழித்து

வந்தது. கலையைக் கருதி எவ்வளவோ செலவு செய்தான். அழகிய சித்திரங்கள் வரைந்தான். புகழ் மாலையைக் கலாதேவிக்குச் சூட்டி தானும் சூட்டிக்கொண்டான். கலைக்கும் புத்துயிர் அளித்தான்.

தேவனுக்குப் பெண் கொடுக்க எவ்வளவோ பேர் வீட்டில் வந்து காத்துக் கிடந்தனர். பெண்ணைக் கொண்டுவந்து காட்டினர். தேவனின் தாயாரும் ஆவலுடன் மகனுக்கு எவ்வளவோ சொன்னாள்; பயனில்லை. தேவனின் செவிகள் எதைக் கேட்கவும் மறுத்தன.

தேவன் இயற்கை ரஸிகன். இயற்கை அழகுதான் அவன் உள்ளத்தைக் கவரும். செயற்கை அழகிற்கு அவனுடைய சித்திரங்களில் இடம் கிடையாது. அவன் சாதாரணமாய் எப்பொழுதும் ஊரிலேயே இருக்கமாட்டான். தன் நண்பன் ராதாவையும் கூட அழைத்துக் கொள்வான், ஊர் ஊராய்ப் போவான், சுற்றுவான். அழகிய காட்சிகளை மனதில் பதிவு செய்துகொள்வான். வீட்டிற்கு வந்து அவைகளைப் பதிவு செய்வான். அழகிய உயர்ந்த சித்திரங்களைச் சித்திரிப்பான். தானும் களிப்பான், மற்றவர்களுக்கும் களிப்பை ஊட்டுவான். இப்படி அவனால் சித்தரிக்கப் பெற்ற படங்கள் எவ்வளவோ, கணக்கே கிடையாது. இப்படி வருஷங்களும் ஓடி மறைந்தன. எவ்வளவு சொல்லியும் தேவன் கலைக்காதலிலிருந்து தலை தூக்கவேயில்லை.

ஒரு சமயம் தேவன் சுற்றுப் பிரயாணம் கிளம்பலானான். கால் நடையாகவே சென்று சிறிய சிறிய கிராமங்களைச் சுற்றிக்கொண்டு வந்தான். தனியாகத்தான் வந்திருந்தான். ஒரு நாள் காலை வேளை. சலசலவென்ற ஓசையுடன் மரங்கள் அசைந்து கொண்டிருந்தன. குளிர்ந்த காற்று வீசிக்கொண்டிருந்தது. ஓர் மரத்தடியில் நின்றுகொண்டு இயற்கையின் எழிலைப் பருகிக் கொண்டிருந்தான்.

சிறிது தூரத்தில் அழகிய பெரிய குளமொன்று, நான்கு புறங்களிலும் படித்துறை அழகாய்க் கட்டப்பெற்றிருந்தது. குளம் முழுவதிலும் முத்து முத்தாய்த் தண்ணீர் தேங்கிய தாமரை இலைகள். அதனிடையே கதிரோனைக் கண்டு புன்னகை புரிந்து விரியும் செங்கமலங்கள். விரியும் தாமரையிலிருந்து ரீம்......என்ற ஜங்காரத்துடன் வெளிக்கிளம்பியது வண்டொன்று. இவையெல்லாம் காதலனின் கனியை உண்டு பொழுது புலரும் முன்னே அவனிடம் விடை பெற்றுக்கொண்டு மலர்ந்து வெளிக்கிளம்பும் காதலியைப்போல் தாமரையின் ஆலிங்கனத்திலிருந்து மதுவைப் பருகிக்கொண்டிருந்த அவ்வண்டு வெளிவருவதைப் பார்த்து 'களுக்' என்று சிரித்தான் தேவன். அச்சமயம் குளத்தை நோக்கி வந்து கொண்டிருந்த ஒரு உருவம் அவன் கவனத்தை இழுத்தது. அழகின் அலைகளுக்கிடையே மிதந்து வந்துகொண்டிருந்தாள் ஒரு இளநங்கை. அவளிடையிலோர் மண் குடம் இருந்தது. அவள் குளத்தில் தண்ணீர் எடுக்க வந்து கொண்டிருந்தாள். அசைந்து ஒய்யாரமாய் நடந்துவந்த அவ்வன்ன நடையாள் தன் கருவிழிகளைச் சுற்றிலுமொருமுறை ஓட்டினாள். வண்டுகள் போன்ற அவளுடைய விழிகள் நொடியில் குளத்தைச்சுற்றிச் சுழன்றுவந்தன. வேகமாய் ஓடிய அப்பார்வை தேவனிருப்பிடத்திற்கு வருங்கால் சற்றுத் தடைப்பட்டது. தேவனுடைய விழிகளும் அவளுடைய விழிகளும் ஒரு கணம் சந்தித்தன. மின்னலைப் போன்ற அப்பார்வை அவளுடைய இதயத்தில் ஒரு இடியை உண்டாக்கியது. நாணம் அவளை வந்து சூழ்ந்தது; அவளுடைய முகம் சிவந்தது; அவளுடைய எண்சாண் உடம்பும் நாணத்தால் வில்லாய் வளைந்தது. தண்ணீரில் படர்ந்திருந்த தாமரையை விலக்கிவிட்டுக் குடத்தில் தண்ணீர் எடுத்தாள் அவள். 'குடு, குடு' என்ற ஓசையுடன் தண்ணீர் குடத்தில் பாய்ந்து நிறைந்து கொண்டிருந்தது. மன்மதனின் பாண வெள்ளம் பாய்ந்துகொண்டிருந்தது இருவரது உள்ளங்களுக்கிடையே!

அழகே உருவாய்த் திரண்டுவந்த அம்மங்கையைக்கண்டு பூத்தான் தேவன். என்ன அழகு! அவன் சித்திரத்திற்கேற்ற உருவம். இந்நாளும் அவன் காண வேண்டுமென்று இச்சைப்பட்ட உருவம். தேவன் தன்னையே மறந்தான். கமல முகத்தாளை நோக்கிச்சென்றான். தண்ணீருடன் கிளம்பிய பெண்மணி நிற்கவில்லை. தேவன் தன் முன் காட்சியளித்ததை அவள் பொருட்படுத்தவில்லை. குடத்தின் கனத்தால் வளைந்திருந்த அவள் தேகம் நாணத்தால் இன்னும் கூனிக் குறுகியது. தன் கையில் வைத்துக் கொண்டிருந்த கமலமொன்றைத் தேவன் கைகளில் அர்ப்பணம் செய்துவிட்டு வேகமாய்ச் சென்று அவன் பார்வையிலிருந்து மின்னலைப்போல் மறைந்தாள்.

தேவனின் உள்ளததில் இடி முழக்கத்துடன் ஓர் மின்னல் தோன்றி மறைந்தது. கலை பயின்ற பயனை இன்று மனமார வாழ்த்தினான் தேவன். அவன் கனவு கொண்டிருந்த சித்திரம் அதுவேதான். ஆழமாய் அவன் மனதில் பதிந்திருந்த அச்சித்திரம் உயிர் பெற்று அவன் கண்முன் தோன்றியதை நினைத்து அவன் பூரித்தான்.

மறுநாளும் அதே இடத்தில், குளத்தங் கரையில், அம்மடந்தை தேவனுக்குக் காட்சி அளித்தாள். தேவன் அவளை எவ்வளவோ கேட்க எண்ணி மனக்கோட்டை கட்டியிருந்தான். ஆனால் தேவனின் மனக்கோட்டையைப் பலமாக்க அவள் இடம் கொடுக்கவில்லை. வேகமாய் வந்து தண்ணீர் எடுத்துக்கொண்டாள். மடியில் வைத்துக்கொண்டிருந்த அரு மலர் மாலை ஒன்றை தேவனின் கையில் சமர்ப்பித்தாள். வாய் திறந்தோர் மொழி மொழிந்தாளில்லை. தன் முல்லைச் சிரிப்பை தேவன்பால் அள்ளிச் சொரிந்தாள். கைகளில் நீல வளையல்கள் குலுங்க அவன் கண்களிலிருந்து மறையலுற்றாள். அதுதான் தேவனுக்கு அவள் அளித்த கடைசிக் காட்சி. அவனுடைய கண்களிலிருந்து மறைந்தாள் அவள். ஆனால் அவளுடைய உருவத்தைத் தேவனுடைய உள்ளத்தில் உளியால் செதுக்கிவிட்டுப் போய் விட்டாள்.

தேவன் ஊர் வந்து சேர்ந்தான். அவன் உள்ளத்தில் செதுக்கப்பட்டிருந்த உருவத்தை படத்தில் அமைத்தான்; அவள் தனக்களித்த ஒவ்வொரு காட்சியையும் அப்படியே சித்திரித்தான்; விதவிதமான தோற்றங்கள், விதவிதமான வர்ணங்கள் கொடுத்தான்; செங்கமலத்தையொத்த அவளுடைய நெற்றியில் ஓர் அழகிய குங்குமப் பொட்டை இட்டான்; காதிற் குண்டலங்களிட்டான்; கழுத்தில் முத்து மாலையிட்டான்; கைகள் குலுங்க வளையிட்டான்; கருத்துச் சுருண்ட அவளுடைய கூந்தலில் அழகிய மலர் முடித்தான்; அவளுடைய சித்திரம் அவன் முன் உயிர் பெற்று வந்து நின்றது; அதன் அழகைப் பருகினான்; அருகில் வைத்துக் கொண்டு பார்த்தான், தூரத்தில் மாட்டிப் பார்த்தான்; தன் அறை முழுவதும் அதே படங்களால் நிரப்பினான்; நண்பன் ராதாவிடம் காண்பித்துக் களித்தான்; இரவும் பகலும் கலைக் காதலிலேயே மூழ்கிக் கிடந்தான்.

தேவனின் சித்திரங்களும் அதிகமாகிக் கொண்டே வந்தன. நாட்களும் மாதங்களும் ஓடிக்கொண்டே வந்தன. அவனுடைய கலைக் காதல் கொஞ்சம் கொஞ்சமாக மாறிக்கொண்டே வந்தது. நாட்கள் ஓடி மறைய மறைய கலைக் காதல் மெய்க் காதல் ரூபமாய்த் தளிர் விட ஆரம்பித்தது. காதல் கனிய ஆரம்பித்தது. கணத்திற்குக் கணம், நாழிக்கு நாழி அவனுடைய காதல் துளிர்த்துச் செழிக்க ஆரம்பித்துவிட்டது. தேவனுடைய மன நிம்மதி குறைந்தது, கலையில் சிரத்தை குறைந்தது. அவன் மனதில் ஏக்கம் குடிகொண்டது. தேக வலிமையும் குன்றவாரம்பித்தது. தேவனுடைய நிலைமையைக் கண்டு கவலையுற்றாள் அவன் தாய்.

தேவனின் காதல் செழித்து வளர வளர அவனால் இனி ஒன்றையும் மறைக்க முடியவில்லை. வேறு வழியில்லை, தனது நண்பன் ராதாவிடம் சொல்லி முறையிட்டான். "ராதா, எப்படியாவது அப்பெண்ணை நான் மணக்கும்படி நீ செய்யவேண்டும்" என்று அவனிடம் மன்றாடினான்.

நாளுக்கு நாள் தேவனின் பிடிவாதமும் பலத்துவிட்டது. ராதா விஷயத்தைத் தேவனுடைய தாயாரிடம் கூறினான். ஆனால் அவளும் இவ்விஷயத்தில் என்ன செய்ய முடியும்? அவனுக்காக எவ்வளவோ அழகிய பெண்களைக் கொண்டுவந்து காண்பித்தாள். ஆனால் தேவன் ஒப்பவில்லை. அவன் பார்த்த அதே பெண்ணைத்தான் மணப்பேன் என்று பிடிவாதமாய்ச் சொல்லிவிட்டான். "ராதா, வேறு வழியில்லை. எப்படியாவது அவன் கல்யாணம் கொண்டு சந்தோஷமாய் இருந்தால் சரி. நீ ஊருக்குப் புறப்பட்டுப் போய் எல்லாவற்றையும் ஏற்பாடு செய்துவிட்டுவா. முதலில் அந்தப் பெண் யாரென்பதைத் தெரிந்து கொள்ளவேண்டும்" என்றாள். எப்படியாவது தேவன் மணந்துகொண்டால் போதும் என்பதுதான் அவள் ஆசை.

இரண்டு நாட்களிலேயே ராதா ஊருக்குக் கிளம்புவதற்குச் சித்தமாகிவிட்டான். தேவன் அந்தக் கிராமத்தின் அடையாளங்களையும், போகும் வழிகளையும் நன்றாய் ராதாவுக்குக் குறித்துக்கொடுத்தான். தேவனிடம் விடை பெற்றுக்கொண்டு அவன் பயணமானான்.

இரண்டு மாதங்கள் ஓடி மறைந்தன. ஊர் ஊராய் அலைந்து திரிந்துவிட்டு வந்துசேர்ந்

தான் ராதா. இரண்டு மாதங்கள்! ஒவ்வொரு நாளையும் ஒவ்வொரு யுகமாகக் கழித்துவந்தான் தேவன். ராதாவுடைய வருகைக்காகத் துடித்துக்கொண்டிருந்தான்.

மாலை தணிந்த இனிய காற்று நறுமணங்களுடன் வீசிக்கொண்டிருந்தது. தேவனுடைய வீட்டுத் தோட்டத்தில் தேவனும் ராதாவும் உட்கார்ந்துகொண்டு பேசிக்கொண்டிருந்தனர். ராதாவுடைய முகம் சுற்றுப் பிரயாணத்தின் காரணமோ யாதோ சற்றுச் சலிப்படைந்து காணப்பட்டது. செய்திகளைத் தேவனிடம் கூறிக்கொண்டிருந்தான்.

“இந்தக் கிராமத்திற்குப் போய்வருவதற்கா இரண்டு மாதங்கள்? ஒரு கடிதம் போடக் கூடாதா எனக்கு?” என்றான் தேவன் ராதாவைப் பார்த்து.

ரா: ஏதாவது செய்தி கிடைத்தால்தானே கடிதம் எழுதலாம்? என்னத்தை வைத்துக் கொண்டு உனக்கு எழுதுவது?

தே: செய்தி கிடைக்காமல் என்ன? நான் தான் உனக்கு அவள் இருப்பிடத்தை விபரமாய்ச் சொல்லி அனுப்பினேனே?

ரா: நீ கூறியபடி அதே இடத்திற்குத்தான் போனேன். அந்த இடத்தில் நீ கூறிய அடையாளப்படி ஒரு பெண்ணையும் காணவில்லை. என்ன செய்வது?

தே: காணவில்லையா? அவள்தானே அடையாளம் காண்பித்தாள். பிறகு என்னசெய்தாய்?

ரா: சுற்றினேன்.

தே: அவ்விடத்தில் வேறு ஒருவரும் இல்லையா? அவர்களை விசாரித்துப் பார்ப்பது தானே?

ரா: பார்த்தேன்.

தே: அவர்களுக்கும் தெரியவில்லையா?

ரா: அங்கே சில செம்படவர்கள்தான் இருக்கிறார்கள். அவர்களைத்தான் கேட்டேன்.

தே: செம்படவர்களா! வேறு ஒருவருமே இருக்கவில்லையா? நன்றாய் விசாரித்தாயா நீ?

ரா: இதே வேலையாகத்தானே போனேன் தேவா, விசாரிக்காமல் வருவேனா? எல்லாம் தெரிந்துதான் கூறுகிறேன். என்ன பிரயோஜனம்?

தே: என்னதான் சொன்னார்கள்? அதைச் சொல்லேன்.

ரா: மறுபடியும் அதையே ஏன் கேட்கிறாய்? நான்தான் அதை விட்டுவிடு என்று கூறுகிறேனே?

தே: முடியாது. அவர்கள் என்ன சொன்னார்கள்? அதைச் சொல்லு.

ரா: வீணாய் உன் மனத்தையே புண்படுத்திக் கொள்வாய். காரணமின்றியா நான் உன்னிடம் கூற மறுப்பேன்?

தே: இப்பொழுதுமட்டும் என் மனதைப் புண்படுத்தாமல் இருக்கிறாயா? விஷயத்தைச் சொல்லேன்.

ரா: வேண்டாம் தேவா, சொன்னால் கேள், பிடிவாதம் செய்யாதே.

தே: முடியாது, சொல்லித்தான் தீரவேண்டும், விஷயத்தை விளக்கிக் கூறமாட்டாயா ராதா நீ?

ரா: பிறகு நான் சொல்லுகிறபடி கேட்கிறாயா?

தே: கேட்கக்கூடியதாய் இருந்தால் கேட்கிறேன்.

ரா: கட்டாயமாய்? தவறமாட்டாயே?

டோங்ரேயின்
பாலாமிருதம்
பிரசித்தி பெற்ற
குழந்தைகளின்
டானிக்

தே: மாட்டேன் ராதா, நீ முதலில் சொல் லேன். என்னை ஏன் இப்படி வதைக்கிறாய்? உனக்குக் கேலியாகவா இருக்கிறது?

ரா: கேலியா? நீ சொல்வதெல்லாம் கேலி யாகத்தான் இருக்கிறது.

தே: ஆனால் சொல்லு. அவளை நீ பார்த் தாயா இல்லையா?

ரா: அங்கு இருந்தவர்களை நன்றாய் விசாரித் தேன்.

தே: என்ன சொன்னார்கள்?

ரா: பத்து நாட்களுக்கு முன்புதான் அவள் அக்கிராமத்தைவிட்டு எங்கேயோ போனா ளாம்.

தே: வேறு எங்கேயோ குடி போனாள் என்று சொன்னார்கள்? அவளுடன் இன் னும் யார் இருந்தார்களாம்?

ரா: அவள் தாய் மட்டும்தான் இருந்தாளாம். அவளுக்குத் தந்தை இல்லையாம்.

தே: எதற்காக ஊரைவிட்டுப் போனார்க ளாம்? திரும்பி வந்துவிடுவார்களாமா, விசாரித்தாயா நீ?

ரா: வயிறு வளர்ப்பதின் பொருட்டுத்தான் வெளியூர் போனார்களாம்? அவர்கள் மிக வும் ஏழைகளாம்.

தேவனின் கண்களிலிருந்து மலமலவென்று கண்ணீர் உதிர்ந்தது. "பாவம் வெளியூருக் குப் போனால்மட்டும் என்ன கிடைக்கும்?" என்றான்.

ரா: பெண்ணின்மூலம் ஏதாவது சம்பாதிக்க வழி செய்யலாமென்றுதான்.

தே: பெண்ணின் மூலமா? ராதா, என்ன கொடுமையான வார்த்தைகள்! சீக்கிரம் சொல்லு. உடனே அவர்களை அழைத்துக் கொண்டு வர ஏற்பாடு செய்கிறேன்.

ரா: அதுதான் முடியாத விஷயம்.

தே: ஏன்? அழைத்துக்கொண்டு வர முடி யாதா என்னால்?

ரா: உன்னால் முடியும். ஆனால் அவளை யாரோ அழைத்துக்கொண்டு போய்விட் டானாம்.

தே: அழைத்துக்கொண்டு போய்விட்டானா! யார் அவன்?

ரா: ஒரு பெரிய வர்த்தகன் என்று சொல் லிக்கொண்டார்கள்.

தே: என்ன ராதா, என்னவோ கூறுகிறாய்? வர்த்தகன் எதற்கு அவளை அழைத்துப் போகவேண்டும்?

ரா: காரணமிருந்துதான்.

தே: "என்ன காரணமது, சொல்லேன் சீக் கிரம்" என்று சொல்லிக்கொண்டே ராதா வின் கைகளை இறுக்கிப் பிடித்துக்கொண் டான்.

ரா: தேவா, இனி வருத்தப்பட்டுப் பய னில்லை. நான் சொல்வதைக் கேள். அவளைப்பற்றி இனி மறந்துவிடு. அவளை அழைத்துக்கொண்டு போன வர்த்தகன் பெரிய சித்திரப்படம் பிடிப்பவனும்.

தே: படத்தில் நடிப்பதற்கா அழைத்துக் கொண்டு போய்விட்டான்?

ரா: கல்கத்தாவிற்கு அழைத்துக்கொண்டு போய்விட்டான். அவளை வைத்துக்கொ ண்டு "சித்ரலேகை" என்னும் படத்தைப் பிடிக்கப்போகிறானும். நீ பார்த்த சித்திரம் வாஸ்தவத்தில் சித்திரமாகவே முடிந்துவிட் டது. அப்பெண் ஊமையாம். "இனி நீ அவளை மறந்து விடவேண்டும் தேவா" என்று அவனை அன்போடு அணைத்துக் கொண்டான்.

தேவனுடைய உள்ளத்தில் ஓர் பெரும் இடி விழுந்தது போலாயிற்று. அவனால் ஒன்றும் பேச முடியவில்லை. சித்திரலேகை! சித்திர லேகை! என்று இரண்டு சத்தம் போட்டான். அதுதான் அவன் பேசிய கடைசி வார்த்தை கள். அவன் கண்கள் கோவைப் பழம்போல் கலங்கின. அவ்வளவுதான் தேவனுடைய வாழ்வு ஓர் சித்திரமாகவே முடிந்தது. ஊர், உலகம் அவன் வாழ்வைச் சித்திரித்துக்கொண் டிருந்தன. தேவன் பைத்தியம் என்றார்கள் சிலர். தேவன் ஊமை என்றார்கள் சிலர். யார் என்ன சொன்னால் என்ன? அவன் வாய் திறக்கவில்லை. அவன் பித்தனா? பைத்தியக் காரனா என்பதை யார் நிர்ணயிக்கமுடியும்?

சகுந்தலையின் சுயம்வரம்

பூவாளூர் சுந்தரராமன்

'ஸார் தந்தி' என்றதும் ரமணிக்குத் தூக்கிவாரிப் போட்டது. ஆமாம், இந்தக் காலத்தில் தந்தி என்றாலே பயமாகத்தானிருக்கிறது. எந்த ஊரில் எந்த சொந்தக்காரர்களுக்கும், சிநேகிதர்களுக்கும் என்னவோ ஏதோ என்று பயத்தினால் உடல் வியர்க்க, விரல்கள் நடு நடுங்க, ஹிருதயம் துடிதுடிக்க, ரமணி தந்தியை உடைத்துப் பார்த்தான். 'உடனே புறப்பட்டு வரவும்' என்று அவன் நண்பன் ரங்கநாதன் தந்தி அடித்திருந்தான். எதற்காக என்பது தெரியவில்லை. மனது பல பல நினைந்து குழம்பிற்று. மூன்று நாட்களுக்கு முன்தான் ரமணி ரங்குவிடமிருந்து ஊருக்கு வந்துசேர்ந்தான். அவனும் ரங்குவுமாக ஒருவாரம் சேர்ந்து சாதித்த விஷயங்கள் எல்லாம் ஞாபகத்திற்கு ஒவ்வொன்றாக வந்தன.

2

ரங்குவுக்கு சேஷபுரத்தில் கலியாணம் நிச்சயம்செய்யப்பட்டிருந்தது. சீர், செனத்தி எல்லாம் அவனுடைய தாயார் நிச்சயம் செய்துகொண்டுவிட்டாள். ரங்கு பெண்ணைப் பார்த்துப் பிடித்திருந்தால் கலியாணத்திற்கு முகூர்த்த தேதி வைக்கவேண்டியதுதான் பாக்கி. ரங்கு பெண்ணைப் பார்க்கத் துணைக்கு ரமணியையும் கூட்டிக்கொண்டு போயிருந்தான்.

போன சமயம் சாயந்தரம் ஐந்தரை மணி இருக்கும். அகாலமாக இருந்துங்கூட, அவர்களுக்கு மரியாதைச் சிற்றுண்டியும் காபியும் வழங்கப்பட்டது. காபியைக் கொண்டுவந்து வைத்ததே மணப்பெண்தான்! பெண்ணைப் பற்றி ரங்கு என்னென்ன தெரிந்துகொள்ள வேண்டுமென்று நினைத்தானோ, அதையெல்லாம் பற்றி ரமணியை விட்டுக் கேட்கச் சொல்லியிருந்தான்.

பெண்ணின் பெயர் சகுந்தலா. பெயருக்கும் அழகுக்கும் இவ்வளவு பொருத்தத்தை வேறெந்தப் பெண்ணிடமும் பார்க்கமுடியாது. மலரப்போகும் மொட்டின் அழகுக்குத்தான் அவளுடைய அழகை உவமைச்சொல்லவேண்டும். அவள் ரங்குவை — புருஷன் ஆகப் போகிறான் என்றோ என்னமோ — ஒரேத் தடவைதான் கடைக்கண்ணால் பார்த்தாள். ஆனால் அவள் ரமணியை அடிக்கடி பார்க்கும் பொழுதெல்லாம் ரமணியின் கண்களைத்தான் சந்தித்தாள். அவளுடைய கண்களின் சக்தி ரமணியின் மனதில் பொறுமையைத்தான் கிளப்பிற்று. லேசாக 'பவுடர்' பூசப்பெற்ற அந்த அழகிய முகத்தில் மை தீட்டப்பெற்றிருந்த அந்தப்பெரிய கண்களின் பார்வைக்கு முன்னால், அவனுடைய பௌருஷம் எல்லாம் தளர்ந்துவிட்டது. அவள் தகப்பனாரிடம் இருந்து அவள் நாலாவது பாரம் படித்துக் கொண்டிருக்கிறாள் என்றும், ஹிந்தியில் 'பிராதமிக்' தேறியிருக்கிறாள் என்றும் தெரிந்துகொண்டார்கள்.

'ஸார், பாட்டு வருமா?' என்று மெதுவாக ரமணி கேட்டான்.

'சுமாராகப் பாடுவாள்; வாய்ப்பாட்டுத்தான் சொல்லி வைத்திருக்கிறேன்; கொஞ்சம் நாட்டியமும் தெரியும்' என்று நடேசய்யர் சொன்னார்.

அதற்குள் ரங்கு ரமணியின் காதண்டை, 'கொஞ்சம் நாட்டியம் ஆடச்சொல்' என்று சொன்னான்.

ரமணி, 'ஸார், கொஞ்சம் நாட்டியத்தை மட்டும் பார்க்க......' என்று முடிப்பதற்குள் நடேசய்யர் 'அதற்கென்ன, பேஷா. சகுந்தலா, கொஞ்சம் இங்கே வா. இவாள்ளாம் உன் நாட்டியத்தைப் பார்க்கவேண்டுமென்

கிறார்கள். கொஞ்சம் ஆடு, பார்க்கலாம்' என்றார்.

சகுந்தலா வாயைத் திறக்கவே இல்லை. லஜ்ஜையினால் அவளுடைய முகம் சிவந்து விட்டது. உடல்கூட நடுநடுங்கிற்று என்றே சொல்லவேண்டும்.

அவள் வெட்கப்படுகிறாள் என்பதைத் தெரிந்துகொண்ட நடேசய்யர், 'என்ன வெட்கம்? சகுந்தலா, இப்பதான் முதல் முதல் ஆடுகிறாயா, என்ன? சீக்கிரம் ஆடு' என்று திரும்பவும் சொன்னார்.

பிறகு கொஞ்சம் சமாளித்துக்கொண்டு, லேசான புன்முறுவலுடன் 'தீராத விளையாட்டுப்பிள்ளை' என்ற பாரதியாரின் பாட்டிற்கு அபிநயம் பிடித்தாள். குரல் மிகவும் நளினமாக இருந்தது. ரங்குவிற்கு சுபாவத்தில் சங்கீதம், நாட்டியம் இவற்றில் எல்லாம் அதிக ஆசை கிடையாது. ஆனாலும் அவன் அவளை விட்டுத் தன் கண்களை எடுக்கவே இல்லை. அவள்,

'என்னப்பன் என்னய்யன் என்றால் -
அதனை
எச்சிற்படித்திக் கடித்துக்கொடுப்பான்'

என்ற அடிகளில் கண்ணனைத் துதிக்கும் பாணியில் அபிநயம் பிடித்ததையும்,

'கள்ளாலே மயங்குவது போலே' என்பதில் உண்மையாகவே கள் குடித்தவரைப்போலக் கண்களையும் கைகளையும் முத்தரைவைத்துக் காண்பித்ததையும் பார்த்து ரமணியும் ரங்குவும் சித்திரம் போல ஆகிவிட்டார்கள்.

ரமணிக்கு முதலில் பொறாமைமட்டும் தான் இருந்தது. அவளுடைய நாட்டியம் அவனுடைய உள்ளத்தில் இப்பொழுது கெட்ட எண்ணத்தையும் உண்டாக்கிவிட்டது.

இவ்வளவு அழகிய கலா ரஸிகையை கலை உணர்ச்சியே இல்லாத ரங்கு அடையப்போகிறானே என்று அவன் மனம் பதறிற்று. அது எப்படியானால் என்ன? கடைசியில் ரங்குதன் சம்மதத்தை நடேசய்யரிடமே சொல்லி விட்டான். முகூர்த்தத்திற்குத் தேதியும் வைக்கப்பட்டுப் பத்திரிகையும் அச்சடிக்கக் கொடுத்தாய்விட்டது. உணர்ச்சியிலாத இயந்தரம் போல, ரமணியும் அவனுடனேயே இருந்து ரங்குக்கு வேண்டிய உடுப்புகளை எல்லாம் தைக்கக்கொடுத்து விட்டு முந்தாநாள் தான் வந்து சேர்ந்தான். இப்பொழுது தந்தி வந்ததும் அவனை அறியாமலே, அவன் மனதின் ஒரு புறத்தில் ஒரு ஆசை கிளம்பத்தொடங்கிற்று. ஏதாவது நடந்து இந்த முகூர்த்தம் நின்று விடக் கூடாதா என்பதுதான் அந்த ஆசை.

3

ரமணியைச் சந்திக்க ரங்கநாதன் ரயிலடிக்கே வந்திருந்தான். அவனுடைய முகத்தில் ஒருவித கலவரத்தின் ரேகை படர்ந்திருந்தது. வழக்கமான புன்சிரிப்பு இல்லை. அவனைப் பார்த்ததும் 'என்ன விசேஷம்?' என்றான் ரமணி.

'எல்லாம் வீட்டிற்கு வா, சொல்லுகிறேன்' என்று ரமணியை அழைத்துக்கொண்டு வீட்டிற்குப் போனான். வழியில் ரங்கு பேசாததில் இருந்தே ஏதோ விசேஷமான சம்பவம் ஏற்பட்டிருக்க வேண்டும் என்று ரமணி நினைத்தான்.

வீட்டிற்குப் போனதும் அவனுடைய அறைக்குள் போய் விளக்கேற்றினான். மேஜையின்மீது கிடந்த அன்று வந்த ஒரு 'உடைக்கப்பட்ட' கவரை ரமணியின் கையில் கொடுத்தான். அது ரங்குவிற்கு எழுதப்பட்டிருந்தது.

சேஷபுரம்,
12-3-42.

அன்பார்ந்த நண்பரே,

முன் பின் தெரியாத என் கடிதத்திற்கு நீங்கள் ஒருவேளை அதிக மதிப்பு கொடுக்காமல் இருக்கலாம். ஆனாலும் என் கடமையை நான் செய்துவிடுகிறேன். இந்தக் கடிதம் துவேஷத்தால் எழுதப்பட்டது என்று நீங்கள் நினைத்துவிடக்கூடாது. பிற்பாடு ஒருவேளை இந்தக் கடிதம் யார் எழுதினது என்று தெரிந்துகொண்டால் நீங்களே ஆச்சரியப்படுவீர்கள். பீடிகை நிற்க.

விஷயம் இதுதான். உமக்கு மணம் செய்விக்க நிச்சயித்து இருக்கும் ஸ்ரீமதி சகுந்தலாதேவி எல்லாவிதத்திலும் உயர்ந்த பெண்தான். ஆனால் ஆறுமாதங்களுக்கு முன் குழந்தைத்தனமான ஒரு காரியத்தைச் செய்துவிட்டாள். அதுதான், அவள் மூன்று நாட்கள் வீட்டில் இல்லை. அதே சமயத்தில் எதிர் வீட்டுப் பையனும் இல்லை.

பிறகு இருவரையும் வத்தலகுண்டுவில் கண்டு பிடித்து அவளுடைய தகப்பனர் கொண்டு வரும்பாடு பிரம்மப் பிரயத்தன மாகிவிட்டது. இது விஷயத்தில் உங்களுக்குச் சந்தேகம் இருந்தால் எதிர் வீட்டுப் பையனையோ, தைரியம் இருந்தால் பெண்ணின் தகப்பனரையோ, மனமிருந்தால் மணப் பெண்ணையோ கேட்டுத் தெரிந்து கொண்டுவிடுங்கள். அதை மன்னிக்க உங்கள் ஹிருதயத்தில் இடமிருந்தால் மணம் செய்துகொள்ளுங்கள். இவ்வளவும் நீங்கள் பிறகு தெரிந்துகொண்டு உங்கள் இல்லற வாழ்க்கையில் சந்துஷ்டி இல்லாமல் இருக்கக் கூடாது என்பதற்குத்தான் இக்கடிதம் உங்கள் சமுகத்திற்கு அனுப்பப்படுகிறது' என்று கையெழுத்தில்லாமல் எழுதப்பட்டிருந்தது.

படிக்கப் படிக்க ரமணிக்குக் கண்கள் மயங்கின. அவனுடைய ஹிருதயத்தின் ஓட்டம் நின்று விடும் போலிருந்தது. உடலும் மனமும் பதறின. அவன், கடிதத்தில் கண்டயாவும் பகற்கனவு போல் உண்மையற்றதாக இருக்கக்கூடாதா என்று அவன் மனம் அவலம்பித்தது.

'நான் நினைத்தபடி படித்த பெண்ணின் லக்ஷணத்தைப் பார்த்தாயோன்னோ' என்றான் ரங்கு.

'இன்னமும் நாம் விசாரித்து முடிவு கட்டவில்லையே.'

'இதில் உனக்கு ஏதாவது சந்தேகமுண்டா?'

'ஏன் இருக்கக் கூடாது? யாரோ ஒருவன் ஒரு கடிதத்தை எழுதிவிட்டால் அது சரியாகப் போய்விடுமா? எதற்கும் நாம் தீர விசாரிக்க வேண்டாமா?'

'சரி, உடனே புறப்படு, நாம் நேராகவே போய்த் தெரிந்து கொண்டு விடலாம்' என்று அவசரப்படுத்தினன் ரங்கு. ரமணி சிறிது தயங்கினன். இன்னும் கடிதத்தைப் பிரித்து வைத்துக்கொண்டு திரும்பத் திரும்ப படித்துப் பார்த்துக் கொண்டிருந்தான். அவன் சிறிது தயங்கிக் கொண்டே, 'ரங்கு, அவசரப்படாதே. நாம் போய்க் கேட்பதற்கு முன் ஒரு விஷயத்தைப்பற்றி நன்ருகத் தீர்மானித்துக்கொள். அப்படியே நாம் போய்க் கேட்கிருேம். விஷயம் உண்மையாக இருக்கிறதென்று வைத்துக்கொள். அதற்குப் பின் என்ன செய்யப் போகிறுய்?' என்று கேட்டான்.

'என்ன செய்யவாவது? நடையைக் கட்ட வேண்டியதுதான். வரும் வழியில் ஒரு வாய்க்காலில் அந்தக் கல்யாணத்திற்கு ஒரு முழுக்குப் போடவேண்டியதுதான்' என்ருன் ரங்கு.

'ஏன்? அந்தச் சிறு குற்றத்தை மன்னித்து விடக்கூடாதா?'

'அதைப்பற்றி இப்பொழுது விவாதிக்க வேண்டாம். கிளம்பு இப்பொழுதே' என்று என்ன சொல்லியும் கேட்காமல் சாப்பிட்ட உடன் சேஷபுரத்திற்குப் பிரயாணமானுர்கள்.

4

சேஷபுரத்தை அவர்கள் அடைந்தபோது காலை மணி ஏழிருக்கும். நேராகச் சகுந்தலா வீட்டிற்கு எதிர் வீட்டிற்குப் போனுர்கள். கடிதத்தில் குறிப்பிட்டிருந்த பையனைப் பார்த்தார்கள். அவன் பெயர் சந்துரு. கொஞ்ச நேரம் அவனுடன் லோகாபிராமமாகப் பேசிக்கொண்டிருந்துவிட்டு, ரங்கு, 'உன்னை ஒன்று கேட்கவேண்டும், சந்துரு. தயவு செய்து உண்மையை மட்டும் கூறிவிடவேண்டும்' என்று கேட்டான்.

'அதற்கென்ன, ஸார். சொல்லுகிறேன்' என்று சந்துரு சிரித்துக்கொண்டே சொன்னுன்.

'உனக்கும் சகுந்தலாவிற்கும் ஏதாவது இதற்கு முன் தொடர்புண்டா?'

இந்தக் கேள்வியைக் கேட்டதும் அவன் திகைத்துவிட்டான். யார்தான் இந்தக் கேள்வியை எதிர்பார்க்கக்கூடும்?

'நீங்கள் சொல்வது ஒன்றும் புரியவில்லையே' என்று மிகவும் நடுக்கத்துடன் கூறினுன்.

'நீயும் சகுந்தலாவும் ஆறேழு மாதத்திற்கு முன் 'கம்பி' நீட்டினதுண்டா?'

மிகவும் தடுமாற்றத்துடன் 'இல்லையே' என்ருன். ரங்குக்கு அவன் விழுங்கிவிழுங்கிச் சொல்வதில் இருந்தே சந்தேகம் வந்துவிட்டது. ஒருபுறத்தில் அசாத்திய கோபமும் வந்துவிட்டது.

'என்னடா, இல்லை? ஓடினது உண்டா இல்லையா?' என்று ரங்கு கத்தினுன்.

'உம், உம் போனேம்.'

அவ்வளவுதான்! ரங்குவும் ரமணியும் அங்கிருந்து கிளம்பினர்கள். ரமணிக்கு மட்டும் நடேசய்யரையே கேட்டுவிட வேண்டுமென்று எண்ணம். அது ரங்குவுக்கு இஷ்டமில்லே. அடுத்த நாள் விவரமாக ரங்கு, தன் தகப்பனுருக்கு நடந்த விஷயங்களை எல்லாம் எழுதிவிட்டான். பிறகு கேட்கவா வேண்டும்? கலியாணமும் நின்றுவிட்டது.

5

ரங்குவிற்கு அடுத்த முகூர்த்தத்தில் வேறு கலியாணம் நடந்தது. ரமணியினுடைய உள்ளத்தில் ஒரே குழப்பம். திரும்பவும் திரும்பவும் அவன் மனம் அந்த ஒன்றையே நாடிற்று. அந்தக் கடிதத்தில் கண்ட எல்லாம், சந்துருவிடம் கேட்ட எல்லாம் பொய்யாக இருக்கக் கூடாதா என்றுதான். அவன் ரங்குவின் நிலைமையில் இருந்து அக்கடிதம் அவனுக்கு எழுதப்பட்டிருந்தால் அவன் அக்குற்றத்தை மன்னித்தும் மறந்துங்கூட இருப்பான். இப்பொழுது விஷயம் ரங்குவிற்குத் தெரியும். அத்துடன் இல்லாமல் அவன் குடும்பத்தில் உள்ள யாவருக்கும் தெரிந்துவிட்டது. இவ்வளவு கலவரமும் ஆனபிறகு அவளுடைய குற்றத்தை மன்னிக்க அவன் ஹிருதயத்தில் இடம் இருந்தாலும் அவளை அவன் மனைவியாக ஏற்று வாழ்க்கையை நடத்துவதைக் கண்டு பலர் எள்ளி நகையாடுவதை அவன் மனம் விரும்பவில்லை. இந்த நிலையில் ரமணியின் தாயார் ரமணிக்கு ஒரு 'கட்டை' கட்டிவிடவேண்டுமென்று எவ்வளவு முயன்றும் அது பலிக்கவில்லை. சகுந்தலாவிற்கும் இரண்டு மூன்று வரன்கள் வந்து முதலில் பெண் பிடித்திருப்பதாகச் சொல்லி, முகூர்த்தத்திற்கு தேதி வைப்பதும் பிறகு திடீரென்று நின்றுவிட்டதாகவும் ரமணி கேள்விப்பட்டான்.

6

இரண்டு மூன்று வருஷங்கள் கழிந்தன. இதன் நடுவில் ரமணியின் சித்தப்பாவைத் தெய்வச்செயலாகச் சேஷபுரத்திற்கு மாற்றியிருந்தார்கள். அவர்கள் அங்கே குடிபோன ஒரு மாதங்கழித்து ரமணி சேஷபுரத்திற்குப் போனன். அவன் வீட்டிற்குப்போய்ச் சேரும்பொழுது விளக்குவைக்கும் நேரம்.

ரமணி வண்டியை விட்டு இறங்கி சித்தியின் வீட்டிற்குள் கால் எடுத்து வைக்கும்போது உள்ளேயிருந்து வந்துகொண்டிருந்தவள் சாக்ஷாத் சகுந்தலாதான்! இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டதும் அப்படியே ஸ்தம்பித்து நின்றுவிட்டார்கள். அவளுடைய அழகு அவளுக்குத் தெரிந்திருக்காதுதான். சூரியனுடைய கிரணங்கள் தழுவத்தழுவ நெகிழ்ந்து விரிந்து பூத்தும் பூக்காமலும் இருக்கும் தாமரைப்பூவைப்போல, அந்த இரண்டு வருஷங்களுக்குள் எங்கிருந்தோ பெண் குணங்கள் எல்லாம் அவளை நாடி வந்துவிட்டன! மனதில் கவலை இருந்தது என்பதைக் கண்கள் சந்தேகத்திற்கு இடமில்லாமல் காட்டின. ரமணி மனதைத் திடப்படுத்திக்கொண்டு மேலே அடி எடுத்துவைக்க ஆரம்பிக்கும்பொழுது அவளும் அந்த வீட்டிற்குள்ளேயே ஓடிவிட்டாள்.

அபூர்வமாக ரமணி வந்ததைப்பற்றி அவன் சித்தி செய்த உபசாரம் கொஞ்சநஞ்சமல்ல. சகுந்தலாவிற்கு அவனைத் தெரியாததுபோல, 'சகு, இங்கே வந்துபார், எங்க ஓரகத்தி பிள்ளை ரமணி!' என்றும், அவனிடம், 'ரமணி, அடுத்தவீட்டுப்பெண் சகுந்தலா. அவசியம் நீ இவளுடைய நாட்டியத்தைப் பார்க்க வேணும். இன்னும் கலியாணம்கூட ஆகவில்லை' என்று விஷமத்தனமாகச் சிரித்துக்கொண்டு அறிமுகப்படுத்தினள்.

இரண்டு நாட்களில் திரும்பி வரவேண்டுமென்று நினைத்துச் சென்ற ரமணி இரண்டு வாரங்கழிந்தும் திரும்பிப்போக மனம் வரவில்லை. பக்கத்து வீடு ஆனபடியால் சகுந்தலாவிற்கு எப்பொழுது பார்த்தாலும் இவன் சித்தி வீட்டில்தான் வாசம். ஒரே விளையாட்டும் கொட்டமுமாக அந்தப் பதினைந்து நாட்களும் கழிந்துவிட்டன. ஒரு காரணமும் இல்லாமல் — அவனுக்கு மட்டும் இருக்கத்தான் இருந்தது — ஒரே இடத்தில் பதினைந்து நாட்கள் உட்கார்ந்துகொண்டிருப்பது அவனுடைய மனதில் உறுத்திக்கொண்டிருந்தாலும், அவனுக்கு ஊருக்குப்போக மனமே இல்லை.

அன்று வெள்ளிக்கிழமை மாலை. சித்தி கோயிலுக்குப் போயிருந்தாள். சித்தப்பா இன்னும் 'கோர்ட்டி'லிருந்து வரவில்லை. ரமணி கூடத்தில் உட்கார்ந்துகொண்டே 'பைரவி'யைப்படித்துக்கொண்டேயிருந்தான். கால் சதங்கைகளும் கை காப்புகளும் ஒன்றோடொன்று போட்டிபோட்டுக்கொண்டு ஒலிக்க,

'அம்மாமி, அம்மாமி' என்று கூப்பிட்டுக் கொண்டே சகுந்தலா ஓடிவந்தாள். கூடத்தில் ரமணியைத் தவிர வேறு ஒருவரும் இல்லை. கொல்லைவரையிலும் போய்விட்டுத் திரும்பி வரும்பொழுது, 'அம்மாமி எங்கே?' என்று ரமணியைக் கேட்டாள்.

'கோயிலுக்குப் போயிருக்கா போலே இருக்கு.'

'எங்காத்துக்கு ஒரு தடவை கூட வரக் கூடாதா?' என்று சங்கோஜத்துடன் கேட்டாள்.

'ஏன் வராமல் என்ன? என்ன இருந்தாலும் நீ இப்படி..........' என்று ரமணி அந்தப் பழைய 'காகிதக் கதையை' எடுத்தான்.

'என்ன இப்படி?'.

'நீ செய்த அந்த காரியம் நன்றாக இருக்கா?,

'எந்தக் காரியம்? கொஞ்சம் விவரமாகச் சொல்லக்கூடாதா?' என்று கெஞ்சும் பாவனையில் கேட்டாள். அந்த நிமிஷத்தில் அவனுக்கு அவள் ஸாகஸம் செய்கிறாள் என்றுதான் பட்டது. அதனால் அவள்மீது கொஞ்சம் வெறுப்புத்தான் தலை தூக்கி நின்றது.

'எதிர் வீட்டுப் பையனுடன், வத்தலகுண்டு வரையிலும்.........' என்று ஆக்ரோஷத்துடன் வெளியிட்டான்.

'இடி இடி' என்று உரக்கச் சிரித்துக் கொண்டே 'உங்கள் நண்பருக்கு அந்தக் கடிதத்தில் எழுதியிருந்த விஷயமா? ஐயோ, பாவம்! நான் ஓடிப்போன பெண் அல்லவா? அதற்குத்தானே அவர் என்னை வேண்டாமென்றது? உங்களுடைய அபிப்பிராயம் என்ன?' என்று விஷமத்தனமாகக் கேட்டாள்.

அதைக் கேட்டதும் அவன் மனதில் ஏற்றியிருந்த ஒரு பெரிய சுமையை இறக்கினது போலிருந்தது. அவள் சொன்ன வகையில் விருந்து உண்மையில் இதில் ஏதோ விசேஷம் இருக்கவேண்டுமென்று நினைத்தபடியே இருந்தது. ஆனால் அவன் வாய் என்னவோ அடைத்துவிட்டது.

சகுந்தலா திரும்பவும், 'அந்த விஷயம் ஒரு வேடிக்கையான கதை. நீங்கள் வந்ததற்கு ஆறு மாதங்களுக்கு முன் அதே வீட்டில் வேறு ஒருவர் குடியிருந்தார். அந்த வீட்டில் கூட்டிக்கொண்டிருந்தவளின் பெயரும் சகுந்தலாதான். இப்பொழுதாவது உங்களுக்கு விஷயம் புரிந்திருக்குமென்று நினைக்கிறேன்' என்று சொல்லிவிட்டு 'நானும் கோயிலுக்குப் போகவேண்டும்' என்று சொல்லிவிட்டு ஓடிவிட்டாள்.

7

அடுத்த நாள் முதல் ரமணிக்குச் சகுந்தலா வீட்டில் ஒரு வேளை காபியோ, சாப்பாடோ தவறினது கிடையாது. அவர்கள் இருவருக்கும் ஆடம்பரமில்லாமல், உற்றார் நண்பர்கள் கூட அதிகமாக இல்லாமல் கல்யாணம் நடந்தது.

கலியாணம் ஆன மறு நாள் ரமணி தன் வீட்டில் ஒரு விருந்து வைத்திருந்தான். அதற்கு அவனுடைய நண்பர்கள் ஆண் பெண் இரு பாலாருக்கும் அழைப்பு அனுப்பியிருந்தான். வாசலில் நின்றுகொண்டு நவீன முறைப்படி ரமணியும் சகுந்தலாவும்தான் விருந்ினர்களை வரவேற்றுக்கொண்டிருந்தார்கள். ரங்கநாதனும் அவனுடைய 'கிருகலக்ஷ்மி'யும் வண்டியில் வந்து இறங்கினார்கள். இறங்கிக்கொண்டே 'என்னடா, செலவு அதிகமாகப் போயிடும் என்று நினைச்சிண்டு கல்யாணத்தைச் சொல்லாமே கொள்ளாமே செய்தயா? அல்லது எங்கள் 'பரிசுகளை' எல்லாம் வாங்கிக்கொள்ளக்கூடாது என்ற எண்ணமா?' என்று கேட்டுக்கொண்டே வந்தவன் சகுந்தலாவைப் பார்த்ததும் திடீரென்று நிறுத்திவிட்டான். தனியாக ரமணியைக் கூப்பிட்டு 'இதற்குத்தானா எங்களைக் கல்யாணத்திற்குக் கூப்பிடவில்லை?' என்று கேட்டான்.

'ஆமாம்.'

'ஏன் உனக்கு அந்த அவமானம் தேவலையா?'

'தேவலை' என்றுதானே செய்துகொண்டிருக்கிறேன்.'

அமளியெல்லாம் அடங்கிவிட்டது. ரங்குக்கு மட்டும் மிகவும் கோபம். திரும்பத் திரும்ப 'நீ எவ்வளவு கேவலமான செய்கையைச் செய்துவிட்டாய்' என்று ரமணியைக் கேட்டுக்கொண்டிருந்தான். ரமணி அவனிடம் உண்மையைச் சொல்லவில்லை. அவனுக்கே எல்லா விஷயங்களும் தெளிவாகத் தெரியாத போது எப்படிச் சொல்லமுடியும்? அவனிடம் சொன்னதெல்லாம் 'உன்னால் அவளை மன்

னிக்க முடியவில்லை; கல்யாணமும் செய்து கொள்ளவில்லை. என்னால் மன்னிக்கமுடிந்தது, கல்யாணமும் செய்துகொண்டேன்' என்று சொல்லிவிட்டான்.

ஒரு வாரம் கழிந்தது. திரும்பத் திரும்ப ரமணி சகுந்தலாவை அந்தக் கடிதத்தைப் பற்றியே கேட்டுக் கொண்டிருந்தான். 'சகு, இன்றைக்குச் சொல்லுகிறேன் என்று சொன்னாயே' என்று திரும்பவும் ஞாபகப்படுத்தினான்.

'உங்களுக்குத் தூக்கமே வராதோ தெரிந்து கொள்ளாவிட்டால்?' என்று சகுந்தலா சிரித்துக்கொண்டே கேட்டாள்.

'உண்மையாகவே தூக்கம் வரவில்லைதான்.'

'அந்தக் கடிதம் உண்மையில் எங்க அப்பா தான் எழுதினார்.'

'அவர் ஏன் எழுதவேண்டும்?' என்று ரமணி மிகுந்த ஆச்சரியத்துடன் கேட்டான்.

'ஏனா? என்னால்தான்.'

'உன்னால்தான் என்றால் எனக்குச் சரியாகப் புரியவில்லையே.'

'பின் நீங்கள் ஏன் வக்கீலுக்குப் படிக்க வேண்டும், இது கூடத் தெரியாவிட்டால்?'

'பெண்கள் சம்பந்தப்பட்ட கேஸ் என்றால் வக்கீல் கூடத் தடுமாற வேண்டியதுதான்.'

'ஆமாம், இப்படிச் சொல்லி என் வாயை அடைத்து விடுங்கள்.'

'உன் வாயை நான் அடைக்கவில்லையே; வாய் திறந்து விஷயத்தைத் தெளிவாகத் தானே சொல்லச் சொல்கிறேன்.'

'உங்கள் நண்பரை எனக்குப் பிடிக்கவில்லை; அப்புறம்தான் இந்த யுக்தி.'

'ஓகோ! எல்லாம் புரிந்துவிட்டது. ஆனால் நான் திரும்ப வருவேன் என்று உனக்கு எப்படி நம்பிக்கை இருந்தது?'

'உங்களைப் பார்த்த அன்றைக்கே எனக்கு அந்த நம்பிக்கை உண்டு.'

'சரிதான், இது சகுந்தலாவின் சுயம்வரம் போலிருக்கு, என்று அவன் சொல்வதைக் கூடக் கேட்காமல் சகுந்தலா உள்ளே ஓடி விட்டாள்.

'உள்ளே 'கண்ணன் முகம் மறந்துபோனால் இந்தக் கண்கள் இருந்து பயனுண்டோ' என்று சகுந்தலா பாடுவது ரமணியின் காதில் விழுகிறது.

பொருமைக் கண்கள்

எல். வி. எஸ். மணியன்

•

டில்லியில் மொகலாய சக்ரவர்த்தி அக்பரின் அரண்மனைக்கடுத்த பூந்தோட்டம். சந்திரன் தன் கிரணங்கள் பட்ட அந்த அழகிய நந்தவனத்தை பொன்னுலானதோ என்று ஐயுறும் வண்ணம் செய்துகொண்டிருந்தான். தோட்டத்தில் ஒரு பசும் புற்றரை மரகத மேடைபோலிருந்தது. அம்மேடையை மரங்களிலிருந்து விழுந்த பூக்கள் இன்னும் அழகுறச்செய்தன. புற்றரையின் நடுவில் உட்காருவதற்காக ஒரு அழகிய கற்பாறை இடப்பெற்றிருந்தது. உல்லாஸமாக உலவிக்கொண்டிருந்த இளவரசர் ஸலீமும், அவர் நண்பன் நஸீமும் அம்மேடையில் வந்து உட்கார்ந்து கொண்டு அளவளாவிக்கொண்டிருந்தனர்.

'இளவரசே, இம்மாதிரியாக நாம் பேசிக்கொண்டேயிருந்தால், நமக்கு பொழுதுபோவதே தெரியாது. பிறகு இன்றைய நடனத்திற்கு செல்ல நேரமாய்விடும்' என்று அன்று நடக்கவிருந்த நடனத்தை ஞாபகப்படுத்தினான் நஸீம்.

'சற்றுப் பொருத்துதான் என்னால் வர முடியும். அவசரமானால் நீ போ' என்று தான் சந்திக்கப்போகும் ஆஸாமி வரும்போது நஸீம் இல்லாமலிருந்தால் நலமென்று எண்ணிய ஸலீம் கூறினான்.

'தெரியுமே! காரணமின்றி இவ்வளவு நேரம் இங்கு இளவரசர் தங்கமாட்டாரென்று. காதலியைச் சந்தித்து, சீக்கிரம் சம்பாஷணைகளை முடித்துக்கொண்டு நாட்டியத்திற்கு வந்துவிடுங்கள். இல்லாவிட்டால், சக்ரவர்த்தியின் சந்தேகத்திற்கு ஆளாக நேரும். நானும் வீட்டிற்குச் சென்று, சீக்கிரம் வருகிறேன்' என்று சென்றான் தோழன் நஸீம்.

தோழன் சென்றதும், சந்திரன் தனது பத்தினியருடன் வான வெளியிலே மேகங்களினிடையே மறைந்து மறைந்து ஒளிந்து கண்ணும்பூச்சி விளையாடுவதைக் கண்டு வியந்துகொண்டிருந்தான் ஸலீம்.

அச்சமயத்தில் பின்புறமாக வந்த இரு அழகிய கரங்கள், அவனது கண்களைப் பொத்தின.

'அனா' என்று பொத்திய கைகளைப்பற்றிக் கொண்டு கண்களை அம்மிருதுவான கைகளின் மூடுதலினின்றும் விடுவித்துக் கொண்டான் ஸலீம்.

ஆம், அனார்தான் கண்களைப் பொத்தினது.

அவள், ஒரு மோகனச்சிரிப்புடன், 'என்ன அண்ணாந்து ஆகாயத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்?' என்று இளவரசனின் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு அவன் தோளில் சாய்ந்தவண்ணம் கேட்டாள்.

'சந்திரன் தன் மனைவியருடன் ஓடி விளையாடுவதைக் கண்டு ஆனந்தித்துக்கொண்டிருந்தேன்' என்று அவள் கொழுவிய கன்னத்தில் சிறிய கிள்ளொன்று கிள்ளினான் இளவரசன்.

'இல்லையில்லை, உங்களுடைய முகத்தினழகிற்கு முன் நிற்க தைரியமின்றி, அதோ பார்த்தீர்களா! சந்திரன் ஓடி ஒளிகிறான்' என்று சிரிப்பும் குதூகலமும் கொந்தளிக்க ஆகாயத்தைச் சுட்டிக் காட்டினாள் அனார்.

'அதிருக்கட்டும் அனார் நீ வருவதற்கு ஏன் இவ்வளவு நாழி? உனக்காக எவ்வளவு நேரமாக நான் காத்துக்கொண்டிருப்பது?' என்றான் ஸலீம்.

'இன்றைய தினம் நாட்டியமல்லவா? அதற்கு வேண்டிய ஏற்பாடுகளெல்லாம் செய்துவிட்டு வருவதற்கு நாழிகையாய்விட்டது. ஏற்கனவே சக்ரவர்த்தி என்மேல் சந்தேகம் கொண்டிருக்கிறார். இன்னும் நாட்டியத்திற்கு நேரங் கழித்தோ, போகாமலோ இருந்தால் சந்தேகமதிகரிக்குமல்லவா?' என்றாள்

இவ்விதமாகக் காதலரிருவரும் சந்தோஷமாக அளவளாவிக் கொண்டிருந்தனர்.

2

அதே நந்தவனத்தில் மற்ருெருபுறம்.

'சக்ரவர்த்தி, சக்ரவர்த்தி, என்று எல்லோரும் சொல்கிருர்கள் அபுல் பேஸல். சக்ரவர்த்தியாக இருந்தாலல்லவோ தெரியும் அவர்களுக்கு அதன் கஷ்ட நிஷ்டூரங்கள். எப்பொழுது பார்த்தாலும் ராஜ்யத்தைப்பற்றிய கவலேயே. ஒழிவென்பதே சிறிதும் கிடையாது. மன நிம்மதியுமில்லே' என்ருர் மனச் சந்துஷ்டிக்காக நந்தவனத்திற்கு உலாவ வந்த மொகலாய மன்னன் அக்பர்.

'சிறிது நேரம், தனிமையாக இப்பூங்காவை சுற்றிவந்தீர்களானுல் மனச்சாந்தி ஏற்படும். அதற்குள் நானும் என் அலுவல்களே முடித்துக்கொண்டு நடனசாலேக்கு வருகிறேன்' என்று உத்திரவுபெற்றுச் சென்ருர் அபுல் பேஸல்.

அந்நிலவொளியில், அவ்வழகிய நந்தவனத்தைச் சுற்றிவந்தார். நிலவொளியும், குளிர்ந்த தென்றலும், நறுமலர்களின் பரிமளமும் குழம்பிக்கிடந்த மன்னனின் மனத்திற்குச் சாந்தியை அளித்தன.

தூரத்தில் சிரிப்பு சப்தம் நந்தவனத்தின் அமைதியைக் குலேத்தது. யாரது? இந்த சமயத்தில் இங்கு சிரிப்பானேன். நடனத்திற்கு சென்றிருக்கவேண்டிய சமயத்தில் யார் இங்கு இவ்வளவு குதூகலமாக இருப்பது?

சிரிப்பு வந்த திக்கை நோக்கிப் போனுன் மன்னவன். செடிகளிடையே தூரத்தில் நிலவொளியில் கட்டியணேத்தவண்ணம் காதலரிருவர் தம்மையே மறந்திருப்பது தெரிந்தது அக்பருக்கு. அருகில் போகவில்லே. சிறிது நேரத்திற்கெல்லாம் அக்காதலர் எதிர் திசையில் ஒருவரையொருவர் பிரிய மனமின்றி பிரிந்துபோவது தெரிந்தது. அங்கு தூரத்தில் தெரிந்த ஆணுருவம் தன் மைந்தன் ஸலீம் என்று, தன்னருகிலிருந்த செடியின் பக்கமாக சென்றபோது அக்பருக்குத் தெரிய வந்தது. அப்படித் தன் மகனேக் கட்டியணேத்து முத்தமீந்த அந்தப் பெண் யார்? அது தெரியவில்லே அக்பருக்கு. மானெனமறைந்துபோனுள் மடந்தை.

ராஜ்ய விஷயங்களில் ஈடுபட்டிருந்ததால் சஞ்சலமடைந்திருந்த தனது மனத்திற்கு ஓய்வுகொடுக்க எண்ணி, நல்ல காற்றிலுலாவ அரண்மனேத் தோட்டத்திற்கு வந்த அக்பருக்கு, மேலும் சஞ்சலத்தை உண்டுபண்ணியது தனது மகன் கள்ளக்காதல் புரிவது தெரிந்ததும். தனக்குப் பிறகு ஹிந்துஸ்தானத்திற்கே சக்ரவர்த்தியாக வேண்டிய ஸலீம், பேர், ஊர் தெரியாத பெண்ணுடன் கள்ளக்காதல் புரிவது அக்பருக்குக் கிஞ்சிற்றும் பிடிக்கவில்லே. அதுவும் தன் கண்களினுலேயே கண்டபிறகு கோபமும் மூண்டது. முளேயிலேயே இதைக் களேந்தெறிய விரும்பினுன் அந்த மொகலாயன்.

அந்த மங்கை யாரென்று தெரியவில்லேயே? அவளுக்கும் எவ்வளவு துணிவு, அரண்மனேத் தோட்டத்திலேயே திருட்டுக் காதல் புரிய? ஆம், அவள் யாராயிருந்தாலென்ன? தன் மகனின் மனதை மாற்றியவள், தன் கண்ணெதிரிலேயே அவர் மகன் ஸலீமைக் கட்டியணேத்துக்கொண்டாள். அவளேக் குறைகூறிப் பயனென்ன? தன் மைந்தன், சக்ரவர்த்தியாகப் போகிறவன் சற்றும் பொருப்பற்று நடந்து கொண்டால்? இங்ஙனம் பலவிதமாக நினேத்த மன்னன் ஸலீமின் இந் நடத்தையைக் கண்டிக்கக் கருதினுன்.

3

நடன சாலே; தேவேந்திரனின் நடன சாலேயோவெனத் தோன்றியது. இக்காலத்தைப்போல அக்காலத்தில் மின்சார விளக்குகள் ஏது? நாம் மசூதிகளில் பெரியதாகத் தொங்கிக் கொண்டிருக்கும் மெழுகுவர்த்திகளால் ஏற்றப்பட்ட பெரிய கண்ணுடிக்ளோப் விளக்குகளேப் பார்க்கிறேமே, அது தான் அந்நாளில் அதிகம். அவ்வித மெழுகுவர்த்திகளால் கொளுத்தப்பட்ட விளக்குகள் நடனசாலேயை அலங்கரித்துக் கொண்டிருந்தன. அவைகளின்றும் வீசும் ஒளி, இரவா, பகலா என்று திகைப்புறச் செய்தது. மந்திரி பிரதானிகள் அணிந்திருந்த முத்து மாலேகளும், சரிகை ஆடைகளும் விளக்கொளியில் கண்களே மின்னலேப்போல் பறித்துக்கொண்டு போயின.

அக்பர், சிம்மாசனத்தில் திண்டுகளில் சிறிது சாய்ந்தவண்ணம் அமர்ந்திருந்தார். சற்று தூரத்தில் இளவரசர் ஸலீம். அவன் பக்கத்தில் அவன் நண்பன் நஸீம். மற்றும் ஏனைய பிரதானிகள் நடனசாலேயில் குழுமி இருந்தனர்.

அரண்மனையில் நடனக் கலையில் தேர்ச்சி பெற்றவர்களெல்லாம் தங்களது கைவரிசைகளை எல்லாம் காட்டி பரிசு பெற்றுப் போய்க் கொண்டிருந்தனர்.

சாய்ந்து நடனத்தை ரஸித்துக்கொண்டிருந்த அக்பர் நிமிர்ந்து சிங்காசனத்திலமர்ந்தது அவர் அதிகமாக நடனத்தை ரஸிப்பதைக் காட்டியது. காரணமின்றி நிமிர்ந்து உட்காரவில்லை அந்த மொகலாயன்.

அனுர்கலியின் முறை. நடனமாடிக்கொண்டிருந்தாள். நடன மாது ரம்பையும் வெட்கும்வண்ணம் ஆடிக்கொண்டிருந்தாள். அவளது நாட்டியத்திற்கு பன்மடங்கு சோபையளித்தது அவளது யௌவனமும், வசீகரம் பொருந்திய தேகக் கட்டும், அழகும், அணிந்திருந்த ஆபரணங்களும் ஆடையும்.

அனுர்கலி பாரசீக தேசத்தினள். தாய் தந்தையற்ற அனுதை. பல ஆண்டுகளாக அரண்மனையில் அந்தப்புறத்தில் ஊழியம் செய்யும் ஒரு தாதி. வயது சுமார் பதினெட்டென மதிப்பிடலாம். அவளது அழகிய வளைந்த புருவங்களும், கடைந்தெடுத்த மூக்கும், மிருதுவான கன்னங்களும், கண்ணீர் (தோன்றி மறையுமியல்புடைய) என்னும் கடலிலே துள்ளித் திரியும் இரு மச்சமென விளங்கிய அனுரின் நயனங்களும், முல்லைச் சிரிப்பும், மதிமுகமும், மயில்போன்ற சாயலும், குயில்போன்ற குரலும் முதுமையெய்திய மொகலாயச் சக்ரவர்த்தியையே ஒரு ஆட்டு ஆட்டியது என்றால் காளைப் பருவத்தினனான ஸலீம் அவள் வயப்பட்டது ஆச்சரியமல்லவே!

அனுர்கலியின் நடனம் முடிந்தது. சக்கரவர்த்தியை வணங்கினள். தானணிந்திருந்த விலையுயர்ந்த முத்து மாலையைக் கழற்றி அனுரின் கரங்களைப் பிடித்துக்கொண்டு அளித்தான். அவ்வளவு காமம் தலைக்கேறியிருந்தது மன்னனுக்கு.

அடுத்தபடியாக, இளவரசனை வணங்கினள். இரு அழகிய வளையல்களை (அவளுக்கென்று தான் செய்து வந்தானே என்னவோ இளவரசன். இல்லையென்றால் அவனிடமேது வளையல்கள்) பரிசாக அளித்தான். அதோடு நின்றானா? ஏதோ உதட்டை அசைத்தான். புரிந்துகொண்டாள் அனுர்கலி. காதலர் பாஷை காதலருக்கல்லவோ தெரியும். தலையை அசைத்து தன் சம்மதத்தைத் தெரிவித்து விட்டாள். அங்குதான் வந்தது அனர்த்தம்.

தேன் குடித்த நரிபோல, விட்டில் பூச்சி போல அனுர்கலியின் எழிலில் மயங்கியவனாய் அவளையே கண்ணிமையாமல் கண்ணுற்றிருந்த மொகலாய மன்னன், இளவரசன் ஏதோ உதட்டை அசக்கியதையும், அனுர் தலையை அசைத்ததையும் கண்டு, மயக்கத்திலிருந்து விழித்துக் கொண்டான்.

4

இப்பொழுது அரசனுக்கு விஷயம் விளங்கி விட்டது. அரண்மனை நந்தவனத்தில் இரவில் காதல் களியாட்டங்களில் மெய்மறந்து, மதவுண்ட வண்டுகள் போல மயங்கிக் கிடந்தது யாரென்று தெரிந்தது.

மன்னவரின் கண்கள் கோபத்தால் நெருப்பு போல் விளங்கியது. புருவங்கள் நெறித்தன. என்ன செய்வதென்று அரசனுக்குத் தோற்றவில்லை.

கொஞ்ச நாளில் அரசாளப்போகும் அரசகுமாரன், ஓர் அடிமையிடம் காதல்கொண்டானே என்றல்ல இப்பொழுது கடல்போல பொங்கிவந்த இச்சினம். தனக்குப் போட்டியாக தன் மகனே தோன்றினனே என்று தான் அந்த ஆத்திரம். வேறு யாராகவாவது இருப்பின் தான் சக்ரவர்த்தி என்ற ஹோதாவில், அவனை அச்சுறுத்தலாம், நாடு கடத்தலாம், சிறையிடலாம், அன்றேல் சிரச்சேதமும் செய்திடலாம். ஆனல் தான் பெற்ற, நாளைக்குப் பட்டத்திற்கு வரவிருக்கும், பிரஜைகளின் அன்பிற்கு பாத்திரமான மைந்தனை யாது செய்ய இயலும்? ஆகவே அரசன் செயலற்று, ஆனல் கோபம் தணியுருமலிருந்தான்.

அக்கிழவயதில் அனுர்கலியைப்போன்ற அழகு பிம்பத்தை யாரும் அவனுக்குத் தர முன்வரமாட்டார்கள். ஏதோ அனுர்கலி தனது அடிமையாயிற்றே, தன்வயப்படுத்திக் கொள்ளலாம் என்று கருதியிருந்தான் காமப் பித்துக்கொண்ட காவலன். ஆனல் அவன் ஒன்று நினைக்க, 'அல்லா' வொன்று நினைத்தார்.

அந்நிலையில் அரண்மனையில் இருந்தோர் யாரும் அவனை யணுகி சமாதானம் செய்ய முன்வரவில்லை. அரண்மனையில் தமாஷ் பேர்

வழியும், அக்பரின் நெருங்கிய நண்பனுமான ராஜா பிர்பால், சிறிது தைரியங்கொண்டு அரசனையணுகினன். இவ்வளவு வயதான காலத்தில், யௌவனப் பருவத்தின் இச்சைகளை வைத்துக்கொள்வது நன்றுயில்லையென்றும், யுக்தவயதினர்களான ஸலீமையும், அனுரையுமே ஜோடியாக்குவது சிறந்தது என்றும், ஏற்றது என்றும், எவ்வளவோ எடுத்துரைத்தும், மன்னன் மனம் மாறவில்லை. வேறு வழியில்லை. என்ன செய்வது! அனுரையும், ஸலீமையும், சிலகாலம் பிரித்துவைப்பது நன்றென நவின்றான் தோழன் பிர்பால். அதை உத்தமமான யோசனை என ஆமோதித்தான் அக்பர். அன்றே அனுரை லாகூர் கோட்டைக்குத் தக்க காவலுடன் கொண்டுசெல்ல ஆணையுமிட்டான். இப்போதுதான் அவன் மனம் நிம்மதியுற்றது. பின்னல் வரப்போவதையறிந்தானு என்ன மொகலாயன்?

காதலியின் வரவை எதிர்பார்த்து, எதிர்பார்த்து, கதலி விருக்ஷத்தினடியில் பளிங்கு மேடையில் வீற்றிருந்த இளவரசனின் கண்கள் பூத்துப்போய்விட்டன. 'என் அவள் வரவில்லை? வர சம்மதித்துத்தானே தலையசைத்தாள். அல்லது சம்மதமின்றி அசக்கிய அசைப்பா அது? இதில் ஏதோ தவறு நடந்திருக்கிறது' என்று கருதி நெடுநேரம் காத்திருந்த ஸலீமுக்கு, நண்பன் நஸீம், அனுர் லாகூர் கோட்டைக்குக் கொண்டு போகப்பட்ட விஷயத்தை வெளியிட்டதும், குபீரென்று மொகலாய ரத்தம் கொதித்தெழுந்தது. சீரிய நாகம்போல் எழுந்தான். கோபம் அவனுக்குக் கட்டுக்கடங்காமல் வந்துவிட்டது. 'அனுரைக் காப்பாற்ற, மீட்க நாம் போயாகவேண்டும் நண்பா. அவளைக் கொலை செய்தால், என்னுயிருள்ளளவும், பழி வாங்கியே தீருவேன். தக்க ஏற்பாடுகள் செய்' என்று கர்ச்சித்தான்.

சந்தோஷப்ரியனை ஸலீமுக்கு நண்பர்கள் அனேகம். ஒவ்வொரு வேலைக்காரனும் இளவரசனிடம் விஸ்வாசத்துடனிருந்தான். ஸலீமுக்கு உயிரையும் கொடுக்க எத்தனையோ பேர் சித்தமாகவிருந்தனர். அவ்வளவுபேரும் இப்பொழுது கைவிட்டுவிடுவார்களா ? அதிலும் அக்பர் செய்தது அநியாயமென்று அறிந்தபிறகு. அவர்களின் தைரியத்தினுலேயே இளவரசன் லாகூரையடைந்தான்.

தந்தைக்கு எதிராக பகிரங்கமாகக் கலகம் செய்யத் தலைப்பட்டான் ஸலீம். அவனுக்கு உதவியாக இருந்தது ஒரு சேனு சமுத்திரம்.

5

லாகூர் கோட்டையை கலகக்காரர்கள் முற்றுகையிட்டனர். காதல் நோயால் தகிக்கப்படுபவர்களுக்கு, அதிலும் காதலி ஆபத்தில் சிக்குண்டிருக்கும் சமயத்தில் உணவு செல்லுமா? உறக்கம்தான் வருமா? தனது நண்பனுடனும் மற்றும் சேனைத்தலைவர்களோடும் தனது கூடாரத்தில் கூடி ஆலோசனை செய்தான் ஸலீம் இராப்பகலாக. வெறும் முற்றுகையில் பிரயோஜனமில்லை என்ற முடிவுக்கு வந்தனர். கலகம் அதிகமாகவாக அரசன் அனுரின் உயிருக்கே உலைவைத்தாலும் வைத்துவிடுவான் என்று சந்தேகித்தனர். அதனுல் கோட்டையைத் தகர்த்து உள்ளே பிரவேசிப்பதென தீர்மானித்தனர். மறுநாளே தீவிரமான போர் துவக்குவதென நிச்சயிக்கப்பட்டது.

சற்றுநேரம் பொறுத்து ஒரு ஒற்றன் வந்தான். ஒற்றன் கூறிய கூற்று இளவரசனைத் திகைக்கச்செய்தது. இப்படியும் ஒரு ராஜ்பத்தில் நீதி உண்டா என்று சீறினுன். அந்தக் கணமே கோட்டையைப் பிடித்தாகவேண்டும், இல்லையேல் அனுரை உயிருடன் காண்பதரிது என்று விளங்கியது. நாளைத்துவக்க நினைத்த போரை அன்றே, அக்கணமே துவக்க ஆக்ஞாபித்தான். பித்தனைப்போலத் திரிந்தான். கோட்டை எப்போது பிடிபடும் என்ற கவலை அவன் முகத்தில் தோய்ந்து போயிற்று. கண்கள் கோவைப் பழமென சிவந்து கோபாக்கினியைக் கக்கியது. அப்பொழுது அவனுக்கு வேறு ஒன்றும் லக்ஷியமில்லை. கோட்டையைப் பிடித்தாகவேண்டும். அங்குமிங்கும் திரிந்து சேனு வீரர்களுக்கு உற்சாகமூட்டி கோட்டையைத் தாக்க ஏற்பாடு செய்தான். போரும் துவங்கியது.

6

கைகளிலும், கால்களிலும் விலங்கிடப்பட்டு உருக்குலைந்து காராக் கிருகத்தில் கவனிப்பாரற்றுக் கிடந்தாள் ரதிபோன்ற அனுர்கலி. இரண்டு சிவந்த கைகளிலும் வளையல்கள் நிறைந்து கை யாடும்போது 'கலகல' என்று அழகிய சப்தத்தை உண்டாக்கிய அதே பட்டுபோன்ற கைகளில் அவளாலேயே

தூக்க முடியாத இரும்பு விலங்குகள். இராக் காலங்களில் அவைகள் உராயும்போது ஏற்படும் சப்தம் அவளை நடுக்குறச் செய்தது. டில்லியிலிருந்த போது இளவரசரைச் சந்திப்பதற்காக நிமிஷத்திற்கொரு அலங்காரம் செயதுகொண்டாள். இப்போது யாரைப் பார்க்கவேண்டும் அவள்? அவளைத்தான் சிறைகாப்போரையும், சிறையதிகாரியையும் தவிர யார் பார்க்க வரப்போகிறார்கள்? தலையிலே வண்டுபோன்ற கருத்த மயிர் அலங்கோலமாய்க் கிடந்தது. ஆனால் அப்போதும் அவள் முகத்தில் சிரிப்பு தவழ்ந்தவண்ணம்தானிருந்தது.

சிறைக் கதவு திறக்கப்படும் சப்தம். அனார்கலிக்கு எதற்காகத் திறக்கிறார்கள் என்று தெரியும். ஏனெனில் அது உணவு கொண்டு வரும் சமயமல்ல. 'தாங்களோ இளவரசர், இன்னும் சிறிது காலத்தில் ஹிந்துஸ்தானத்தின் சக்கரவர்த்தியாக விளங்கப் போகிறவர். நானோ தங்களிடம் ஊழியம் செய்யும் அடிமை. தங்களிடம் நான் காதல் கொண்டது நியாயமாகுமா? தாங்கள் என்னை மணக்க, சக்ரவர்த்தி சம்மதிப்பாரா? ஒரு நாளும் சம்மதிக்கமாட்டார். அதனால் நான் கொண்ட காதல் நியாயமற்றதுதானே. ஆதலால் எனது வாழ்நாளை வீணாக்காமல் எனக்குகந்த மணாளனை வரித்துவிட்டேன். மணமும் செய்துகொண்டுவிட்டேன். தங்கள் முன்னிலையிலிருந்துகொண்டு, தங்கள் வாழ்க்கைக்கு இடையூறுயிராமல் எனது தாய்நாடு, பாரசீகம், செல்கிறேன். அடியாளை மறந்து விடவும்' என்று இத்தகைய கடிதம் ஒன்றைச் சிறையதிகாரிகள் எழுதச் சொல்வார்கள். கல்யாணம் செய்துகொண்டு எங்காவது கண்காணா தேசம் செல்லச் சொல்வார்கள். பல நாட்களாகத் தெரிந்த விஷயம்தான். இன்றைக்கும் அதைத்தான் சொல்ல வருகிறார்கள். அத்தகைய கடிதத்தை, அனாரை எழுதிக் கொடுக்கச் செய்து, அதில் கூறியவண்ணம் நடக்கவும் கட்டளையிட்டால் எழுதித்தரத் துணிவாளா, இளவரசர் ஸலீமை உயிருக்குயிராய்க் காதலிக்கும் அனார்?

இந்தத் துரதிர்ஷ்டம் பிடித்த நாட்டிலே காதல்கொண்டோம், காதல்கொண்ட இருவரும் மணந்து இன்பமாக வாழ்ந்தோம் என்று கிடையாதே. இளவரசனானால் என்ன? ஏன் அவன்மேல் நான் காதல் கொள்ளக் கூடாது? என்று கருதினாள் அனார். நான் அடிமைதான். அடிமையின் காதலுக்கும், அரசகுமாரியின் காதலுக்கும் ஏதாவது வித்யாசமுண்டா என்ன? காதல் என்பது எல்லோருக்கும் ஒன்றுதானே. அரசனும், அரசியும்; அரசகுமாரனும், அரசகுமாரியும்; பணக்காரனும், பணக்காரியும்; ஏழையும், ஏழையும்; பிச்சைக்காரனும், பிச்சைக்காரியும்; ஆண்டியும், ஆண்டிச்சியும்தான் காதல்கொள்ள வேண்டுமென்று ஏதாவது நியதியுண்டா? அங்ஙனமில்லையெனில் பாருங்களேன்! இளவரசன்மேல் காதல்கொண்டதற்காக அனார்கலி படும் கொடிய தண்டனையை.

ஆனால் இளவரசன் தன்னை மீட்கப் போர் புரிகிறான், அவனும் தன்னைக் கைவிடவில்லையென்பதொன்றுதான் அனாருக்குச் சற்று ஆறுதலளித்தது. ஆனால் தன்னையென்னவோ இளவரசனால் தப்புவிக்கமுடியப்போவதில்லை. அவர் கோட்டையைப் பிடிக்குமுன் இங்குள்ள அதிகாரிகள், இல்லை கொலையாளிகள், தன்னை உயிருடன் விட்டுவைக்க மாட்டார்களென நிச்சயமாகக் கண்டுகொண்டாள் அனார். வீணாக இயலாத காரியத்தில் இறங்கித்

ஆப்டோன் ப்ளாக்குகளும்

அழகான கலர் ப்ளாக்குகளும்

செய்யுமிடம்!

எம். ஸி. அப்பாசாமிசெட்டி & கோ.,

14, ஜோன்ஸ் தெருவு, மண்ணடி, மதராஸ்.

தந்தையை விரோதித்துக்கொள்வதில் என்ன லாபம்? விதி, அவ்வளவுதான். அடுத்த பிறவியிலாவது கணவனும் மனைவியுமாக வாழ 'அல்லா' அருள்புரியவேண்டுமென்று அனார் பிரார்த்தித்தாள்.

சிறையின் கதவு திறக்கப்பட்டதும், சிறையதிகாரி உள்ளே நுழைந்தான். வழக்கம் போல 'அம்மா திரிக் கடிதம் எழுதிவிட்டு, மணம் செய்துகொண்டு ஓடிப் போவதாகக் கூறுகிறாயா?' என்று கேட்டான். அழுத்தம் திருத்தமாக 'முடியாது' என்றாள்.

மற்ற நாட்களில் அவள் அவ்விதம் கூறியதும் அதிகாரி பேசாமல் போய்விடுவான். ஆனால் இன்று அவள் அவ்வாறு கூறியதைக் கேட்டதும், 'என்னைத் தொடர்ந்து வா' என்ற உத்தரவைப் பிறப்பித்து முன்னால் நடந்தான்.

'எங்கு அழைத்துச் செல்கிறாய்?' என்று கேட்க வாயெடுத்தாள் அனார். அதற்குள் அதிகாரியின் தூணை யொத்த கைகளையும், மீசையையும், இரக்கமற்ற கொடூரப் பார்வையையும் கண்டதும் பெட்டிப் பாம்பு போலாய் விட்டாள். கேட்க நா எழவில்லை. பேசாமல் அவனைத் தொடர்ந்து சென்றாள். சிறையைத் தாண்டிச் சிறிது தூரம் சென்றதும் சிப்பாய்கள் அவளைச் சூழ்ந்துகொண்டனர். 'உள்ளங்கை நெல்லிக்கனி போல்' வெட்ட வெளிச்சமாய் விட்டது, தன்னை எங்கே கடத்திச் செல்கின்றனர் என்று அனாருக்கு.

அனாரைக் கடத்திச் சென்ற அதிகாரி, கோட்டைச் சுவரின் வெடிப்பு ஒன்றின் நடுவில் நிறுத்தினான். அவளுக்குத் சிக்ஷை விதிப்பதற்காகவே உண்டாக்கப்பட்ட பிளவு அது. அவ்வளவுதான். அவளைச் சுற்றிலும் கற்கள் அடுக்கப்பட்டு உயிருடனேயே அவளை வைத்து ஸமாதி கட்ட ஆரம்பித்தனர். கீர்த்தி வாய்ந்த நீதி வழங்குவதில் வல்லவன் என்ற பெயர் பெற்ற மொகலாய மன்னன் அக்பர், பொறுமையின் காரணமாய் அனாருக்கு விதித்த, சரித்திரத்திலேயே கண்டிராத, கேட்டிராத கொடுந்தண்டனை அது. புற்றுப் போல வளர ஆரம்பித்துவிட்டது சமாதி. தற்கால சினிமாவில் தந்திரக் காட்சியின் உதவியால் கட்டடங்கள் கட்டுவதைக் காட்டுகிறார்களே அவ்வளவு துரிதமாகக் கட்டினார்கள் அனாரைச் சுற்றி. இடுப்பு வரையில் வந்துவிட்டது; கழுத்தையும் எட்டிப் பார்த்துவிட்டது. இன்னுமொரு கல் பாக்கி அனாரின் ஆவியை அள்ளிப்போக. சிறைபதிகாரி, இல்லை கொலையாளி, மறுபடியும் கடைசி முறையாக ஒரு சந்தர்ப்பம் அளித்தான், அனார் உயிர் பிழைத்துப்போக. அதனைப் பயன்படுத்திக்கொள்ளக் காதலே பெரிது, சாதலே சிறந்தது எனக் கருதிய அனார் இசையவில்லை. உண்மைக் காதலின் முன் உயிரைத் திரணமாக மதித்தாள் அனார்கலி.

கடைசிக் கல்லும் அடுக்கப்பட்டுவிட்டது. ஒரு பெரிய இடிபோன்ற பீரங்கிச் சப்தம். ஆம், கலகச்சேனை கோட்டைவாயிலைத் தகர்த்தெறிந்த சப்தம்தான் அது. கோட்டையில் முதலில் நுழைந்தது இளவரசர் ஸலீம்தான். அவனைப் பின்பற்றினர், அவனது உற்ற தோழர்களும், நன்றியுள்ள பணியாளரும்.

இளவரசரிடம் உயிரையே வைத்திருந்த ஒற்றனொருவன், அனார்கலி அடக்கம் செய்யப்பட்ட இடத்தைக் காட்டினான்.

ஆம், காதலுக்காக மனிதன் தன் சக்திக்கு மீறிய காரியத்தைச் செய்வது இயற்கைதானெனில், ஸலீம் செய்தது ஆச்சர்யமல்ல. விட்டான் காலால் ஒரு உதை இளவரசன். அனாரைச் சுற்றிக் கட்டிய கல் கட்டிடம் சிதறுண்டது.

அனார், மூச்சுத் திணறியிருந்த அவள், சாய்ந்தாள். தன்னிரு கைகளாலும் தாங்கிப் பிடித்துக்கொண்டான் அவள் காதலன். சிறிது ஜலம் கொண்டு காதலியின் முகத்தைத் துடைத்தான். கமலம் போன்ற கண்களைத் திறந்து பார்த்தாள். 'நாதா' என்றது அவளது பவளவாய்.

'அனார், பிரியே' என்றான் இளவரசன். அதைச் செவி மடுத்ததும், கண்களை நிரந்தரமாக மூடிக்கொண்டாள் அனார். தனது காதலன் தன்னை மீட்டான், அவனது அழகிய கரங்களிலேயே தான் உயிர் துறக்கிறாள் என்ற எண்ணத்தினால்தானோ என்னவோ அவளது சந்திரபிம்ப வதனத்தில் அவளுடன் பிறந்த புன்னகை தவழ்ந்த வண்ணமிருந்தது.

7

பிடிக்கவந்த பறவையைப் பிடித்தும் பறந்து போய்விட்டது. கரையற்ற துக்கத்தில் ஆழ்ந்துபோனான் இளவரசன். அவன் கண்

டானு வருங்காலத்தை. மறுபடியும் காதல் ஏற்படப்போகிறது, தனது குடியைத் தடுத்து தன்னை நல்வழிக்குக் கொண்டுவரப்போகிருள் அவனது காதலி நூர்ஜஹான, 'உலகஜோதி' எனக் கனவிலும் அவன் கருதவில்லை.

இவ்வளவு கஷ்டங்களுக்குள்ளாகி, லாகூர் கோட்டையை வசப்படுத்தின காரியம் முடிந்துவிட்டது. தனது ஆப்த நண்பர்களுக்கெல்லாம் விடைகொடுத்தனுப்பினன். இனி பிதாவைப் பகைத்துக்கொள்வதில் பலன் என்ன? ஆகையால் பணிந்தான்.

அழுக்காறுகொண்டு அக்பர் செய்த செயலுக்காக, ஒருவருக்கும் பயன்படாமல் இந்நாட்டையே சபித்தவண்ணம் சென்றது ஒரு உயிர். அதுதான் மிச்சம்.

தனக்குப்பிறகு முடிசூடப்போகும் மைந்தனை மன்னிக்காமல் யாது செய்ய இயலும் முதுமையெய்திய மொகலாய மன்னன்?

மன்னவன் மன்னித்தாலும், அவன் செய்த கொடூரமான, இரக்கமற்ற கொலையை, மகன் மன்னித்தானு? அதுதான் கிடையாது. அரு மைக்காதலி, அனூர்கலியையிழந்த துக்கத்தை மறக்க மதுவைக் கைக்கொண்டான். தன வெஞ்சினத்தை யாற்றிக்கொள்ளச் சமயத்தை எதிர்நோக்கியிருந்தான். சமயமும் வாய்த்தது. பகையைத் தீர்த்துக்கொண்டான், அபுல்பேஸல் கொலையில் சம்பந்தப்பட்டு.

அபுல்பேஸலைக் கொன்று பழிக்குப்பழி வாங்கினுலும், அவனது காதலி அனூர்கலி உயிர்பெற்று வந்தாளா? இல்லையே! ஒரு வேளை நூர்ஜஹான் வடிவத்தில் சக்ரவர்த்தி ஜிஹாங்கிருக்குத் தோற்றமளித்தாளோ யாதோ? யார் கண்டனர்?

218540

மேதாஸ்

'சுந்தரி எலிக்ஸர்'

ஸ்திரீகளின் சூதக சம்பந்தமான வியாதிகளுக்கு சிறந்த டானிக்

ஆயுர்வேத முறைப்படி தயார் செய்தது.

பிரபல டாக்டர்களின் மதிப்பைப் பெற்றது.

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

தயாரிப்பவர்கள்:— **K. S. மேதா & கோ., மதராஸ்.**

ஹைதராபாத் ஏஜண்டு:—

ஸெண்ட்ரல் மெடிகல் ஸ்டோர்ஸ்,

ஸெகண்டராபாத்.

இதயம் அறியா உலகம்

[கே. சுந்தரம்மாள்]

●

9

மேகத்தின் மாசு மறுவின்றி நீலவானில் பௌர்ணமி சந்திரன், நக்ஷத்திரக்கூட்டத்துடன் உலக விநோதத்தைப்பார்க்கப் பவனி வந்துகொண்டிருந்தான். அந்த நிலவின் தோற்றத்தினால் உலகமே ஆனந்தமயம் என்று, அதை உண்மையாக அனுபவிப்பவர்கள் நினைப்பார்கள். அந்த நிலவில் மாடி வராந்தாவில் ஒரு சோபாவில், சுமதி, கமலா, பிரதிபா மூவரும் உட்கார்ந்துகொண்டு ஆனந்தமாகச் சிரித்துப் பேசிக்கொண்டிருந்தார்கள். சுமதி கமலாவைப் பார்த்து, 'கமலா! நீங்கள் இருவரும் இவ்வளவு ஏற்பாடும் எவ்விதம் செய்துமுடித்தீர்கள்? எல்லோர் மனதையும் எவ்விதம் மாற்றினீர்கள்? கல்யாணத்தைத் திருப்பதியில் சுவாமி ஸன்னிதியில் நடத்திவிட்டீர்களே! என்ன அன்பு! என்ன குணம். வியக்கத்தக்கதே.'

"பிரதிபையின் கபடமற்ற குணத்தின் விசேஷ அன்பு யாவர் மனதையும் வசீகரித்தது. மற்ற விஷயங்கள் எல்லாம் என் போலீஸ் இன்ஸ்பெக்டர் அதிகாரத்தின் மஹிமையே. இன்னொரு விஷயம் கேட்டாயா சுமதி? தாலி கட்டியானதும் சுவாமிக்கு அர்ச்சனை செய்து தீபாராதனை நடக்கும்பொழுது, சுவாமி மேலிருந்து புஷ்பங்கள் உதிர்ந்தன. தீபத்தில் சுடர் தெறித்தது. பட்டாச்சாரியார் சொன்னார் 'அம்மா இத் தம்பதிகள் பொருத்தமானவர்களே. நீடூழி வாழ்வார்கள். பெருமாள் நல்ல சகுனம் காட்டினார். இக்கல்யாணத்தில் பரம திருப்தி அவருக்கு' என்றார்."

"கமலா! அவருக்கு விஷயந்தெரியாதல்லவா? பிரதிபையைக் 'கன்னிப்பெண்' என்று தானே நினைத்தார்கள். உண்மையிலே, மணப்பந்தலில் எவ்வளவு சிறியவளாகத் தோற்றம் அளித்தாள்" என்றாள்.

"பிரதிபா, ஒரு விஷயம் சொல்லுகிறேன். வருத்தப்படாதே. எல்லாம் இன்ஸ்பெக்டரின் தந்திரமே. ஹாஸ்டலின் தலைவிகளுக்குத்தக்க ருஜு காட்டி ஒருவர் உதவியில்லாமல், வாசவன் பொறுப்பிலேயே, உன்னைப் படிக்கச் சேர்க்க அவரால் முடியும். ஆனால் ஆதிமுதலே அவர் வாசவனும், பிரதிபையும், கல்யாணம் செய்துகொண்டால் என்ன என்று சொல்லுவார். நான் கண்டித்து வருவேன். சமயம் கிடைத்ததும், தம் எண்ணத்தைப் பூர்த்திசெய்துவிட்டார். எல்லாம் அவர் தந்திரத்தாலேயே நடந்தது. அதனால்தான் இக் கல்யாணம் அநுசிதமென்றால், கலியுகவாதராகிய அப்பெருமாள் 'தடுக்கட்டுமே' என்று திருப்பதியில் கல்யாணம் ஏற்படுத்தினார். உண்மையைச் சொன்னால் ஆக்ஷேபிப்பார்கள். இவ்வூரில் நம்மைக் கண்டவர் யார்? உலகம் பொய்யை நம்பும், உண்மைக்கு இடந்தராது. சாயங்காலம்கூட ஏதோ விஷயம் கொஞ்சம் தெரிந்துவிட்டதுபோலிருக்கிறது. பட்டாச்சாரி, டிரஸ்டி முதலியவர்கள் 'இப்படிச் செய்யலாமா' என்று கேட்டார்களாம். 'இதில் தப்பிதமொன்றுமில்லை. தெய்வ சன்னிதி யாவருக்கும் பொது. நீங்கள் வருத்தப்படவேண்டிய நியாயமே இல்லை' என்று வெள்ளையப்பனைக் கையில்வைத்ததும், 'மிகவும் சரி. உங்களைப்போன்றவர்கள் தைரியமாகச் செய்தால்தான் யாவரும் பின்பற்றுவார்கள்' என்றார்களாம். வைதிகப் பிராம்மணர்களுக்குக் கைநிறையத் தட்சிணை. என் பேசப்போகிறாய்? உலகமே பணத்தின் மேல்தான் இருக்கிறது. அது இருந்தாலும், போலீஸ் உத்யோகம் இருந்தாலும், சரி. என்னவேண்டுமானாலும் செய்யலாம். என்று அவர்கள் செய்த ஸ்தோத்திரமும், ஆசீர்வாதமும் நமக்கு மூன்று ஜன்மங்களுக்குக்காணும்" என்றாள்.

"அதெல்லாம் சரி, என்னை ஏன் மூன்று நாள் உன் வீட்டிலேயே சிறை வைத்தாற் போல் ஒருவர் கண்ணிலும் படாமல் வைத்திருந்தாய்? அதைச் சொல்லு."

“காரியம் நிறைவேறிவிட்டால் பிறகு கவலையில்லை, அதுவரை. ஒரு சமயம் உன்னிடம் இதைப்பற்றி ஏதாவது சொல்லி, நீ கடலை நோக்கிக் கம்பி நீட்டினால் என்ன செய்வது? அதனால்தான் அண்ணாகூட உன்னைப் பார்க்கக்கூடாது என்று சொல்லிவிட்டேன்.”

“கமலா! ஏது, நீ யாவரிடத்தும் சர்வாதிகாரம் செலுத்தியிருக்கிறாய். பிரதிபா! சர்வாதிகாரிக்கு வந்தனம் பண்ணு! மகாராணி வந்தனம்” என்றாள். மூவரும் தாங்க முடியாமல் சிரித்தார்கள்.

“பிரதிபா! இப்பொழுது நாம் மூவரும் சமநிலையிலிருக்கிறோம் என்பதை நினைக்க எவ்வளவு ஆனந்தமாக இருக்கிறது. என்னதான் படித்து நீ மேன்மையடைந்தாலும் உன் விஷயத்தில் ஒரு குறையிருப்பதாகவே தோன்றும்” என்றாள் சுமதி.

“குறையெல்லாம் நிவர்த்தியாகிவிட்டதல்லவா?” என்று இரண்டு கைகளாலும், இரண்டு பக்கத்திலும் உட்கார்ந்திருக்கும் சுமதி, கமலா இருவர் முதுகிலும் ஒரு தட்டுத்தட்டி, இருவர் கழுத்திலும் கைகளைப் போட்டுக்கொண்டு, “ஒரு விஷயம், நாம் மூவரும் பிரியாமல் இவ்வூரிலேயே இருக்கும் பாக்கியம் ஏற்பட்டதே, அதுவே எனக்குப் பரமானந்தமாக இருக்கிறது” என்றாள் பிரதிபா.

“அதுவும் உன் அன்பின் விசேஷந்தான். பிரதிபா, இன்று உன் மாமியார் உன்னைப் பற்றி எல்லோரிடத்திலும் புகழ்ந்து பேசிப் பேசி வாய் வலித்திருக்குமென்று நினைக்கிறேன்.”

“ஆமாம், எனக்கு என்னவோ பயமாகத்தானிருந்தது. அவர் இவ்வளவு அன்பாக இருப்பார் என்று நான் கனவிலும் நினைக்கவில்லை. நான் ஏதோ நினைத்துச் செய்ய, அது ஒன்றாக முடிந்ததனால் எனக்கு ஒன்றும் தெரியவில்லை. வேறு வழியும் புலப்படவில்லை. அதனால் நீங்கள் எது சொன்னாலும் அதன்படியே நடந்து வந்தேனே தவிர, கமலா! உன் அம்மாவிடத்தில் எனக்கு மிகவும் பயமாக இருந்தது. என்னவெல்லாம் சொல்வாரோ, என் முகத்தில் விழிக்கவே சம்மதிக்கமாட்டார் என்றே நினைத்தேன். ஆனால் முகூர்த்தம் ஆன பிறகு தனிமையில் உன் அம்மாவிற்கு நமஸ்காரம் செய்தபொழுது, எனக்கு என்னவோ செய்தது. சட்டென என்னை அணைத்துக்கொண்டு, ‘பிரதிபா, உன்னை நாட்டுப் பெண்ணாக அடைந்தது என் பூர்வஜன்ம பலன்தான். என்னவோ ஆராயாமல் உளறிவிட்டேன். அதையெல்லாம் மனதில் வைத்துக்கொள்ளாதே’ என்றார். அதற்கு உன் அண்ணா, ‘அம்மா, நீ அன்று அவ்விதம் கடிந்து கொண்டதினால்தான் இன்று இந்நிலைமை ஏற்பட்டது. தாயார் எப்பொழுதும் எது செய்தாலும் அது குழந்தைகளுக்கு நன்மையாகவே ஏற்பட்டு விடுகிறது. எங்களுக்கு வருத்தமே இல்லை. அன்று, ஒரு நாள் உன்னுடன் பிரதிபை தங்கவேண்டுமென்று கேட்டாய். இப்பொழுது என்றுமே உன்னுடன் இருப்பாள்’ என்று சொன்னார். என்ன ஆச்சரியம் உலகத்தின் போக்கு? அது மாத்திரமா? என் அத்தை என்னைச் சபிப்பாள், முன் சொன்னபடி காறித் துப்புவாள் என்று நினைத்தேன். அவள், ‘பிரதிபா, உன்னைப்பற்றின கவலைகளெல்லாம் விட்டதடியம்மா! அன்றே உன் அப்பாவுக்கு இந்தக் கல்யாணத்தில்தான் இஷ்டம். அவன் மனம் போலவே முடிந்தது. இனிமேல் உன்னைப்பற்றி எவரும் தாறுமாறாகப் பேசமாட்டார்கள். ஒரே சொல்லில் உன் விஷயத்திற்கு மங்களம் பாடி விடுவார்கள்’ என்றாள். எனக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. பழைய அத்தைதானா? அவள் தேகத்தில் ஏதாவது வேறு ஆவி புகுந்துகொண்டிருக்கிறதா? என்று நினைக்கும்படி இருந்தது. என் மாறுதலுக்கு அத்தைதான் மூல காரணம். சிலசமயம் கெடுதல் என்று நினைத்துச் செய்யும் காரியம் நன்மையாகவே முடிந்து விடுகிறது. என்ன கமலா, எனக்குக் கூட கொஞ்சம் உலக விவகாரம் தெரிந்துவிட்டதல்லவா?’ என்றாள்.

“ஆஹா! இப்பொழுது முழுவதும் மாறிவிட்டாய்; நீ புது மனுஷி; நிறைய வளையல் போட்டுக் கொள்ளலாம்; குங்குமம் இட்டுக் கொள்ளலாம். இனிமேல் ஒருவரும் உன் ஜோலிக்கு வரமாட்டார்கள்” என்றாள்.

“கமலா, உன் அம்மாவுக்கு என்ன தந்திரம் செய்தாய்?” என்றாள் சுமதி.

“முதலில் நாங்கள் இந்தக் கல்யாணப் பேச்சை எடுக்கும்போது கோபம் கொண்டாள், திட்டினாள், அழுதாள். என்னை வந்து நமஸ்காரம் பண்ணினால் ‘மகாராஜியாக இரு’ என்று எப்படிச் சொல்லுவேன் என்று தர்க்கம் செய்தாள். நான், அண்ணா அவளிடம்

பேசும்படியான சந்தர்ப்பமே ஏற்படாமல் செய்திருந்தேன். முடிவாக, நானும் இன்ஸ் பெக்டர் அவர்களும், 'நீ இந்தக் கல்யாணத் திற்குச் சம்மதிக்காமல் போனால், அவர்கள் இருவரையும் வடக்கே வெகு தூரம் அனுப்பி விடுவோம். நீ பிறகு பிள்ளையின் நினைப்பை யே விட்டுவிடவேண்டும்' என்று சொல்லி விட்டு வந்துவிட்டோம். பிறகு உன் அத்தை அம்மா இருவரும் பேசிக்கொண்டார்கள் போலிருக்கிறது. நாலுநாள் முன்னதாக என் னிடம் வந்து, 'பிரதிபையை விட நல்ல பெண் கிடைக்கப் போகிறதா? இருந்தாலும், ஒரே பிள்ளைக்கு அனாதைபோல் கல்யாணம் செய்ய வேண்டியிருக்கிறதே' என்றாள். 'வாயை மூடிக்கொண்டிரு. யார் நம்மைக் கண்டவர் கள்? அவளுக்குப்பணம் இருக்கிறது. என்னைத் தவிர உனக்கு ஐந்து பெண்கள் இருக்கிறார் கள். பார்ப்பவர்களுக்கு வித்தியாசம் தெரியா மலிருக்கும்படி நானும் சுமதியும் ஏற்பாடு செய்துவிடுகிறோம்' என்று சொல்லிவிட் டேன். பிறகு தடையில்லை. உன்னை எவ்வ ளவு தடவை 'மகாராஜியாக இரு' என்று வாழ்த்தினாள். எல்லாம் காலத்தின் கோலம்'' என்றாள் கமலா.

''எல்லாம் சரிதான். உன் அண்ணா மாத் திரம் என்னிடம் பேசவேயில்லை. ஏன்! பார்ப் பதுகூட இல்லை. வெளியாருக்குப் பிரியம் போல் தோன்றுமே தவிர, அந்தரங்கத்தில் வெறுப்பேயிருக்கிறது. இவ்விஷயம் எனக் குக் கலவரமாகவே இருக்கிறது. என் பாவம் என்னுடன்தான்'' என்றாள்.

''ஐயோ, பைத்தியமே. கடைசியாக நாம் ஆஸ்பத்திரியில் பேசும்பொழுது எதிரில்வந்து ஆனந்தம்'' என்று சொல்லவில்லையா? என் றாள்.

''அதைச் சொல்லிவிட்டு நிற்காமல் போய் விட்டாரே. நானும் வீட்டிற்கு வந்தபிறகு, ஒரு தடவையாவது அவரைப் பார்த்து, மன தின் முடிவைத் தெரிந்துகொள்ளவேண்டும் என்று நினைத்தேன். ஆனால் மாலை போடும் சமயத்தில் தான் பார்க்கமுடிந்தது. எல்லாம் உன்வேலைதானே?''

''இந்தா! என்னைக் கோபித்துக் கொள்ளா தே, உன் நன்மைக்குத்தான செய்தேன். இனிமேல் ஓயாமல் பேசிக்கொண்டிருங்கள். நான் தடுக்கப் போவதில்லை'' என்று சிரித்துக் கொண்டே கூறினாள். சுமதியும் கூடச்சேர்ந்து சிரித்தாள்.

''போடி! நீங்கள் என்னைப் பரிகாசம் செய் கிறீர்கள். எப்படியானால் என்ன! இனிமேல் பேசுவதற்கு உன் அனுமதி வேண்டுமாக்கும். பழைய நிலைமையே நல்லதென்று தோன்று கிறது. இனிமேல் அது எப்படி வரும்?'' என்று அவர்கள் தோளின்மீது இருந்த தன் கைகளை எடுத்துவிட்டு முகத்தைத் திருப் பிக்கொண்டாள்.

''என்னடி வருத்தப்படுகிறாய்? உன்னைச் சந் தோஷமாகவைப்பதற்குக் கமலா என்ன பாடு பட்டிருக்கிறாள்? நீ அவளைக் கோபித்துக் கொள்கிறாயே? இனிமேல்தான் சந்தோஷ வாழ்க்கையின் முதல் படியில் காலை வைக்கப் போகிறாய். படிப்பு ஒரு மாதிரிதான். உன் அன்பு மயமான சிச்ருஷையால், மாமியார், கணவன் இவர்களின் மனதைக் கவரவேண் டும். படிப்பு, இல்லறம், இரண்டையும் சீர் தூக்கிப் பார்த்தாயானால் பதி சிச்ருஷையே மேலென்று அறிவாய். சந்தோஷமாக இரு. உன்மேல் அவருக்கு யாதொரு வருத்தமில்லை. நீ பழைய ஞாபகங்களை மறந்து இரு'' என்று அவள் முகத்தைத் திருப்பினாள்.

''நீ ஏண்டி கவலைப்படுகிறாய். இன்னும் பத்துநாள் போனால் அவள் நமக்கு ஸமா தானம் சொல்லுவாள். இப்பொழுது அப் படித்தான் இருக்கும். என்னை அவள் என்ன வேண்டுமானாலும் சொல்லட்டும்'' என்றாள்.

''கமலா! என்மேல் கோபமா? நான் ஏதோ அவசரபுத்தியால் சொல்லிவிட்டேன். மன் னித்துவிடு. உன்னைப்போல் அன்புள்ளவர்கள் யாரிருக்கிறார்கள்? இனி நீ சொல்வதைத் தட்டவேமாட்டேன்.''

''அப்படி நான் சொல்லுவதைத் தட்டாமல் நடப்பதானால், 'அடுத்த வருஷம் என்னை அத்தை' என்று கூப்பிட ஒரு ஆள் தோன்ற வேண்டும்'' என்று சொல்லிவிட்டுச் சுமதியும் கமலாவும் சிரித்தார்கள்.

''ஐயோ! போடி, என்னடி கண்டபடியெல் லாம் கேலி பண்ணுகிறாய்'' என்று கமலாவின் மடியில் முகத்தைப் புதைத்துக்கொண்டாள்.

''அவள் முகத்தைத் தடவிக்கொண்டே, ஐயோ பாவம், அவளை ஒன்றும் சொல்லா தேடி சுமதி'' என்றாள்.

"ஏது? கமலா! மெள்ள என்னைச் சாட்டுகிறாய்? பிரதிபா! எழுந்திரு. என்னைப் பார். நாம் இனிமேல் ஒருவருக்கொருவர் இப்படியாக எவ்வளவோ பேசவேண்டும். நீ கோபங்கொள்ளக்கூடாது" என்றாள்.

"சுமதி! வா போவோம். அகாலமாகிவிட்டால் குழந்தைகளுக்குப் பால் கொடுக்கக்கூடாது. பிறகு நமக்குச் 'சிவராத்திரி' ஆய்விடும்" என்று எழுந்திருந்தாள். சுமதியும், பிரதிபையும் கூட எழுந்திருந்தார்கள்.

"பிரதிபா! நீ இவ்விடமே இரு. நாங்கள் போய் வந்துவிடுவோம். தற்சமயம் இந்த வால்களெல்லாம் உனக்கில்லை" என்றாள் கமலா.

"இல்லை, நானும் வருகிறேன்" என்றாள் பிரதிபா.

"வேண்டாம். நீ இரு. நாங்கள் இதோ வந்துவிடுவோம். உனக்கு நிலவென்றால் வெகு பிரியமல்லவா? அதைப்பார்த்து தனி ஆனந்தப்படு" என்று அவளை உட்காரவைத்து அவள் முகவாய்க்கட்டையைப் பிடித்துக்கொண்டு, "பிரதிபா! சமத்தாகவும், சந்தோஷமாகவும் நடந்துகொள்" என்று சொல்லி, அவள் நெற்றியில் அன்புடன் முத்தமிட்டாள் சுமதி.

அவள் கையைப் பிடித்துக்கொண்டு, "சந்தோஷமாக இரு" என்று முதுகில் தட்டினாள் கமலா.

பிறகு இருவரும் வந்துவிட்டார்கள்.

தனிமையில் விடப்பட்ட பிரதிபா சந்திரனைப் பார்த்தவண்ணமே உட்கார்ந்திருந்தாள். நம் வாழ்க்கையில் எவ்வளவு மாறுதல்கள்? "கிருஷ்ணா! எல்லாம் உன் திருவிளையாடல்களே" என்று கண்களை மூடிப் பழையபடி கிருஷ்ணத்யானம் செய்தாள். ஆனால் முன்போல நினைக்காமல், வாசவனின் புன்சிரிப்பு முகமே தோன்றிற்று. 'இது என்ன? அந்நிலைமையில், பரமாத்மா முன் நின்றார். இந்நிலைமையில் பதியே முன் நிற்கிறார்' என்று எண்ணமிட்டுக்கொண்டிருக்கையில், காலடிச் சத்தம் கேட்டுக் கண்ணைத் திறந்தாள். வாசவன் வந்து, தரையில் துண்டைவிரித்து அதில் உட்கார்ந்தான்.

உடனே எழுந்துநின்று, "தரையில் உட்காருவானேன்? சோபாவில் உட்காரக்கூடாதா?" என்று கேட்டாள்.

அவளைப் பாராமலே, "சுமதியும், கமலாவும் அவர்கள் வரும்வரையில் என்னை இங்கிருக்கச் சொன்னார்கள், வந்தேன். நான் உன் பக்கத்தில் வந்து உட்காருவானேன்; நீ சமுத்திரத்தில் விழுவானேன்; நான் உன்னைச் சுமந்து திரிவானேன்; ஆஸ்பத்திரிக்கு நஷ்டமேற்படுத்துவானேன். வேண்டாம் அம்மா வேண்டாம்" என்றான்.

"அப்படியானால் இக்கல்யாணம் அவசியமில்லையே?"

"அதென்னவோ எனக்குத்தெரியாது."

"பின் யாருக்குத்தெரியும்?"

"ஏன்? உனக்குத்தான் தெரியும். நீ அன்று ஆஸ்பத்திரியில், 'என் உரிமையை ஒருவரே ஏற்றுக்கொள்ளின் கல்யாணத்திற்கு உடன்படுகிறேன்' என்று சொன்னாய். அந்த உரிமையை நானே ஏற்றுக்கொண்டேன். இனி யாரும் உன் படிப்பைப்பற்றித் தடை செய்ய முடியாது. இதோபார் ஹாஸ்டலில் உன்னைக் கொண்டுவந்து விடும்படி தலைவி கடிதம் எழுதியிருக்கிறாள். என் விஷயத்திற்காக மேலே எழுதிக்கேட்டார்களாம், உத்தரவு கிடைத்துவிட்டதாம். அதாவது பழைய நிலைமைக்கே. இப்பொழுது யாதொரு தடையும் சொல்லமாட்டார்கள். இந்தா! இந்தக் கவரைப் பார்" என்று வீசி எறிந்தான்.

அதை எடுக்காமல் "இவைகளெல்லாம் இனிமேல் எனக்கு வேண்டாம். நான் செய்ததை மன்னித்து விடுங்கள்" என்று நமஸ்கரித்தாள்.

மறுபக்கம் பார்த்துக் கொண்டே, "யார் யாரை மன்னிப்பது? நானும் உன்னிடம் மன்னிப்புக் கேட்கவேண்டியதே. போனது போகட்டும், இனி நடக்கவேண்டியதைப் பேசுவோம். நீ ஹாஸ்டலிலிருந்து படிக்கிறாயா? வீட்டிலிருந்து பள்ளிக்கூடம் போகிறாயா? உன் இஷ்டத்தைச் சொல்லு. நாம் கலியாணம் செய்துகொண்டதின் கருத்தை நிறைவேற்ற வேண்டாமா? உன்னுடன் குடும்பம் நடத்தவா நான் செய்துகொண்டேன்?"

"ஆனால் எனக்கு மன்னிப்பே கிடையாதா? அன்பெல்லாம் போய்விட்டதா?" என்றாள் பதட்டத்துடன்.

"அன்பு போகவில்லை; ஆனால் நீ நினைக்கும் அன்பல்ல; பரிசுத்தமான உனது நன்மையை நாடும் அன்பு."

"என் நன்மை என்பதுதான் என்ன?" என்ருள். கோபத்தினுல் அவள் முகம் கடுகடுத்தது.

"அதுதான் உன் கல்வி"

"கல்வியைக் கொண்டு உடைப்பில் போடுங்கள். இப்பொழுது எனக்கு அது தேவையில்லை."

வந்த சிரிப்பை அடக்கிக் கொண்டு, புன் சிரிப்புடன் எழுந்து நின்று, "பின் உன் தேவைதான் என்ன?"

"உங்களுடைய மன்னிப்பு."

"மன்னிப்பு, மன்னிப்பு என்கிருயே, அன்றைய தினமே இந்த ஞாபகம் இருந்திருந்தால் இன்று இது அவசியமாக இருக்காதே. மன்னிப்பு இல்லையானுல் இப்பொழுது நான் உன் முன்னுல் வந்திருக்கும் சந்தர்ப்பமே ஏற்பட்டிருக்காது."

"பின் ஏன் அன்றையிலிருந்து இதுவரை என்னிடம் பேசவே இல்லை? கல்யாணம் என்பதைப்பற்றி நாமிருவரும் கேட்டுப் பேசிக் கொள்ளச் சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொள்ளவில்லை. காரியம் என்னவோ நடந்து விட்டது. எனக்கு அமைதியே இல்லை."

"அது கமலாவின் உத்தரவு. புருஷர்களெல்லாம் சுயநலக்காரர்கள், நயவஞ்சகர்கள் என்பது உன் தீர்மானமாய்விட்டது. இருந்தாலும் நான் கூடியமட்டும் சுயநலத்தைக் கருதாமல் உன் நன்மைக்குத்தான் கல்யாணம் செய்து கொண்டேன். இதுவரை நாம் இருந்தது போல் என்றும் இருக்க முடியும். இனிமேல் உன் விஷயத்தில் தலையிட யாருக்கும் உரிமையில்லை. எனக்கு வேண்டியது அவ்வளவே. உன் அதிர்ஷ்டம், இன்று எனக்கு வேலை உயர்வு, சம்பள ப்ரமோஷன் எல்லாம் கிடைத்திருக்கின்றன. அம்மா உன்னை இனிமேல் 'தேவி' என்று கொண்டாடுவாள். கவலையின்றி, உனக்கு யாதொரு குறைவுமில்லாமல், எவ்வளவு வேண்டுமானுலும் உன்னைப் படிப்பிக்கிறேன். உயர்ந்த வித்வானைக் கொண்டு வீணை கற்பிக்க ஏற்பாடு செய்கிறேன்" என்ருன்.

அவளுக்கு அடக்க முடியாத கோபம் உண்டாயிற்று. நிமிர்ந்து அவனை வெறிக்கப் பார்த்தாள். உங்களுடைய முடிவான தீர்மானம் இதுதானு? என்று கேட்டாள்.

அவள் கோபத்தையும், உள்ளத்தின் தன்மையையும் அறிந்துகொண்டாலும், "ஆமாம், இதைத்தவிர வேறு என்னசெய்வது உனக்குத் தெரிந்தால் சொல்லு. அதன்படி செய்வோம். எனக்கு உன்னிடத்தில் பயமாகவே இருக்கிறது. ஏனென்ருல், பக்கத்தில் சமுத்திரம் இருக்கிறது" என்ருன்.

இப்போது கோபம் துக்கமாய் மாறியது. கண்ணில் மலமலவென்று ஜலம் வந்துவிட்டது. பதில் பேசாமல் நின்ருள்.

"ஏன் அழுகிருய். உன் மனம் என்னவென்று தெரிந்தால், அதன்படி நடக்கிறேன்" என்ருன்.

"என் மனம் மண்ணுங்கட்டி எந்த விஷயமானுலும், எனக்கு என்றைக்கும் ஏமாற்றம் தான். எனக்கு ஒன்றும் வேண்டாம். என் விதி" என்று அருகிலிருந்த சோபாவின பக்கத்தில் முழங்காலிட்டு உட்கார்ந்து இரண்டு கையாலும் முகத்தை மூடி, குப்புறச்சாய்ந்து அழலானுள்.

அவளைப் பலவந்தமாகத்தூக்கி, சோபாவில் உட்காரவைத்து, தானும் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு அவள் புடைவைத்தலைப்பினுல் கண்ணைத் துடைத்துவிட்டு, "வீணுக ஏன் வருத்தப்படுகிருய்? உன் சொற்படி நடக்கிறேனென்றுதான் சொல்லுகிறேனே" என்ருன்.

"நான் பள்ளிக்கூடம்போய்ப் படிக்கமாட்டேன்."

"பின் என்ன செய்யப்போகிருய்?"

"கமலா, சமதியைப்போல் இருக்கவேண்டும்" என்று சொல்லிக்கொண்டே கடைக்கண்ணுல் பார்த்தாள். அவன் புன்சிரிப்புடன் இவளையே பார்த்துக்கொண்டிருந்தான். இவள் சொல்லி முடிந்ததும்,

"எனக்கும் அதேதான் மிகவும் இஷ்டம்."

"பின் ஏன் இவ்வளவு நாழி என்னவெல்லாமோ சொல்லி என்னை வருத்தினீர்கள்."

"அதுவா இவ்வளவு நாளாய் உனக்குக் கோபம் வந்தே பார்த்ததில்லை. இந்த நிலவில், கோபத்தினுல் சிவந்த உன் முகம் எவ்வளவு அழகாக இருக்கும் என்று பார்க்கவே. நான் நினைத்ததுபோல் நீ மிகவும் அழகாகவே

இருந்தாய் ஒன்று. இரண்டாவது, அன்றைய தினம் ஒருவாறு நான் துன்பத்திலுழன்று உன்னிடத்தில் யாவும்சொல்லி உன் சம்மதம் தெரிந்தே நான் என் மனதை இஷ்டப்படி விட்டதற்கு நீயும் உடன்பட்டு, என் மனம் நிம்மதியாயிருக்கும் என்று நான் நினைக்க, நீ பொழுதுவிடிவதற்குள் என்னைத் துன்பத்திற்குள்ளாக்கினாய். உனக்கு மனமில்லாவிட்டால் என்னிடம் சொல்லக்கூடாதா? ஏமாற்றமடைந்த நான் பட்ட துன்பமும், மன வேதனையும், எப்படியிருக்குமென்று உனக்குத் தெரியவேண்டுமென்று பழிக்குப்பழியாகவே சொன்னேன்'' என்று சொல்லிக்கொண்டு தன் கால்மேல் கால்போட்டு அவள் பக்கம் திரும்பினாற்போல் உட்கார்ந்து, இடது முழங்கையைச் சோபாவின் சாய்மானத்தில் ஊன்றிக்கையால் தலையைத் தாங்கிக்கொண்டு வலது கையால் அவள் கையைப்பிடித்து, "என்மேல் கோபமா?'' என்றான்.

வெட்கத்தால் கன்னம் சிவந்தது. புன்சிரிப்புடன் அவனை நிமிர்ந்துபார்த்தாள்.

"கோபமெல்லாம்போய்விட்டதா?'' என்று குனிந்தான்.

அதற்கும் பேசாமல் சிரித்துக்கொண்டிருந்தாள்.

"பிரதிபா! நீ பள்ளிக்கூடம் போகவேண்டாம். ஆனால் நான் சொல்லுகிறபடி செய்ய வேண்டும். பெண்களுக்கு மூன்றாவது பாரம் சர்ட்டிபிகேட்டாவது கையிலிருக்கவேண்டும் என்பது என் தீர்மானம். என் மூத்த ஸஹோதரிகள் தவிர மற்றப்படி என் பொறுப்பில் வளர்ந்த தங்கைகளை மூன்றாவது பாரம் முடியப் படிக்கவைத்திருக்கிறேன். கடைசி தங்கை விமலா S. S. L C. பாஸ் செய்திருக்கிறாள். உனக்கும் கையில் ஏதாவது சர்டிபிகேட்டு இருக்கவேண்டும். அதனால் நீ 'கேம்பிரிட்ஜ்' பரீக்ஷைக்குப் படித்தாயானால் எனக்கு மிகவும் சந்தோஷமாக இருக்கும்'' என்றான் அமைதியாக.

"நீங்கள் சொல்கிறபடி செய்கிறேன். ஆனால் எனக்குச் சிறு வயது முதல் புருஷன், மாமியார் முதலியவர்களுடன் சச்சரவு இல்லாமல் அன்பாகவும், பணிவாகவும் குடும்ப பாரம் ஏற்று நடத்தவேண்டும் என்றெல்லாம் நினைத்திருந்தேன். துவக்கும் முன்னமேயே அதற்கு முற்றுப்புள்ளி வைத்தாய்விட்டது. பிறகு அதை அறவே மறந்து, வேறு வழியில் மனம் செலுத்தினேன். இப்பொழுது உங்கள் செய்கையினால் பழைய அபிலாஷை தோன்றுகிறது. அதனால்தான் பள்ளிக்கூடம் செல்ல மறுத்தேன்.''

"அப்படிப்பினால் உன் எண்ணத்திற்கு யாதொரு இடைஞ்சலும் ஏற்படாது. இரவில் நான் சொல்லிக்கொடுக்கிறேன். அதற்காக இப்பொழுது ஒருவரும் வம்பு பேச முடியாது. மத்தியான வேளைகளில் நீயே படிக்கலாம். வீட்டு வேலைக்கு ஆள் வைத்து விடுகிறேன். மாமியாருக்கு வேண்டிய சிச்ருஷை செய்யலாம். உனக்குப் படிக்க முடியாத அசௌகரியங்கள் ஏற்படும் பொழுது நிறுத்திக் கொள்ளலாம்'' என்று சிரித்த வண்ணமே கூறினான்.

"ஐயோ! உங்களுக்குக்கூடக் கேலியாக இருக்கிறது'' என்று முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

"அம்மா! நினைத்தபொழுதெல்லாம் கோபம் எங்கிருந்து வருகிறது'' என்று அவள் முகத்தைத் திருப்பி, "கேலியென்ன? நடப்பதைச் சொன்னேன். வேண்டாம். நான் சொன்னபடி செய்யலாமல்லவா?'' என்றான்.

"தங்கள் சித்தம் என் பாக்யம்'' என்று சொல்லிக்கொண்டே தன் முகத்தைப் பிடித்திருந்த அவன் கையை எடுத்துத் தன் இரு கைகளுக்குள்ளும் வைத்துப் பிடித்துக்கொண்டாள். வாஸவன் தன் தலையைத் தாங்கிக் கொண்டிருந்த கையை எடுத்து, பிரதிபையின் கழுத்தில் போட்டு அருகில் இழுத்து முகத்தோடு முகம் வைத்துக்கொண்டான். இருவரும் கொஞ்சநேரம் தங்களை மறந்து, மௌனத்தில் ஆழ்ந்தனர்

சற்றுக் கையைத்தளர்த்தி "பிரதிபா!'' என்றான்.

"ஏன்?'' என்று கேட்பதுபோல் அவனை அன்புடன் பார்த்தாள்.

"இந்த நிலவில், உன்னுடைய கானமும் சேர்ந்தால் எப்படியிருக்கும்?''

"இவ்விடத்தில். இந்த வேளையிலா? ஐயோ! கேலிக்கிடமாகும்''

"வேண்டாம். ஹாலுக்குள் சென்று இருவரும் வீணை வாசிப்போம். நாம் வீணை

வாசித்து எவ்வளவு நாளாகிறது. வா!" என்று எழுந்திருந்து அவள் எதிரில் நின்றான்.

"அப்படியே செய்வோம்" என்று சிரித்தாள்.

"ஏன் சிரிக்கிறாய்?"

"இல்லை. பேச்சில் மயக்குவதில் வெகு சமர்த்தர்கள் புருஷர்கள். ஏமாந்தவர்கள் பேதையர்களே" என்றாள்.

"என்ன ஏமாந்தாய்? இப்பொழுது என்ன வந்துவிட்டது?"

"நானே ஒருகால் ஏதாவது விவாதம் ஏற்பட்டால், 'நீதானே குடும்பபாரத்தை ஏற்க வேண்டும் என்று சொன்னாய்' என்று கேட்பதற்குத்தானே, உங்களுக்கு மிகவும் இஷ்டமாக இருக்கும். விஷயத்தை என் வாயினால் வரவேண்டும் என்றுதானே, இத்தந்திரமான சொற்களை வீசினீர்கள்" என்றாள்.

"ஆமாம். அதில் முழுவதும் என்னைப் பொறுத்ததல்ல. அன்றைய தினம் தேவியிடம் அபசாரப்பட்டதற்கு, தக்க தண்டனை கிடைத்துவிட்டபடியால், முன்கூட்டி ஜாக்கிரதைப்படுவது இயற்கைதானே" என்றான்.

"ஓஹோ! சரிதான்" என்று மேல் நோக்காகப் பார்த்துச் சிரித்தாள்.

அந்தப் பார்வையால் ஏற்பட்ட உணர்ச்சி தாங்காமல், அவள் இரு கைகளையும் தன் இரு கைகளிலும் கோத்துக்கொண்டு, "பிரபா! இப்பொழுது உலகம் உனக்கு எப்படித் தோன்றுகிறது"'

"ஏன்? ஆனந்தமாகத்தான் தோன்றுகிறது"

"எவ்வளவு கஷ்டங்களுக்கு மேல் இவ்வானந்தம்?"

"ஆமாம், நான் ஒரு ஆனந்தத்தை அடைய எண்ணினேன். உலகம், என் இதயம் அறியாமல் சொன்னதில், இன்னொரு வகையானந்தம் கிடைத்தது."

"ஏதோ, உன் அப்பாவின் ஆசீர்வாதத்தினால் இப்படி முடிந்தது. நீ சமுத்திரத்தில் விழுந்தவள், அப்படியே மூழ்கியிருந்தால்...?"

"ஒரு கஷ்டமுமில்லை. உங்களுக்கு விடுதலை, நிம்மதி. யாவருக்கும் சந்தோஷம். எதிர்ப்பின்றி உங்கள் விவாகமும் நடந்திருக்கும்."

"இன்னும் நீ என் ஹ்ருதயத்தை அறியவில்லை. நான் வெறும் பேடி என்று எண்ணியிருக்கிறாய். அப்படி நடந்திருக்குமானால் நானும் உன்னைப் பின்பற்றியிருப்பேன்."

"என் மேல் வருத்தப்படக்கூடாது. உலகத்தில் புருஷர்கள் மனைவி இறந்துவிட்டால், உலகத்தையே வெறுத்தவர்கள் போல் அந்தச் சமயம் இருக்கிறார்கள். பின் ஒரு மாதத்திற்குள்ளாகவே மறு மனைவியுடன் உல்லாஸமாகக் கிளம்பிவிடுகிறார்கள். நாம் நேரில் எவ்வளவு பார்த்திருக்கிறோம்! ஸ்திரீகளும் அப்படி இருக்கமாட்டார்களோ என்று கேட்கலாம். ஸ்திரீகளுக்கு அவ்வளவு துணிவு உண்டாகாதென்றே நினைக்கிறேன். ஆனால் அவர்களும் கட்டுப்பாடு என்பது ஒன்று இல்லாதிருக்குமானால் இப்படி நடப்பார்களோ, என்னவோ? உலகத்தின் கட்டுப்பாட்டிற்கு அடங்கியே நடக்கவேண்டுமென்பது அவர்கள் இயற்கையாய்விட்டது. ஆண்பிள்ளைகளுக்கு அப்படியில்லை. நினைத்தபடி நடக்கலாம். அப்படியிருக்கத் தாங்கள் என் விஷயத்தில் அன்புகாட்டி மேன்மை அடையச் செய்ய பாடுபட்டது உண்மை. ஆனால் என் கூட இருக்கவேண்டிய அவசியம் தங்களுக்கு இல்லையல்லவா?" என்றாள்.

"ஒரு சமயம் நீ மனைவியாக இருந்திருந்தால் நானும் நீ சொல்வதுபோல் செய்வேனோ, என்னவோ? ஆனால் என் லக்ஷ்யம் வேறு. அது சிதைந்து விட்டதால் என் ஹ்ருதயம் இடிந்துவிட்டது. அப்படிச் சிதைவுற்ற மனம் மானம், மரியாதை யாவற்றையும் மறந்து, வெறிபிடித்து, இஷ்டப்படிச் செய்யத் தூண்டிற்று. அன்று நீ சாகத் துணிந்திராவிடில், நாம் யாவரையும் ஏமாற்றிக் கண்காணாமல் செல்லத் தயாராயிருந்தோம். எதனால்? என் லக்ஷ்யத்தை உலகம் அறியாமல் பேசினதால். ஒருவர் சற்றுப் பிசகினால் அவரை நல்வழியில் திருத்தி, மேன்மைக்குக் கொண்டுவர நம்முடைய அன்பின் செய்கையாலும், சொல்லினாலும் அவரை, 'நீ குற்றம் செய்தாய்' என்று ஏசி ஒதுக்காமல், அவர் குற்றத்தை அவரே உணரும்படி செய்து, நல்வழியில் நடக்கச் செய்தால் அவருக்கு நன்மை. அதைவிட்டுப் பழைய குற்றங்களை வைத்துக்கொண்டு, அவர்கள் திருந்தி நடந்தாலும், அதையே சொல்லி, 'இனி நேராக நடக்க முடியாது' என்ற நிலைமைக்குக் கொண்டுவிடு

கிறார்கள் உலகத்தவர்கள். அதனால் சிலர் ‘எப்படிச் செய்தாலும் நமக்கு முன்னேற மார்க்கமில்லை’ என்று அச்சம் நீங்கி, மேலும் மேலும் அக்கிரமச் செயல்களுக்கே அடிமையாகிவிடுகிறார்கள். சிலர் உன்னைப்போல் உயிரையும் விடத் துணிந்துவிடுகிறார்கள். எத்தனை குடும்பங்கள் இதனால் சின்னாபின்னமாகச் சிதறியிருக்கின்றன. என்றுதான் உலகத்தவர் மனிதனின் உண்மையான ஹ்ருதயத்தை அறிவார்களோ?” என்றான்.

“ஏன்? இனிமேல் நீங்கள் இவ்விஷயத்தில் ஆராய்ச்சி செய்யலாமே. பேதையர்களைக் காக்க நீங்கள் பிரயத்தனப்பட்டால் நான், கமலா, சுமதி மூவரும் கூட உதவி செய்வோம்.”

“ஆமாம், நான் கூடியவரை முயற்சிசெய்து, சில இடங்களில் இந்த ஆச்ரமம், அந்த நிலயம் என்று வைத்து, சட்டம், பணம், சிபார்சு இவைகளினால் உலகத்திற்கு நன்மை செய்கிறார்கள். நாம் சட்டம், பணம் இவைகளைக் கவனிக்காமல், கஷ்டப்படுகிறவர்கள், பேதையர்கள், அநாதைகள் முதலிய யாவருக்கும், அவரவர்கள் சௌகரியப்படி, யாருக்கு எதில் நோக்கமேற்படுகிறதோ அவ்வழியே அவர்கள் முன்னேறும்படி செய்ய ஓர் ஸ்தாபனம் ஏற்படுத்துவோம். சேஷகிரி, ஸ்ரீனிவாசன் இருவரும் உதவி செய்வார்கள். நாம் அதற்கு என்ன பெயர் வைக்கலாம்?”

“இதயம் அறியா உலகம் என்று வைக்கலாம்.”

“ரைட்டோ!”

“யோசனை என்னவோ பலமாகத்தானிருக்கிறது. நடக்கவேண்டும்” என்று சிரித்துக் கொண்டே கூறினாள்.

அச்சமயம் அவன் தோற்றம் அவளுக்கு இன்னதென வர்ணிக்கமுடியாத இன்பஜோதியாகத் தோன்றிற்று.

“பிரதிபா! இந்தச் சமயம் எனக்கு ஏற்பட்டிருக்கும் நிம்மதியையும் ஆனந்தத்தையும் நான் எதிர்பார்க்கவே இல்லை” என்றான்.

“ஆமாம், என் அப்பா அன்றொரு நாள் இவ்வாழ்க்கையை எனக்களிப்பதாகக் கூறினார். நான் விதியின் விளைவை அறியாமல் மறுத்துக் கூறினேன். அவர் வருத்தமடைந்தார். இன்று என் வாழ்க்கையின் அமைதியைப் பார்க்க என் அப்பா இல்லையே” என்றாள். கண்களில் நீர் தளும்பிற்று. ஆனந்தக் கண்ணீரோ? அனுதாபக் கண்ணீரோ?

“பிரதிபா! இச்சமயம் உன் அப்பா நிச்சயம் நம்மைப் பார்த்துக் கொண்டிருப்பார். அன்பான ஆசியும் அளிப்பார். அவர் முடிவுக் காலத்தில், நம்மிருவர் கைகளையும் சேர்த்து வைத்தார். அது என்றைக்கும் பிரிக்க முடியாமல் செய்துவிட்டது” என்று சொல்லி, மனதிற்குள் ‘ஜகதீஷ், உன் விருப்பத்தையும் வாக்குறுதியையும் நிறைவேற்றிவிட்டேன்’ என்று நினைத்து, அவளைத் தன் அருகிலிழுத்துக்கொண்டான். ‘அசட்டுப் பெண்ணே’ என்று அன்று பரிகசித்த சந்திரனும், இன்று ‘புத்திசாலிப் பெண்ணே, மிகவும் நல்லது’ என்று சொல்வதுபோல் ஆகாய மத்தியிலே தோன்றிக் கொண்டிருந்தான்.

சுபம்!

முற்றிற்று.

ஒரு நந்தவனத்திலே

'சித்ரா'

நேற்று இருந்தார், இன்றைக்கு மறைந்து விட்டார் என்ற பெருமையை இவ்வுலகம் தாங்கி நிற்கிறது. இப்பெருமையைத்தான் வாழ்வின் தினசரி நாடகமுங் காட்டுகிறது.

மின்னி மறைகின்ற இந்நாடகக் காட்சிகளைக் காண்கின்றான் அறிவு மிகுந்த ஒரு மனிதன். இந்நாடகத்தின் சூத்திரக்காரன் யார்? பாத்திரங்கள் யார்? அப்பாத்திரங்களை நடிக்கிறவர்கள் யார்? என்ற கேள்விகள் மனத்தில் எழுகின்றன. கேள்விகள் சாதாரண கேள்விகளா? இல்லை. மனம் தடுமாறுகிறது; உள்ளந் தத்தளிக்கிறது. நாடகத்தின் சூட்சுமத்தை ஆராய அறிவு விரைகிறது.

உண்மையை நாடுகிறவன் மலைகள், ஆறுகள், காடுகள் இவைகளைக் கடந்து செல்லுகிறான்; சற்குருவைத் தேடுகிறான்; வெகு நாளாய்க் குரு தரிசனம் அளிக்கவில்லை. சோர்ந்து தள்ளாடி நிற்கும் தருணம் ஏதோ ஒரு தோற்றம் அவன் கண்முன் உலாவுகிறது. "அதோ அந்த மலைச் சரிவில் நான் இருக்கிறேன் வா" என்ற குரல் அழைப்பது போல் படுகிறது. சோர்ந்த உள்ளத்தில் ஒரு புதுக் களை பெய்கிறது. மங்கின கண்களில் ஒளி மீண்டும் வருகிறது. கனவு உண்மையாகிறது. சற்குரு தரிசனம் அளிக்கிறார்.

"அடியேன் உய்யும்வண்ணம் தூய நெறி காட்டவேண்டும்" என்று பக்தன் இறைஞ்சுகிறான்.

"நாம சங்கீர்த்தனை செய்யுங்கள், ஆண்டவனை மலர் கொண்டு அர்ச்சனை செய்யுங்கள். அவன் அருள் கிட்டும்" என்று சொல்லி அவர் மறைகிறார்.

சற்குருவின் பணியைத் தலைமேற்கொண்டு அப்பக்தன் நாம சங்கீர்த்தனம் செய்கிறான். ஆழமான ஏரியிலிருந்தும், கோரமான வனத்திலிருந்தும், விசாலமான மலைப்பிராந்தியங்களிலிருந்தும் புஷ்பங்களைத் தேடிக் கொண்டு வருகிறான். நாட்கள் வந்து போகின்றன.

"மனமொன்று நினைக்க, வாயொன்று சொல்ல, விழிகள் ஒன்று நாட, கைகள் ஒன்று செய்ய நான் பூஜை செய்கிறேன். எவ்வாறு அதை ஏற்றுக்கொள்ளுவாய் அப்பனே" என்று புலம்புகிறான் அவன்.

ஆனால் நாளுக்கு நாள் மனம் ஒருமுகப் படுகிறது; உள்ளத்திலே பகவானுடைய உருவம் படிகிறது; உள்ளமே அவன் உறைகின்ற கோயிலாக மாறுகிறது.

இயற்கை எழிலிலே திகழ்கின்ற ஒரு காலை. இளங்கதிர்களில் மலர்கள் அலர்ந்திருக்கின்றன. வண்டுகள் சிருஷ்டிகானத்தை நந்தவனத்தில் பாடுகின்றன. பக்தனின் மனத்தில் ஒரு தனி உணர்ச்சி எழுகிறது. மலர்களில் ஆண்டவனுடைய புன்னகையை அவன் காண்கிறான்.

நான் உனக்குப் பூஜைசெய்யேன். மலரிலே உன் மந்தஹாஸத்தைக் காண்கிறேன். முத்துப்போல பனித்திவலைகள் படிந்த மலர்களை எடுக்க என் மனம் இடந்தரவில்லை என்கிறான்.

கைகளைக்குவிக்க அவன் மனம் எண்ணுகிறது.

"வெளியிலே காட்சி அளிக்கிற உன்னை வணங்குகிறதா? அல்லது என் உள்ளத்தைக் கோயிலாகக்கொண்ட உன்னைத் தொழுகிறதா? நான் கும்பிடும்போது அரைக்கும்பிடாய் முடியுமே. நான் பூஜை செய்தல் முறையோ?" என்ற கேள்விகள் வருகின்றன.

பூஜை செய்ய மனமில்லை. எல்லாவற்றிலும் ஆண்டவன் ஒளி பாய்கிறதை அவன் கண்டுவிடுகிறான். மலரின் முறுவலிலும், காற்றின் இன்னிசையிலும், கடலின் கானத்திலும், சந்திர சூரியர்களின் ஒளிச்சிறப்பிலும் தாரகா கணங்களின் தாண்டவங்களிலும் பக்தன் அவனுடைய செயலை உணர்கிறான். இந்நிலையில் பூஜை நின்றுவிடுகிறது; பூஜையும் தேவையில்லை. அவனைக்கண்ட பேருவகையில் அவன் உள்ளந்தழைக்க, உணர்ச்சியோங்கப் பாடுகிறான்

> பண்ணேனுனக்கானபூசை; ஒருவடிவிலே
> பாவித்திறைஞ்ச வாங்கே
> பார்க்கின்ற மலரூடு நீயே யிருத்தியப்
> பனிமலரெடுக்க மனமும்
> நண்ணேன்; அலாமலிரு கைதான் குவிக்க
> வெனின்
> நாணுமென்னுள நிற்றி நீ;
> நான் கும்பிடும் போதரைக்கும்பிடாதலாலுன்
> பூஜை செய்யன் முறையோ?

தாயுமானவர்.

Edited and Published by N. R. Ramanujan B.A. and Printed by
N. Subramania Iyer at Sri Venkateswar Power Printing Works, Kumbakonam.

காவேரி

தென் இந்தியாவின்

உயர்ந்த

மாதப் பத்திரிகை

சந்தா விகிதம்.

		உள்நாடு	சிலோன்
வருடச் சந்தா	...	ரூ. 3 12 0	4 0 0
6 மாதம்	...	ரூ. 2 0 0	
தனிப்பிரதி	...	ரூ 0 5 0	35-சதம்

தபால் மூலம் தனிப் பிரதி வேண்டுவோர் தபால் செலவும் சேர்த்து அனுப்பவேண்டும்.

பிரதிநிதிகள் இல்லாத இடங்களில் ஏஜண்டுகள் தேவை.

ஏஜன்ஸி நிபந்தனை, விளம்பர விகிதம் முதலிய விஷயங்களுக்கு கீழ்க்கண்ட விலாஸத்திற்கு எழுதவும்.

தியாகராஜ ஸ்வாமிகளின் மூவர்ணப்படம் விலை அணா 1.

காவேரி ஆபீஸ்,
பெஸண்டு ரோடு,
கும்பகோணம்.

S. RANGASWAMI,
Managing Proprietor.

Regd. No. M. 4405. CAUVERI.

அநேக தங்க மெடல்களும்
நற்சாக்ஷிப்பத்திரங்களும் பெற்ற



"[illegible]"

சந்தனாதி தைலம்
அரைக்கீரை விதை தைலம்
கோகுல் கூந்தல் தைலம்

இவைகள் மூளைக்கு ளிர்ச்சியையும
கூந்தல் வளர்ச்சியையும் கொடுப்பதில்
நிகரற்றன.

T.S.R. & Co. PERFUMERS KUMBAKONAM

Sole Agents : MADRAS CITY

PUSHPAVANAM STORES,
TRIPLICANE, MADRAS.

Cover Page Printed at Dharmarao Printing Works, 14, Jones Street, Mannady, Madras.